Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU





முரசு – 03 திருவள்ளுவர் ஆண்டு 2044 மாசி 24 வெள்ளிக்கிழமை (08.03.2013) பக்கங்கள் 20 ஓசை – 159
















# ஜெனிவாவில் அமெரிக்கத் தீர்மானத்தை வலுவிழக்கச் செய்ய முயல்கிறது இந்தியா

(ஜெனிவா)

ஜெனிவா மனித உரிமைகள் பேரவைக்கூட்டத் தொடரில் அமெரிக்காவின் தீர்மானத்தை வலுவிழக்கச் செய்யும் முயற்சியில் புதுடில்லியின் இராஜதந்திரிகள் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர் என்று இணையத் தளங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

அமெரிக்கத் தீர்மானத்தின் காரணமாக இலங்கை அரசுக்கு இப்போது ஏற்பட்டிருக்கும் இராஜதந்திர நெருக்கடிக்கு இந்தியா கைகொடுத்து உதவுவது போன்ற நகர்வுகளைச் செய்தால் கொழும்பை தனது நிகழ்ச்சி நிரலுக்குள் கொண்டு வர முடியும் என்று புதுடில்லி கருதுகிறது.

இலங்கை விவகாரத்தில் இந்தியா தவிர்க்க முடியாத சக்தி. இலங்கை அரசாங்கம் யாருடன் நெருங்கிப்பழகினாலும், யாரின் உதவியைப் பெற்றாலும் இந்தியாவை தவிர்க்கவோ, புறக்கணிப்பதோ கடினம். இவ்வடிப்படையில் இந்தியா, இலங்கை மீதான தனது செல்வாக்கை உறுதிப்படுத்த வேண்டும். அதேநேரம் புதுடில்லி தமிழ்நாட்டு மக்களின் உணர்வுகளை மதிப்பதாக காட்டவும் வேண்டும். எனவேதான் இலங்கைக்கு எதிராக வலுவில்லாத, எவ்வச்சுறுத்தலும் இல்லாத தீர்மானம் ஒன்றை அமெரிக்கா கொண்டுவரும் பட்சத்தில் அதனை இந்தியா ஆதரிப்பதில் எப்பாதிப்பும் இல்லை என்று டில்லி கருதுகிறது. இவ்வாறான நிலைமை ஏற்படும்போது இந்தியாவினால் தமிழ்நாட்டு மக்களின் உணர்வுகளுக்கு மதிப்பளித்து இலங்கைக்கு எதிராக வாக்களித்ததாகவும்,



(19) ஆம் பக்கம் பார்க்க

# யாழ்ப்பாணம் நோக்கி சமாதான பாத யாத்திரை

## ஆரம்பித்து வைத்தார் ஜனாதிபதி

இலங்கையர் என்ற வகையில் இந்நாட்டுக்கும், உலகத்திற்கும் சமாதானத்தைப் பெற்றுக் கொடுக்க அணிதிரள்வோம் என்ற தொனிப்பொருளுடன் இளைஞர் சமாதானப் பாத யாத்திரை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையில் கதிர்காமம், கிரிவெஹர புனித பூமியில் நேற்று முன்தினம் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

ஜனாதிபதி செயலகம், இளைஞர்களுக்கான நாளை அமைப்பு, தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் “இரு வாபத்துவ முதல் தல் அரண வரை” அமைப்பு ஆகியன இணைந்து ஒழுங்கு செய்துள்ள யாழ்ப்பாணத்திற்கான இந்த சமாதான பாதயாத்திரை எதிர்வரும் ஏப்ரல் மாதம் 6 ஆம் திகதி யாழ்ப்பாணத்தைச் சென்றடையவிருக்கின்றது.

இந்த இளைஞர் பாதயாத்திரையில் இந்தியாவின் ஹிமாலயப் பிரதேசத்தைச் சேர்ந்த க்வால் வங்துர்க்பா என்ற பௌத்த மதத் தலைவரின் தலைமையில் 250 இற்கும் மேற்பட்ட தேரர்களும் பங்குபற்றியுள்ளனர். சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்களின் பங்குபற்றுதலுடன் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையில் கலை

(19) ஆம் பக்கம் பார்க்க

# மரக்கறி விலை திடீர் அதிகரிப்பு

(யாழ்ப்பாணம்)

காலம் தப்பிப்பெய்த கடும் மழையினால் காய்கறிகளின் விலை அதிகரித்துள்ளது. கடந்த திங்கட்கிழமை முதல் காலந்தப்பிய மழைவீழ்ச்சி யாழ். குடாநாட்டில் பெரும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது. இதன் ஒரு அங்கமாக மரக்கறி வகைகளின் விலையில் பாரியளவில் மாற்றம் ஏற்பட்டுள்ளதாக மரக்கறி வியாபாரிகள் தெரிவிக்கின்றனர்.

கத்தரி, பயிற்றை, பாவல், கீரை, பச்சை மிளகாய், தக்காளி என்பவற்றின் விலையில் சடுதியான மாற்றம் ஏற்பட்டுள்ளது. பச்சை மிளகாய் 300 ரூபாய், கத்தரி 300 ரூபா, பாவல் 400 ரூபா, பயிற்றை 240 ரூபா, கீரை 40 ரூபா, தக்காளி 200 ரூபா என விலைகள் முன்னரைவிட

(19) ஆம் பக்கம் பார்க்க

# முஸ்லிம்கள் மீது அச்சுறுத்தல் ஐ.நா. சபையில் முறையீடு

அச்சுறுத்தல்கள் தொடர்பில் முஸ்லிம்கள் ஐக்கிய நாடுகள் அமைப்பில் முறைப்பாடு செய்துள்ளனர். பொதுபலசேனா அமைப்பினால் முஸ்லிம்களுக்கு அச்சுறுத்தல் விடுக்கப்பட்டு வருவதாக முஸ்லிம் தமிழ் தேசியப் பேரவை முறைப்பாடு செய்துள்ளது. அடிப்படைவாத பௌத்தமதத் தேரர்கள் சட்டத்தை கையில் எடுத்துக் கொண்டுள்ளதாகவும், சட்டம் ஒழுங்கை பாதுகாக்க வேண்டியவர்கள் அதனை வேடிக்கை பார்ப்பதாகவும் குற்றம் சுமத்தியுள்ளது. விடுதலைப் புலிகள் தோற்கடிக்கப்பட்டுள்ள நிலையில் நாட்டில் தேசிய நல்லிணக்கத்தை ஏற்படுத்த முஸ்லிம்கள் அர்ப்பணிப்பு

(19) ஆம் பக்கம் பார்க்க

# இளைஞர் நாடாளுமன்றுக்கு மே மாதம் தேர்தல்

(கொழும்பு)

இரண்டாவது இளைஞர் நாடாளுமன்ற உறுப்பினர்களை தெரிவுசெய்வதற்கான தேர்தல் மே மாதத்தின் முதல் வாரத்தில் இடம்பெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. இதற்கான விண்ணப்பங்களை நாடு முழுவதிலும் உள்ள 335 பிரதேச செயலகங்களிலுள்ள இளைஞர் சேவைகள் அதிகாரியிடம் இருந்து பெற்றுக்கொள்ள முடியும் என தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் தலைவர் சட்டத்தரணி லலித் பியும் பெரேரா தெரிவித்தார்.

இளைஞர் சேவைகள் சம்மேளன பிரதேச மத்திய குழுவில் அங்கம் வகிக்கும் இளைஞர், யுவதிகளே இந்தத் தேர்தலில் போட்டியிட முடியும் என அவர் குறிப்பிட்டார். இந்த இரண்டாவது இளைஞர் நாடாளு

(19) ஆம் பக்கம் பார்க்க

# குற்றச்சாட்டுக்களுக்கு அரசு பதிலடி

## பரிந்துரைகள் முழுமையாக அமுல்

(கொழும்பு)

நல்லிணக்க ஆணைக்குழுவின் சிபார்சுகளை முழுமையாக நடைமுறைப்படுத்துவதற்கு அரசு நடவடிக்கை எடுத்துவருவதாக அமைச்சர் மகிந்த சமரசிங்க தெரிவித்துள்ளார். அரசாங்கம் தனக்கு சாதகமான விடயங்களை மட்டும் தேர்ந்து எடுத்து நடைமுறைப்படுத்துவதாக ஐ.நா. மனித உரிமை ஆணையாளர் நவநீதம்பிள்ளை தெரிவித்த குற்றச்சாட்டுக்களை அமைச்சர் முற்றாக மறுத்துரைத்தார். உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழுவின் பரிந்துரைகளை இலங்கை அரசாங்கம்

(19) ஆம் பக்கம் பார்க்க

# சிப்பி கடத்திய சீனப்பிரஜை கைது

சட்டவிரோதமாக ஒரு தொகை கடற்சிப்பிகளை வெளிநாட்டிற்கு கடத்துவதற்கு முற்பட்ட சீன பிரஜையொருவர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் கைதுசெய்யப்பட்டுள்ளார்.சுமார் 6 கிலோ கிராம் கடற்சிப்பிகளுடன் நேற்று முன்தினம் இரவு 10.30 அளவில் சந்தேகநபரைக் கைதுசெய்துள்ளதாக சுங்கப் பணிப்பாளர் வெல்ஸி காமினி குறிப்பிட்டார். விமான நிலைய சுங்க உயிர் பல்வகைத்தன்மை பிரிவு

(19) ஆம் பக்கம் பார்க்க

# யாழ். பல்கலையில் நீண்டகால சேவைக்கான விருது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் நீண்ட காலமாக சேவையாற்றியவர்களுக்கு விருதுகளை வழங்கி கௌரவிக்கும் வைபவம் இன்று பி.ப 1.30 மணியளவில் கைலாசபதி அரங்கத்தில் துணைவேந்தர் சிரேஷ்ட பேராசிரியர் வசந்தி அரசரட்ணத்தின் தலைமையில் நடைபெறவுள்ளது.

இன்று விருதுகள் பெறுபவர்களின் பெயர்கள் வருமாறு,

தகைசார் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை, தகைசார் பேராசிரியர் யா.இ.மகேஸ்வரன், முன்னாள் பேராசிரியர் ச.வை.பரமேஸ்வரன், தகைசார் பேராசிரியர் அ.சண்முகதாஸ், முன்னாள் பேராசிரியர் சு.பவானி, திருமதி ரா.கருணானந்தராஜா,

செல்வி ப.நடராஜா, திருமதி கி.இரவீந்திரா, தகைசார் பேராசிரியர் க.சிற்றம்பலம், முன்னாள் பேராசிரியர் இ.சிவச்சந்திரன், கலாநிதி க.சிவகுருநாதன், முன்னாள் பேராசிரியர் சி.சிவலிங்கராஜா, கலாநிதி திருமதி ஞான அமிர்தம் பவானி, திருமதி றோ. பரராஜசிங்கம் அமரர் பொ. மகிணன்,

அமரர் பேராசிரியர் சோ.கிருஷ்ணராஜா, அமரர் திருமதி சா.விக்கினராஜா, பேராசிரியர் இ.குமாரவடிவேல், பேராசிரியர் க.கந்தசாமி, பேராசிரியர் கா.குகபாலன், பேராசிரியர் க.இராமநாதன், பேராசிரியர் ச.சத்தியசீலன், பேராசிரியர் நா.ஞானகுமாரன், பேராசிரியர் திருமதி இ.கயிலைநாதன், திருமதி சோ. கிருஷ்ணகுமார், பேராசிரியர் செ.கிருஷ்ணராஜா, பேராசிரியர் பா.இராஜேஸ்வரன், பேராசிரியர் நா.சண்முகலிங்கம், பேராசிரியர் வே.ப.சிவநாதன், பேராசிரியர் க.தேவராஜா, பேராசிரியர் வசந்தி அரசரட்ணம்,

க.க.அருள்வேல், செல்வி க.அருளானந்தம், வைத்திய கலாநிதி து.குணராஜசிங்கம், கலாநிதி சி.மகேசன், பேராசிரியர் அ.வே. மணிவாசகர், கலாநிதி நா.வி.மு. நவரத்தினம், பேராசிரியர் ப.புஷ்பரட்ணம், திருமதி ச.இரவீந்திரன், திருமதி நா.செல்வநாயகம், வைத்திய கலாநிதி மி.சிறிகாந்தன், சி.சிறிசற்குணராஜா, பேராசிரியர் ம.வேதநாதன், திருமதி டொ.மனோரஞ்சன், க.அருளானந்தம், திருமதி ச.ஜெகதீசன், வெ.காந்தமூர்த்தி, க.நடராஜா, செ.பத்மநாதன், க.இரத்தினசபாபதி, வ.இரவிச்சந்திரன், மு.சின்னராசா, ந.தர்மகுலசிங்கம், இ.தெய்வேந்திரம்பிள்ளை, த.தில்லைநாதன், மு.யோகேந்திரன், திருமதி க.பிருந்தாபன், கு.கணேசலிங்கம், மு.கே.பாலகிருஷ்ணன்,

ப.ஜெயரட்ணம், இ.ஜெகதீசன், வி.கைலாயநாதன், பொ. கந்தசாமி, க.குமாரசாமி, மா.குமாரசிங்கம், செ.மகேந்திரன், சு.நாராயணமூர்த்தி, க.நரேந்திரன், சி.பழனித்துரை, ந.ரவீந்திரா, சி.இரவீந்திரநாதன், தெ.செல்வநாயகம், க.சண்முகநாதன், திருமதி சு.சிவகுமார், தி.சிவானந்தம், வே.சிவசுப்பிரமணியம், நா.தங்கராஜா, திருமதி கே.தங்கவேல், இ.துரைராஜசிங்கம், திருமதி க.உருத்திரசுந்தரம், செல்வி ப.விஜயரத்தினம், வ.அழகதுரை, ப.யோ. அஞ்சலோ, சி.அன்னலிங்கம், த.அருள்ராஜ், அ.அருள்செல்வரட்ணம், வ.சந்திரன், ச.காயாரோகணன், ம.ஜெகராஜா, க.கனகரட்ணம், த.கணேசு, க.கிருஷ்ணசாமி, திருமதி சொ.மகாசிவம், செ.யோ.மரியநாயகம், சு.முத்துலிங்கம், செ.நகுலேஸ்வரன்,

ஐ.நவரட்ணராஜா, க.இரகுநாதன், மு.இராஜரட்ணம், மா.சந்திரசேகரம், ப.டே.சற்குணராஜா, க.சீனியர், வி.செல்லத்துரை, சி.சண்முகலிங்கம், வி.சிவலிங்கம், மு.சிவபாலன், தெ.சிவபாதம், சி.ஸ்ரீஸ்கந்தராஜா, ம.தங்கநாதன், சி.தங்கராஜா, இ.செ.தயாபரன், எந்திரி சி.தயாபரன், சி. யோகேஸ்வரன், அமரர் அ.பாலச்சந்திரன், அமரர் கு.பாலசுப்பிரமணியம், அமரர் ப.பிருந்தாபன், அமரர் ம.இலங்கராஜா, அமரர் ச.சிதம்பரநடராஜா, அமரர் சு. குணரட்ணம், அமரர் ச.சபாரட்ணம், அமரர் அ.ப.செபமாலைமுத்து,

வி.சந்திரசேகரம், திருமதி ஜெ.தயானந்தன், வோ.சி.டேவிட், சி.கந்தையா, செ.குகநாதன், சா.குலசிங்கம், செ.குமாரசாமி, திருமதி ப.மகேந்திரன், க.நாகபாலசுப்பிரமணியம், ந.நித்தியானந்தராஜா, சு.வெ.ராஜ்குமார், ஐ.யோகராசா, வ.அன்ரனி, ம. அன்ரனி, சி.அருணகிரிநாதன், ச.பாலசிங்கம், செ.பாலசுப்பிரமணியம், சு.சந்திரசேகரம், சொ. டொன் பொஸ்கோ, க.ஞானேந்திரன், வே.ஜெகசோதிநாதன், திருமதி ச.ஜெயபாலசுந்தரம், யோ.ஜெயக்குமார், கெ.கே. ஜோன், கி.கமலேஸ்வரன்,


க.கந்தசாமி, ச.கந்தையா, மு.குழந்தைவேல், மே.மனோகரராஜன், ந.மோகனேஸ்வரன், சி.முருகையா, திருமதி ஜ.நாகஜெயக்குமாரன், க.நாகஜெயக்குமாரன், ஐ.நாகராஜா, திருமதி க.நித்தியானந்தன், திருமதி ர.பரமானந்தர், நா.இராஜரட்ணம், திருமதி ம.தங்கசாமி, ஐ.இராசரட்ணம், திருமதி ம.சபாநாதன், அ.சாமிநாதன், ஐ.கோ.சந்திரசேகரம், நா.செல்வலிங்கம், வ.சிவகுமாரன், திருமதி ம.சிவராஜா, ந.சிவசுப்பிரமணியம், திருமதி செ.சிறிதரன், க.தங்கராஜா, ஆ.பே.தங்கரத்தினம், வே.தர்மகுலசிங்கம், க.றோ. தவேந்திரன், சி.தில்லைநாதன், வே.தூயகுமரன், கி.வேலானந்தன்,

பொ.விமலானந்தன், ப. யோகேஸ்வரன், இ.அமிர்தலிங்கம், ஐ.ஆனந்தராஜா, அ.ஆறுமுகம், ந.பகீரதன், செல்வி அ.பாலசிங்கம், வ.பாலசிங்கம், ச.பாலசுப்பிரமணியம், க.பாலசுந்தரம், திருமதி வ.இளங்குமரன், சீ.ஞானசேகரம், மா.குணசேகரன், மா.இலக்கணகுமார், திருமதி இ.இந்திரகுமார், வே.ஜெயபாலசுந்தரம், நா.ஜெயச்சந்திரன், சி.ஜெயக்குமார், க.ஜெயந்திரன், சி.கலாராஜ், திருமதி இ.கலாராஜ், மா.காலிங்கராசா, க.கமலநாதன், க.கனகலிங்கம், ந.கந்தவேள், கா. கோகுலபாலன், சி.குலேஸ்வரராஜன், திருமதி சி.குமாரசாமி, க.குமரேஸ்வரன், செ.குணராசா, சீ.மகாலிங்கம், ம.மகாராஜா, செல்வி தி.மனோரஞ்சிதா, இ.மதிகரன்,

ந.மோகன்ராஜ், நீ.மயில்வாகனம், கி.நந்தகுமார், கி.நீதிராஜா, திருமதி கே.நித்தியானந்தராஜா, ப.பகீரதன், கி.பவளராஜா, மா.ராஜேந்திரம், மா.இராஜேந்திரம், ச.ரவிக்குமார், நெ.சபாநந்தர், நோ.சகாயநாதன், ந.சந்திரமூர்த்தி, க.சந்திரசேகரம், கோ.சத்தியகுமார், திருமதி ச.செல்வக்குமார்,

நா.சேகர், திருமதி செ.செல்வராஜா, இ.செல்வரட்ணம், க. செல்வரட்ணம், செ.செல்வரட்ணம், ந.செந்தில்குமரன், திருமதி க.செந்திநாதன், யோ.சிவஞானச்செல்வன், வே.சிவகுமாரன், அ. சிவானந்தம், திருமதி அ.சிவனேஸ்வரன், திருமதி ர.சோதிநாதன், க.சிறிபண்டாகரன், தி.சிறீதரன், திருமதி இ.சிறீதரன்,

க.சுதந்திரராஜா, அ.தனேஸ்வரன், சி.தங்கராஜா, க.தர்மராஜா, நா.தவராஜா, நா.[illegible]ராஜா, சி.தெய்வேந்திரா, பொ. தேவபாதம், வ.தேவராஜா, பி.திருக்குமரன், ச.திவ்வியரட்ணம், சி.உமாகரன், பொ.உதயகுமார், மா.உத்யகுமாரன், திருமதி வி.வேலுதாசன், மா.விஜயகுமார், திருமதி அ.விஜயகுமார், ந.விஜயரட்ணம், து.யோகேஸ்வரன்.




## நன்றியும் பாராட்டுக்களும்

காரைநகர் மருதபுரம் பகுதியில் வாழ்கின்ற
மக்களுக்கு வடக்கின் வசந்தம் மூலமாக
மின்சார விநியோகத்தை மேற்கொண்டு
எமது பிரதேசத்தை ஒளிமயமாக்கி
எமக்கு புத்துயிர் அளித்த
மாண்புமிகு அமைச்சர்
டக்ளஸ் தேவானந்தா
அவர்களுக்கும் மற்றும் ஈ.பி.டி.பி. யாழ்.
மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்
சில்வேஸ்திரி அலென்ரின் (உதயன்) மற்றும்
ஈ.பி.டி.பி. யாழ். மாவட்ட அமைப்பாளர்
க.கமலேந்திரன், எப்பொழுதும் எங்களுடன்
உறுதுணையாக இருந்து எமது
வாழ்வாதாரத்தை மேம்படுத்திக்கொண்டு
இருக்கின்ற ஈ.பி.டி.பி.யின் காரைநகர்
பிரதேச அமைப்பாளரும், காரைநகர் பிரதேச
சபையின் எதிர்க்கட்சித் தலைவருமான
வீ.கண்ணன் ஆகியோரின் சேவைகளைப்
பாராட்டி வாழ்த்துவதுடன் அவர்களுக்கு
நன்றிகளையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

காரைநகர் மருதபுரம் மக்கள்.

(C/2198)

# மண்டைதீவு பிரதேசத்தில் பொலிஸ் ரோந்து அவசியம்

## – மக்கள் கோரிக்கை

மண்டைதீவுப் பகுதியில் குற்றச் செயல்களைத் தடுக்கும் பொருட்டு பொலிஸார் இரவு நேரத்தில் ரோந்து நடவடிக்கையில் ஈடுபடவேண்டும் என்று அப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர்.

அண்மை நாட்களாக மண்டைதீவுப் பகுதியில் நடைபெற்ற சில சம்பவங்களை அடுத்தே பொலிஸாரின் இத்தகைய நடவடிக்கை மேற்கொள்ளவேண்டியதன் அவசியத்தை அப்பகுதி மக்கள் வலியுறுத்தியுள்ளனர்.

கடந்த செவ்வாய்க்கிழமை மண்டைதீவில் வீட்டு வளவினுள் வைக்கப்பட்டிருந்த கோழிக் கூடு ஒன்று அங்கிருந்து மாயமாகியுள்ளதாகத் தெரியவருகிறது. பகலில் வீட்டில் யாரும் இல்லாத சமயம் இந்தச் சம்பவம் நடைபெற்றுள்ளது. அத்துடன் கடந்த சில நாட்களுக்கு முன்னர் வீடு ஒன்றினுள் திருடுவதற்காகப் புகுந்த நபர் ஒருவர் வீட்டினுள் இருந்தவர்கள் விழித்துக்கொண்டதனால் அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளதாகவும் தெரியவருகிறது.

இவ்வாறு நடைபெறும் குற்றச்செயல்களைக் கட்டுப்படுத்தும் முகமாகவே அங்குள்ள பொலிஸார் இரவு நேரரோந்து சேவையை மேற்கொள்ள வேண்டும் என்று மக்கள் கோரியுள்ளனர். (பா)

# பெற்றோர்கள் பிள்ளைகளிடத்தில் நல்ல தொடர்பாடலை பேணவேண்டும்

## - முன்பள்ளி உதவிக்கல்விப் பணிப்பாளர் எஸ்.தில்லைநாதன்

(வடமராட்சி)

முன்பள்ளி மாணவர்களின் பிள்ளை நேயச் சூழலை முன்பள்ளிகளிலும், வீட்டிலும் உருவாக்கப்படல் வேண்டும்.

இன்று பல்வேறு சமூக சீரழிவுகள் இடம்பெற்று வருகின்றது. இதிலிருந்து பிள்ளைகளைப் பாதுகாப்பதற்கு பெற்றோர்கள் தீவிரகவனம் செலுத்த வேண்டும் என வடமராட்சி கல்வி வலய முன்பள்ளிகளின் உதவிக்கல்விப்பணிப்பாளர் எஸ்.தில்லைநாதன் தெரிவித்துள்ளார்.

தேசிய முன்பள்ளிப் பருவ அபிவிருத்தி வாரத்தினை முன்னிட்டு கரவெட்டி, பருத்தித்துறை, மருதங்கேணி ஆகிய பிரதேச செயலக பிரிவுகளில் முன்பள்ளி ஆசிரியர்களுக்கான விழிப்புணர்வுக் கருத்தரங்கு நிகழ்வில் வளவாளராகக் கலந்துகொண்டு விளக்கமளிக்கையில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

நவீன உலகில் முன்பள்ளிக் கல்வி முக்கியத்துவம் பெற்று வருகின்றது. எதிர்கால வாழ்க்கையை நிர்ணயிக்கின்ற பிள்ளைகளிடத்தே மறைந்திருக்கும் ஆற்றலை வெளிக்கொணர பெற்றோர்கள் சந்தர்ப்பங்களையும், வாய்ப்புக்களையும் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும்.

ஆன்மீக நெறிகளுக்கு முக்கியத்துவம் கொடுப்பது இன்றைய நிலையில் மிக அரிகிச் செல்கின்றது. அவற்றை வீட்டிலும் ஏற்படுத்த வேண்டும். ஒரு மனிதனை நெறிப்படுத்தி வாழ்வைப்பது சமய நெறிகளேயாகும்.

அறநெறிக் கல்வியைப் பிள்ளைகளிடத்தே கற்பிப்பதற்கு பெற்றோர்கள் முக்கியத்துவம் கொடுத்து ஊக்குவிக்க வேண்டும். பெற்றோர்களும், முன்மாதிரியாகச் செயற்பட வேண்டும்.

பெற்றோர்கள் தமது பிள்ளைகளுடன் நல்ல தொடர்பாடல்களை வளர்த்துக்கொள்ள வேண்டும். இதனூடாக பிள்ளைகள் பெற்றோரிடம் சகல விடயங்களையும் அச்சமின்றி தெரிவிக்கும் வாய்ப்பு ஏற்படும். இதன் மூலம் சிறுவர் துஷ்பிரயோக நிகழ்வை முன்கூட் டியே தவிர்த்துக் கொள்ளமுடியும் என்றார். (116)

# விவசாயக் குழுக்கூட்டம்

(வேலணை)

ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்கான விவசாயக் குழுக்கூட்டமானது எதிர்வரும் 12 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9 மணியளவில் ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் உள்ள மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் எழிலரசி அன்ரன் யோன்நாயகம் தலைமையில் இடம்பெறவுள்ள இந்த விவசாயக் குழுக்கூட்டத்தில் ஊர்காவற்றுறைப் பகுதியைச் சேர்ந்த விவசாயிகளும், விவசாயத்துறைகளைச் சேர்ந்த அதிகாரிகளும் பங்கு கொள்ளுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர். (105)

# செம்மணி இந்து மயானத்தில் தகனத்திற்கு கட்டணம் அதிகரிப்பு

செம்மணி இந்து மயானத்தில் உடலங்களைத் தகனம் செயவதற்கான கட்டணம் அதிகரிக்கப்பட்டுள்ளதாக செம்மணி மயான அபிவிருத்திச் சபை அறிவித்துள்ளது.

இதன்படி எதிர்வரும் 1 ஆம் திகதியிலிருந்து உடலங்களைத தகனம் செய்வதற்கு 1750 ரூபாவும், நீதிமன்ற உத்தரவுக்கமைய 10 வயதுக்குட்பட்ட சிறுவர்களைப் புதைப்பதற்கு (குழி தோண்டுவது அவரவர் பொறுப்பு) 1750 ரூபாவும், விலங்குகளைப் புதைப்பதற்கு கிராம உத்தியோகத்தரின் கடிதத்துடன் 1000 ரூபாவும் கட்டணமாக அறவிடப்படவுள்ளது.

கடந்த வாரம் நடைபெற்ற செம்மணி இந்து மயான அபிவிருத்திச் சபையின் பொதுக் கூட்டத்தில் இப்புதிய கட்டண அறவீடு தீர்மாணிக்கப்பட்டது.


செம்மணி மயானத்தைச் சுற்றி பல இலட்சம் ரூபா செலவில் சுற்றுமதில் கட்டப்பட்டுள்ளதுடன் மின் உலை அமைப்பதற்கான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அத்துடன் பல நிழல்தரும் மரங்கள் நாட்டப்பட்டு அவற்றைத் தியாகி அறக்கொடை நிலையம் பராமரித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# கடந்த வருடம் வெள்ளத்தால் 8500 ஏக்கர் வயல்கள் நாசம்

யாழ். மாவட்டத்தில் கடந்த வருடம் ஏற்பட்ட வெள்ள அனர்த்தம் காரணமாக 8500 ஏக்கர் வயல்கள் பகுதியளவில் நாசமடைந்துள்ளதாக கமநல அபிவிருத்தி திணைக்களத்தினால் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

கடந்த செவ்வாய்க்கிழமை மாவட்டச் செயலகத்தில் நடைபெற்ற மாவட்ட விவசாய அபிவிருத்திக் குழுக் கூட்டத்திலே இந்த விடயம் கமநல அபிவிருத்தித் திணைக்களத்தினால் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

கடந்தவரும் 8500 ஏக்கர் வயல்கள், 3500 ஏக்கர் வெய்காயம்,1011 ஏக்கர் மரக்கறிச்செய்கை மற்றும் 64 ஏக்கர் கிழங்கு உற்பத்தி என்பன பாதிக்கப்படடுள்ளதோடு, இதனால் விவசாயிகள் பாரிய நஷ்டத்தை எதிர் நோக்கியிருந்ததாகவும் கலநல அபிவிருத்தி திணைக்களம் சுட்டிக்காட்டியுள்ளது. (02)



வடமராட்சி பிரதேச மீனவர்கள் மற்றும் மக்களின் ஏற்பாட்டில் ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் ஆலயத்தில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுக்கு சுகநலம் வேண்டி நேற்று முன்தினம் காலை 11 மணியளவில் விசேட பூஜை வழிபாடுகள் இடம்பெற்றதுடன், அன்னதானமும் வழங்கப்பட்டது. (116)

# மகளிர் தினத்தை முன்னிட்டு கட்டுரைப் போட்டி

(வேலணை)

சர்வதேச மகளிர் தினத்தையொட்டி வேலணைப் பிரிதேச சபை செயலகமானது மக்கள் மத்தியில் கட்டுரைப் போட்டி ஒன்றினை நடாத்தி பரிசுகளை வழங்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

'குடும்பத்தை பாதுகாப்பவனை மேண்மைப்படுத்துவோம்', 'பெண்கள் மீது ஏற்படுத்தும் வன்முறைகளை குறைப்பதில் எமது சமூகத்தினரின் பங்கு', 'பெண்களை வலுப்படுத்தலில் குடும்பம் மற்றும் சமூகத்தின் பொறுப்பு'


என்ற மூன்று தலைப்புக்களில் விரும்பிய ஒன்றினைத் தெரிவு செய்து 450 முதல் 500 சொற்களுக்கு உட்பட்டதாக இருக்க வேண்டும். யாழ்.மாவட்டத்தில் வசிக்கும் போட்டியாளர்கள் இந்தக் கட்டுரைப் போட்டியில் பங்கு பற்ற முடியும்.

போட்டியாளர்கள் தங்களினது வதிவிடத்தினை கிராம சேவையாளர் மூலம் உறுத்திப்படுத்தல் வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இப்போட்டியில் முதல் மூன்று இடங்களைப் பெற்றுக் கொள்பவர்களுக்கு பரிசில்களும், சான்றிதழ்களும் வழங்கப்படவுள்ளதுடன், முதல் இடத்தினைப் பெற்றுக்கொண்ட கட்டுரையினை யாழ்.மாவட்டதில் இடம்பெறவுள்ள போட்டிக்கு அனுப்பிவைக்கப்படவுள்ளது எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தக் கட்டுரையில் பங்கு கொள்பவர்கள் 18 வயதிற்கு மேற்பட்ட ஆண் - பெண் இருபாலரும் பங்கு கெள்ளலாம் எனவும், கட்டுரைகளைத் தயாரித்து எதிர்வரும் 12 ஆம் திகதிக்கு முன்ன்ர் பிரதேச செயலகம் வேலணைக் காரியாலயத்தில் ஒப்படைக்குமாறு கேட்கப்பட்டுள்ளனர். (05)

# சாதனை மாணவர்கள்



*சுகன்யா சரவணமுத்து*
*கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரி*
*வணிகப்பிரிவு*
*பொருளியல் ஏ*
*கணக்கீடு ஏ*
*வர்த்தகம் ஏ*
*மாவட்ட நிலை - 60*

நான் கரவெட்டி மேற்கில் வசித்து வருகின்றேன். சிறுயதிலிருந்தே கல்வியில் மிகுந்த ஆர்வத்துடன் கற்றுவந்தேன். க.பொ.த.சாதாரண தரப் பரீட்சையில் 6ஏ, 2பி,சி பெற்றேன். க.பொ.த உயர்தரத்தில் வணிகத்துறையை தெரிவு செய்தேன். வகுப்பில் ஆர்வத்துடன் பயின்றேன் எனினும் நான் அதிகளவு முயற்சியினை ஈடுபடுத்தாததன் காரணத்தினால் என்னால் மாவட்ட ரீதியில் சிறப்பான இடத்தைப் பெறமுடியவில்லை.

மேலும் எதிர்காலத்தில் முன்னர் விட்ட தவறுகளை விடுத்து அன்றாடம் கற்று சிறப்பான உயர்நிலையை அடை முயற்சிப்பேன்.



*ஆரத்தியா புஸ்பலிங்கம்*
*வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி*
*கலைப்பிரிவு*
*தமிழ் - ஏ*
*புவியியல் ஆங்கில மொழி மூலம் - பி*
ICT *ஆங்கில மொழி - பி*
*மாவட்ட நிலை 10*

எனது பாடசாலை அதிபர், கற்பித்த ஆசிரியர்கள், புத்தகங்கள் தந்து உதவிய மற்றும் ஊக்குவித்த ஆசிரியர்கள் அனைவருக்கும் நன்றிகள். விசேடமாக ICT கற்பித்த செல்வி அகல்யா ஈஸ்வர தேவன் ஆசிரியைக்கும் எனது நன்றிகள்.

ஏனேனின் நான் தனியொரு மாணவியாக இப்பாடத்தைத் தேர்ந்தேடுத்த போது எனக்கு கற்பிப்பதற்கு முன்வந்தார். அத்துடன் இப்பாடத்தை பாடசாலையில் மட்டுமே கற்று இப்பெறுபேற்றை பெற்றுள்ளேன். புவியியல் பாடத்தை தமிழ் மொழி மூலம் ஆசிரியரிடத்திலும் சுயதேடல் மூலம் கற்று ஆங்கில மொழி மூலத்தில் பரீட்சை எழுதினேன்.

நான் எதிர்காலத்தில் எனது பாடசாலைக்கும், சமூகத்திற்கும் எனது சேவையைச் செய்வேன்.

**நேர்காணல் : கே.கே.விசிந்தன்**

கஷ்டம் வரும்போது கண்ணை மூடாதே. அது உன்னை கொன்றுவிடும். கண்ணை திறந்து பார், நீ அதை வென்று விடலாம். - பொன்மொழி

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU

இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
Online : www.thinamurasu.net

## சமூகத்தில் பாதிக்கு நீதி என்ன?

இன்று உலக மகளிர் தினம். இப்போதும் இது ஆண்களின் உலகமாகத்தான் இருக்கிறது என்பதை யாரும் மறுக்க முடியாது. பெண்ணைத் தாயாக, தேவதையாக, சக்தியாக, தெய்வமாகப் போற்றுவதாகச் சொல்வதை விட்டுவிட்டு, சகமனுசியாக ஏற்றுக் கொண்டிருக்கிறோமா என்பதை ஆண்கள் ஒவ்வொருவரும் மனப்பூர்வமாகக் கேட்டுப் பார்த்துக் கொண்டால் உண்மை விளங்கும்.

தனது தாயை, சகோதரியை, மனைவியை நேசிக்கவோ, புரிந்துகொள்ளவோ முடியாத ஒருவனால் பெண் விடுதலை அல்லது சமத்துவம் – அவன் என்னதான் முற்போக்கைச் சொல்லிப் போராடினாலும், ஆயிரமாயிரம் பெண்களைக் "கரையேற்றினாலும்" – சாத்தியப்படக்கூடுமாவென்பது சந்தேகமே.

எந்தப் பூச்சுற்றும் வார்த்தைகளாலும் பெண்ணைச் சமுதாயத்தின் இரண்டாம் நிலையிலேயே வைத்திருக்கும் உண்மையை ஒளித்துவிட முடியாது. இந்த நாட்டில் இரண்டாந்தரப் பிரஜைகளாக நடத்தப்படுகிறோம் என்று போராடிய தமிழ்ச் சமூகத்தின் உள்ளேயே, சாதிரீதியாகவும் பால்ரீதியாகவும் இரண்டாம் மூன்றாம் தரமாகப் பலர் நடத்தப்பட்டு வருவது பற்றி நமக்கு எந்தக் கூச்சமும் உண்டாவதில்லை.

பல இழிவுகளை நாம் மூடி மறைத்து இவ்வாறு நிகழவில்லை என்று ஒரு போலி வாழ்க்கையை வாழ்ந்து கொண்டிருக்கிறோம். நமது சமூகத்தில் பெண்களின் நிலைமை இதுவே. சமுதாயத்தில் இந்த அநீதி நடப்பதை உணர்ந்தும், அலட்சியப் படுத்தியபடியோ அல்லது பெரும்பாலும் நியாயப்படுத்தியபடியோ, அதை ஏற்றுக்கொள்ளாது செல்லும் மனப்போக்கே நமது பொது மனப்போக்காக உள்ளது.

பெண்ணை தனக்குச் சமமானவள் இல்லை என தீர்மானமாக ஆண் கருதியதால், அவனால் எப்படி நியாயப்படுத்தப்பட்டிருப்பினும், அவை ஆண்களின் நலன்களைக் கருத்தில் கொண்டு ஆண்களால் ஒப்பிக்கப்பட்டவை என்பதே உண்மை. பெண்ணின் இந்த நிலைமை குறித்து, பதினேழாம் நூற்றாண்டில் வாழ்ந்தவரான பூலென் தெ லா பார் (Poulain de la Barre) என்ற பிரெஞ்சுப் பெண்மணி சொன்னார்: "பெண்களைக் குறித்து ஆண்கள் வழங்கிய தீர்ப்புகள் அனைத்துமே நம்பகத்தன்மை அற்றவை. ஏனெனில் அங்கே நீதிபதி வழக்கறிஞர்கள், வாதி, பிரதிவாதிகள், சாட்சிகள் அனைவருமே ஆண்கள்."

உண்மையில், தொன்று தொட்டே பெண்களுக்காகச் சிந்திப்பதும், அவர்களுக்கான நியதிகளை வழங்குவதும் ஆண்களாகவே இருந்து வந்திருக்கிறார்கள் என்பதுதான் உண்மை. தமிழர் சமூகத்திலும் சங்க காலந்தொட்டு ஆணுக்கும் பெண்ணுக்கும் சொல்லப்பட்ட அறங்கள் பாலியல் அடிப்படையில் எழுந்தவை பாரபட்சமானவை, இன்றைய நவீனத்துவ நோக்கில் பெண்ணுக்குப் பெரும் அநீதி இழைத்தவை என்பதில் சந்தேகமில்லை. மனித வளத்தில் சரிபாதியை இனவிருத்திச் செயல்பாட்டோடும், வீட்டின் நான்கு சுவர்களுக்குள்ளும் முடக்கியவை.

ஆக, மானுடம் என்பது ஆணுக்கானது. ஆணை விலக்கிவிட்டு பெண்ணில்லையென்பதும், அவள் பிறர்சார்ந்தே இயங்கப் பிறந்தவளென்றும் சொல்லி வந்திருக்கிறார்கள். இதுவே நம் சிந்தையில் ஊறி, மனிதர்கள் சமமாகப் படைக்கப்படவில்லை என்பதையே ஏதோ ஒருவகையில் நாமெல்லோரும் நியாயப் படுத்திக் கொண்டிருப்பதாக இருக்கிறது.

இன்றைக்கு மெல்ல மெல்ல பௌதீக ரீதியாக பெண்நிலையில் மாற்றங்கள் ஏற்பட்டு வருகிறதென்பது உண்மையானாலும், சிந்தனை இன்னும் மாறிவிடவில்லை. வருங்கால உலகம் ஆண்களுக்கு மட்டுமல்ல. பெண்களுக்கும் உரியது என்கிற நிலை வருமா? அப்படி வராமல், நாம் மனதில் சமநீதி கொண்ட மனிதர்கள் எனச் சொல்லிக்கொள்ள முடியாது. - ஆசிரியர்

# உணவுப்பொதிகளில் சீனி, உப்பு அளவை குறிப்பிட அறிவுறுத்து

(கொழும்பு)

சீனி மற்றும் உப்பு அடங்கியுள்ள உணவு வகைகளின் பொதிகளில் அந்த உணவில் அடங்கியுள்ள சீனி மற்றும் உப்பு என்பவற்றின் சதவீதம் குறிப்பிடப்படுவது கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

தொற்று நோயல்லாத ஒரு சுகதேகியான வாழ்விற்கான உணவுப் பானங்களில் சேர்க்கப்படுகின்ற சீனி மற்றும் உப்பு என்பவற்றின் அளவைக் குறைக்க வேண்டியுள்ளதாக சுகாதார அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

நீரிழிவு, இருதய நோய், களைப்பு, உயர் இரத்த அழுத்தம் ஆகிய நோய்களுக்கு இலக்காகின்றவர்களின் எண்ணிக்கை நாட்டில் தற்போது அதிகரித்து வருவதாக அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது.

உடற்பருமன், உடலின் கனம் அதிகரிப்பு ஆகிய காரணங்களினால் நீரிழிவு, உயர் இரத்த அழுத்தம், இருதய நோய் போன்ற நோய்கள் அதிகரிப்பதற்கு ஏதுவாக அமைந்துள்ளது எனவும் சுகாதார அமைச்சு கூறுகின்றது. உணவு, பானங்களில் சீனி மற்றும் உப்பு என்பன அடங்கியுள்ளமையே இதற்கு பிரதான காரணங்களாகும் என மருத்துவ ரீதியாக உறுதிசெய்யப்பட்டுள்ளதாகவும் அமைச்சு தெரிவித்துள்ளது.

இதன் பிரகாரம் உணவுகளுக்கான சட்டத்தின் கீழ் உணவு மற்றும் பானங்களில் அடங்கியுள்ள சீனி, உப்பு என்பவற்றின் அளவு அவற்றின் பொதிகளில் குறிப்பிடப்படுவதை கட்டாயமாக்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறு சுகாதார சேவைகள் பணிப்பாளருக்கு அமைச்சர் மைத்திரிபால சிறிசேன பணிப்புரை விடுத்துள்ளார்.

# தேசிய அடையாள அட்டைபெற யாழிலிருந்து மூவாயிரம் விண்ணப்பம்

(கொழும்பு)

யாழ். மாவட்டத்தில் இந்த வருடம் 3,399 பேர் ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்ப டும் தேசிய அடையாள அட்டைக்கு விண்ணப்பித்துள்ளதாக யாழ் மாவட்ட செயலர் சுந்தரம் அருமைநாயகம் தெரிவித்தார்.

ஆட்பதிவுத் திணைக்களத்தின் புள்ளிவிபரத்தின் படி ஜனவரி மாதத்தில் 1,603 விண்ணப்பங்களும், பெப்ரவரி மாதம் 1,796 விண்ணப்பங்களும் ஆட்பதிவு திணைக்களத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

அதனடிப்படையில் ஜனவரி மாதம் 270 புதிய விண்ணப்பங்களும், 648 திருத்தத்திற்கான விண்ணப்பங்களும், 321 தொலைந்த விண்ணப்பங்களும், 127 பாடசாலை மாணவர்களின் விண்ணப்பங்களும், 237 ஒரு நாள் சேவை விண்ணப்பங்களும் பெப்ரவரி மாதத்தில் 326 புதிய விண்ணப்பங்களும், 701 திருத்தத்திற்கான விண்ணப்பங்களும், 353 தொலைந்த விண்ணப்பங்களும், 175 பாடசாலை விண்ணப்பங்களும், 241 ஒருநாள் சேவை விண்ணப்பங்கள் உட்பட 3,399 விண்ணப்பங்கள் பதிவு செய்யப்பட்டு கொழும்பு ஆட்பதிவுத் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இதில், பாடசாலை மாணவர்களின் அடையாள அட்டை விண்ணப்பங்கள் குறைவடைந்துள்ளதாகவும் 16 வயதினை பூர்த்தியடைந்த மாணவர்கள் அடையாள அட்டையினை பெற்றுக் கொள்வதற்கான நடவடிக்கைகளை பாடசாலை அதிபர் மூலமாகவோ அல்லது கிராம சேவையாளர் ஊடாகவோ விண்ணப்பித்துக் கொள்ளுமாறும், யாழ்.மாவட்ட செயலர் கேட்டுக்கொண்டுள்ளார்.

## மின்சாரம் வழங்குவதற்கு தகவல்கள் சேகரிப்பு

யாழ்.மாவட்டத்தில் உள்ள வீடுகளுக்கு மின்சாரம் வழங்குவது தொடர்பான தகவல்களை திரட்டும்பணியில் யாழ்.மாவட்ட செயலக திட்டமிடல் பிரிவினர் ஈடுபட்டுள்ளனர். இதுதொடர்பான விபரங்களை விரிவாக அனுப்பி வைக்கும்படி யாழ்.மாவட்டத்தில் உள்ள பிரதேச செயலகங்களுக்கு யாழ். செயலகத்தினால் அறிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்தில் பல இடங்களில் உள்ள வீடுகளுக்கு மின்சாரம் வழங்கப்பட்டுள்ள போதிலும், குறிப்பாக மீள்குடியேற்றம் இடம்பெற்ற வலி. வடக்கு, தென்மராட்சியில் உள்ள சில கிராமங்கள், வடமராட்சியில் சில கிராமங்களுக்கு மின்சாரம் வழங்கப்படாத நிலைமை காணப்படுகின்றது.

தற்போது மின்சாரம் பெற்றவர்கள், பெற வேண்டியவர்கள், மின்சாரத்திற்கு விண்ணப்பித்துவிட்டு காத்திருப்பவர்கள் போன்றவர்களின் விபரங்கள் யாழ்.மாவட்ட பிரதேச செயலகங்களி னால் கிராம அலுவலர்கள் மூலம் சேகரிக்கப்பட்டு வருகின்றன.

# ஜெனிவா நெருக்கடிக்கு காரணம் அரசாங்கம்

ரணில் குற்றச்சாட்டு

(கொழும்பு)

ஜெனிவா மனித உரிமைகள் மாநாட்டில் தற்போது இலங்கை எதிர்நோக்குகின்ற நெருக்கடிக்கு அரசாங்கமே பொறுப்புக் கூற வேண்டும் என்று எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.

ஜெனிவா பிரேரணை தொடர்பில் அவர் விடுத்துள்ள விசேட அறிவிப்பில் இவ்வாறு அவர் குறிப்பிட்டுள்ளார்.

சர்வதேச குற்றவியல் சட்டத்தில் இருந்து இலங்கையை தாம் நீக்கியதன் பின்னர், ஏன் மீண் டும் இவ்வாறான நிலை ஏற் பட்டுள்ளது எனவும் அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

இவ்வாறான நிலை ஏற்பட்டதன் பின்னர் அதனுடன் ஒத்துழைக்காமல், அதற்கு எதிராக செயற்படுவதால், அது நாட்டிற்கும் பாதிப்பை ஏற்படுத்தும் என்று ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் மாநாட்டில் இலங்கை எதிர்நோக்கியுள்ள நெருக்கடி நிலைமைக்கு, நவநீதம்பிள்ளையோ, தமிழ்த் தேசியக் கூட்டமைப்போ அல்லது புலம் பெயர்ந்த தமிழர்களோ காரணமல்ல. இது முற்றுமுழுவதுமாக அரசாங்கத்தினால் ஏற்பட்ட விளைவு என்றும் ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.

# மருத்துவசேவை வழங்கமறுப்பு; 20 வைத்தியர்கள் பணி நீக்கம்

(கொழும்பு)

அவசர மருத்துவ சேவைகளை கடந்தவாரம் வழங்குவதற்கு மறுத்த வைத்தியர்கள் 20 பேர் வைத்தியசாலையிலிருந்து வேலை நீக்கம் செய்யப்பட்டுள்ளதாக இலங்கை தேசிய வைத்தியசாலை தெரிவித்துள்ளது.

அவசர சேவைகளை வழங்குவதற்கு மறுத்த வைத்தியர்கள் குறித்து சுகாதார அமைச்சுக்கு கூறப்பட்டதாகவும், இதனைத் தொடர்ந்து அமைச்சு இவர்களை வேலை நீக்கம் செய்துள்ளதாகவும் தேசிய வைத்தியசாலையின் பணிப்பாளர் டாக்டர் அனில் ஜயசிங்க தெரிவித்தார்.

வைத்தியர்கள் தமது வேலை நீக்கக் கடிதத்தை பெற்றுள்ளனர் என்றும் பணிப்பாளர் டாக்டர் ஜயசிங்க தெரிவித்தார்.

தமது இடமாற்றத்தை செயற்படுத்தினால் பணிப்புறக்கணிப்பில் ஈடுபடப்போவதாக வைத்தியர்கள் சிலர் எச்சரித்திருந்தனர். இந்நிலையில், மருத்துவ சேவைகளை வழங்குவதற்கு மறுப்புத் தெரிவித்துள்ளமை மருத்துவ விதிகளை மீறுவதாகும். இவ்வாறு வைத்தியசாலையிலிருந்து நிறுத்தப்பட்ட வைத்தியர்கள் சிலர் தேசிய வைத்தியசாலையின் அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தில் பதவிகளை வகிப்பவர்களாவர்.

அவசர மருத்துவ சேவையை வழங்க மறுப்பது குற்றவியல் குற்றமாகும். அது மருத்துவ விதிகளுக்கு எதிரானது. ஒரு நோயாளி இறந்து கொண்டிருக்கும்போது வைத்தியர்கள் கண்களை மூடிக்கொண்டிருக்கக்கூடாது. இது அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் கொள்கைக்கு எதிரானது என வைத்தியர் எபிட்டகட்டுவ தெரிவித்தார்.

# பெண்ணெனும் இரண்டாமினம்

சிமோன் தெ பொவார்

பொருளற்ற விவாதங்களுக்கிடையே ஆணொருவன் "உன்னால் அப்படியான முடிவுக்குத்தான் வரமுடியும். காரணம் நீயொரு பெண்" எனச் சொல்வதைக் கேட்டு எங்களுக்கும் அலுத்துவிட்டது....

ஆணாக இருப்பதாலேயே அவனது சொல்லும் செயலும் சரியானது. பெண்ணாக இருப்பதாலேயே அவளது முடிவுகள் தவறாகத்தான் இருக்கும். பெறப்படும் நீதி, ஆணென்பவன் கடந்தகாலங்களைப் போலவே உயர்ந்தவன், பரிபூரணன்.

ஆனால் பெண்ணின் நிலைமை வேறு. அவளது உடைமைகளான பெண்குறியும் கருப்பையும் அவளைச் சிறுமைப் படுத்தி சிறைவைக்கும் அடையாளம். இதுதவிர பெண்ணொருத்தியின் சிந்தனை, சுரப்பிகள் வயப்பட்டதென்கிற விமர்சனம் வேறு. ஆணுக்கு தனது உடற்கூறியலும் சுரப்பிகள் சார்ந்ததென்பதும், அவனிடத்திலிருக்கும் விந்தகங்களும் (Testicules) சுரப்பிகளாக செயல்படுகின்றன என்பதும் சௌகரியமாக மறந்து போகிறது.

சிக்கலற்ற தன்மைகொண்டதாக, உலகோடு நேரிடைத் தொடர்புகொண்டதாக தனது உடலைக் கருதுகிற ஆண், பெண்ணுடலை ஒரு தடையாக, சிறையாக அவளை முடக்கிப் போடவென்றே அமைந்த அசாதாரணமாகக் கருதுகிறான்.

"ஒரு பெண் பெண்ணாக இருப்பதென்பது தரத்தில் குறைபாடுடையவளாக அவள் இருப்பதைச் சார்ந்தது", சொன்னது அரிஸ்டோட்டில். "குறைகளுடன் உழலவே ஒரு பெண் இயற்கையில் படைக்கப் பட்டிருப்பதாகக் கருத வேண்டு"மென்றும் அவர் கூறுகிறார்.

அடுத்து, புனித தோமையார் அவர் பங்கிற்கு 'பெண் என்பவள், குறைபாடுடைய ஓர் ஆண். அவள் படைப்பே ஓர் விபத்து, எதிர்பாராதது' என்கிறார். மனிதரினத் தோற்ற வரலாற்றின்படி ஏவாள், இழுத்து உருவாக்கப்பட்டவள். போஸ்வெ (Bossuer) சொற்களில் எழுதுவதெனில், 'ஆதாமுடைய அதிகப்படியான எலும்பு ஒன்றினால்' படைக்கப்பட்டவள்.

ஆக மானுடம் என்பது ஆணுக்கானது. ஆணை விலக்கிவிட்டு பெண்ணில்லையென்பதும், அவள் பிறர்சார்ந்தே இயங்கப் பிறந்தவளென்றும் சொல்கிறார்கள்.

இன்றைக்கும் பெண் என்பவள் ஆண் சார்ந்தவள் அல்லது ஆணின் அடிமை என்று கூறலாம். ஆணுக்கும் பெண்ணுக்கும் உலகில் சம உரிமை இல்லை என்பதுதான் உண்மை. அவளுடைய நிலைமையில் மாற்றங்கள் ஏற்பட்டிருக்கிற போதிலும், இன்றைக்கும் அவள் பல விடயங்களில் வாய்ப்புகளின்றி முடங்கிக்கிடக்கிறாள். உலகில் எந்தவொரு நாட்டிலும் ஆணையும் பெண்ணையும் சமமாய் பாவிக்கிற சட்டங்களில்லை. சொல்லப் போனால் அவை பெரும்பாலும் பெண்களுக்குப் பாதகத்தை இழைக்கும் தன்மையன.

தொன்று தொட்டு சமுதாயத்தில் நிலவி வரும் மனப்பாங்குகள், தெளிவாக பெண்களின் உரிமையை வரையறுக்க உதவுவதில்லை. விளைவு அவை ஏட்டளவில் பிரசுரிக்கப்படுவதோடு சரி. பொருளியல் உலகிற்கு வருவோம். இருவரும் வெவ்வேறு பிரிவினரெனினும் உரிமைகளில் சமபங்கினர்.

ஆனால் இங்கே என்ன நடக்கிறது. ஈடான தகுதிகளுடன் பெண்கள் போட்டியிடுகிற போதும் உயர்வான பணிகள், கூடுதலான ஊதியம், உயர்த்திக் கொள்வதற்கான வாய்ப்புகள், சலுகைகள் என அனைத்துமே ஆண்களுக்கானது. அரசியலாகட்டும், தொழிற்சாலைகளாகட்டும். அதிக எண்ணிக்கையில் இருக்கிறவர்களும் உயர்ந்த பதவிகளை வகிப்பவர்களும் ஆண்களே.

தவிர ஆண்வர்க்கத்திற்கே உரிய அதிகாரத்துடன், செல்வாக்கும் இணைந்து கொள்ள, நமது பிள்ளைகளின் கல்விக் கொள்கைகளில் விழிப்புணர்வுகள் இல்லை. நமது கடந்தகாலம் என்பது ஆண்களால் தீர்மானிக்கப்பட்டது. அக்கூறுகளைத்தான், புதியவை என்ற பேரிலே இன்றைய காலகட்டத்திலும் திணித்துக் கொண்டிருக்கிறார்கள்.

உலகின் முன்னேற்றத்திற்குத் தங்களை அர்ப்பணித்துக்கொள்ள பெண்கள் முனையும் இத்தருணத்திலும், இவ்வுலகம் தங்களுக்கான தென்பதில் ஆண்கள் உறுதி யாய் இருக்க, பெண்களும் அதை மறுப்பதில்லை. 'உங்கள் நடவடிக்கைகளுக்கு இனி துணை நிற்பதில்லை என்றோ உங்களுக்கு எங்களுக்கும் ஒத்துவரா தென்றோ' பெண்ணொருத்தி சொல்லத் துணிந்தால் நாளைக்கு அவள் தனது மேலான துணையுடன் இணைந்து பெறக்கூடிய நன்மைகளை இழக்க வேண்டிவரும்.




எசமானன் ஆகிய ஆண், தனது அடிமை ஆகிய பெண்ணுக்கு வேண்டிய பொருட்களைத் தந்து அவளது உயிர்வாழ்க்கைக்கு உத்தர வாதம் அளிக்கிறான். இவ்வாழ்வாதாரத்தை நம்பி அவளும், தனக்குள்ள பொருளாதார அபாயத்திலிருந்தும், சுதந்திரமென்ற பேரில் அபௌதிக இன்னல்களுக்கான வீண் கனவுகளிலிருந்தும் விடுபட நினைக்கிறாள்.

ஓர் ஆணுக்கு, அவன் காரியம் யாவிலும் உளமார கேள்வியின்றி கைகொடுப்பதற்கு ஓர் கருவி தேவை. அதற்குப் பெண் பொருத்தமானவள் என்பது அவனது முடிவு. பெண்ணுக்கும் தான் கருவியாக இருப்பதில் பெரும்பாலும் மகிழ்ச்சி. ஏனெனில் அவளிடத்தில் தன்னை கர்த்தாவாக நிலைநிறுத்திக்கொள்ள வலிமையான ஆதாரங்களில்லை. தவிர பரஸ்பர எதிர்பார்ப்பற்ற துணையென்ற அனுபவமும் அத்தகைய நிலைப்பாட்டின் அவசியத்தை அவளுக்கு உணர்த்தி இருக்கிறது.

இத்தருணத்தில் நம்முன் எழும் கேள்வி. இத்தனை சிக்கலுக்கும் ஆரம்பம் எது? அனைத்து இருமை இயல்புகளையும் (Durality) போலவே ஆண், பெண் என்ற இருமை இயல்பும் இன்றைக்கு ஏற்பட்டிருக்கிற பிணக்குகளுக்குக் காரணமென்று மொக்கையாகச் சொல்லிவிடலாம்.

ஐயமின்றி வழக்கம்போல, இருவரில் வெற்றி பெறுகிறவன் அதாவது தனது வன்மையை நிரூபிப்பவன், முழுமுதற்கடவுள், வரம்புகளற்ற பெருமான். இதுவரை நமக்குப் புரிகிறது.

அடுத்து வருவோம். அதெப்படி வரலாற்றின் தொடக்கத்திலிருந்து ஆண்கள் மட்டுமே வெற்றி பெற்று பவனிவர முடிந்திருக்கிறது? இவ்விருமை யுத்தங்களின் முடிவில் பெண்களும் வாகைசூடி இருக்கலாம். அல்லது வெற்றி தோல்வி எவர்பக்கம் என தீர்மானிக்கவியலாத சூழ்நிலையும் இருந்திருக்கலாம். இல்லையென சொல்லமுடியுமா?

இதுவரை ஆண்களுக்கான உலகமாக இருந்து இன்றைக்கு மாற்றத்திற்கு உட்படுகிறதென்பது எப்படி? இந்த மாற்றத்தினால் நன்மைகள் ஏதேனும் உண்டா? வருங்கால உலகம் ஆண்களுக்கு மட்டுமல்ல. பெண்களுக்கும் உரியது என்கிற நிலை வருமா? இப்படியான கேள்விகள் கேட்கப்படுவது இதுதான் முதன்முறை என்று அல்ல. அதற்கான பதிலும் ஏராளமாகச் சொல்லப்பட்டிருக்கின்றன. ஆனால் பெண்ணை வேறு (The Other) என தீர்மானமாக ஆண் கருதியதால், எப்படி நியாயப்படுத்தப்பட்டிருப்பினும் சொல்லப்பட்ட பதில்களால் நாம் நிறைவை அடைந்ததில்லை. அப்பதில்கள் ஆண்களின் நலன்களைக் கருத்தில் கொண்டு ஆண்களால் ஒப்பிக்கப்பட்டவை என்பதும் உண்மை.

'பெண்களைக் குறித்து ஆண்கள் வழங்கிய தீர்ப்புகள் அனைத்துமே நம்பகத்தன்மை அற்றவை. ஏனெனில் அங்கே நீதிபதி வழக்கறிஞர்கள், வாதி, பிரதிவாதிகள், சாட்சிகள் அனைவருமே ஆண்கள்.. கூறியவர் பதினேழாம் நூற்றாண்டில் வாழ்ந்த அதிகம் அறியப்படாத பெண்ணியல்வாதியான பூலென் தெ லா பார் (Poulain de la Barre).

தங்களைப் படைப்புக்கடவுளாக சித்தரித்துக்கொண்டு ஆண்கள் மகிழ்வதை தொன்று தொட்டு உலகமெங்கும் பார்த்து வருகிறோம். "தெய்வச்செயல், அவன் என்னைப் பெண்ணாய்ப் படைக்கவில்லை". என காலைப் பிரார்த்தனையில் யூதர்கள் கடவுளைச் சிலாகிக்க அவர்களது மனைவியரோ மற்றொரு பக்கம், "ஆண்டவன் அருள் அவனது விருப்பத்திற் கிணங்க என்னைப் படைத்தான்" எனப் பணிவுடன் பெருமிதம் அடைவார்கள்.

"தன்னை அடிமையாக அல்லாமல் சுதந்திர மனிதனாக பிறக்க வைத்ததற்காக முதலாவதாகவும், தன்னைப் பெண்ணாக அல்லாமல் ஓர் ஆணாக பிறக்க வைத்தமைக்காக இரண்டாவதாகவும்", பிளாட்டோ, இறைவனிடம் தனது நன்றியைத் தெரிவித்தான்.

ஆக கடவுள் தந்த இவ்வரத்தினை முழுமையாக ஆண்கள் அனுபவிக்க வேண்டுமெனில், ஒன்று பெண்கள் அவர்களின் நிரந்தரச் சொத்து என்கிற தகுதியைப் பெற்றாக வேண்டும்.' இரண்டாவது அதற்குக் குறைகளேதும் நேர்ந்திடக் கூடாது. இந்த ஆதிக்க உணவை அவர்களது உரிமையைத் தேடிப்பெற உதவிற்று.

"இங்கே சட்டங்களை இயற்றியவர்களும், வடிவமைத்தவர்களும் சரி பின்னர் அவற்றை கோட்பாடுகளாக மாற்றி அமைத்த சட்ட நிபுணர்களும் சரி ஆண்கள். எனவே அவை அனைத்துமே ஆண்களுக்கு அனுகூலமாக இருக்கின்றன" இதைக் கூறியவரும் பூலென் தெ லா பார் என்பவரே.

பெண்களின் சார்நிலை பூமியின் நலனுக்காக, விண்ணில் தீர்மானிக்கப்பட்டது என்பதை வலியுறுத்த, நமது மக்கள் பிரதிநிதிகளும், மத குருமார்களும், தத்துவஞானிகளும், எழுத்தாளர்களும், விஞ்ஞானிகளும் போராடி இருக்கிறார்கள். ஆண் களுடைய கண்டுபிடிப்புகளான மதங்களும், ஆதிக்க உணர்வில் அவர்களுக்குள்ள நாட்டத்தை வெளிப்படுத்துகின்றன.

பழங்காலந்தொட்டு அங்கதக் கலைஞர்களும் அறவோர்களும் பெண்களின் பலவீனத்தை மேடையேற்றி மகிழ்ந்திருக்கிறார்கள். பெண்களை காட்டுமிராண்டித்தனமாக வசைபாடி மகிழ்வதையே நோக்கமாகக் கொண்டு நமது இலக்கியங்கள் இருக்கின்றன என்பதை நன்கு அறிவோம்.....

## எனது டைரி

எனது டைரி எனக்கானதாய் இல்லை
எனது டைரி முகவரிகளை விழுங்கியபடி நெளிகிறது
எனது டைரிக்குள் உபதேசங்கள் அநேகம்
யாருக்கும் தொந்தரவற்றதாய் சின்னதாய்
ஒரு புலம்பல்
மனித துயரங்களின் தடாகத்திற்குள்
எனது துயரம் வந்துவிழ நான் என்ன செய்வது?
எனக்கான முகவரியை எனது டைரியில் காணோம்

- சுகந்தி சுப்பிரமணியன்

# 15ஆயிரம் சிங்கள மக்கள் வடக்கில் மீள்குடியேற்றம்

## - அரசாங்கம் அறிவிப்பு

மீள்குடியேற்ற செயற்பாடு முடிவடையும் காலத்தை வரையறுத்துக் கூற முடியாது என்பதுடன் வடக்கில் 15,000 சிங்கள மக்கள் மீள்குடியேற்றப்படவுள்ளனர் என அரசாங்கம் அறிவித்துள்ளது.

இது மீள்குடியேற்றமே தவிர மீள்குடியமர்த்தல் அல்ல என வட மாகாண அபிவிருத்திக்கான ஜனாதிபதி செயலணியின் செயலாளர் எஸ்.பி.திவாரத்ன நேற்று முன்தினம் தெரிவித்தார்.

இவர்கள் வெலிஓயா, பதவியா மற்றும் வவுனியா தெற்கு ஆகிய பகுதிகளிலேயே மீள்குடியேற்றப்படவுள்ளனர் என்றும் அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை, வடக்கில் மீள்குடியேற்றப்படவுள்ள சிங்களமக்களுக்காக 850 வீடுகளை அரசாங்கம் நிர்மாணிக்கவுள்ளது என மீள்குடியேற்ற அமைச்சின் செயலாளர் ஜானக சுகததாச தெரிவித்தார்.

இதில் முதற் கட்டமாக 500 வீடுகள் நிர்மாணிக்கப்படும் இவற்றின் நிர்மாணப் பணிகள் முடிவடையும் நிலையிலுள்ளன. இந்தப் புதிய வீடுகளின் திறப்பு விழா இன்னும் ஓரிரு மாதங்களில் இடம்பெறவுள்ளது என அவர் குறிப்பிட்டார்.

இந்த வீடுகள் வெலிஓயா பகுதியில் நிர்மாணிக்கப்படுகின்றன. இந்த 500 வீடுகளும் நான்கு கிராமங்களை உள்ளடக்கியதாகவுள்ளன என மீள்குடியேற்ற அமைச்சின் செயலாளர் தெரிவித்தார். இதுபோன்ற வீடுகள் பதவியா பிரதேசத்திலும் நிர்மாணிக்கப்படவுள்ளன என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள ஜப்பானிய தூதுவரின் உத்தியோகபூர்வ வாசஸ்தலத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் உரையாற்றும்போதே வட மாகாண அபிவிருத்திக்கான ஜனாதிபதி செயலணியின் செயலாளர் எஸ்.பி.திவாரத்ன மற்றும் மீள்குடியேற்ற அமைச்சின் செயலாளர் ஜானக சுகததாச ஆகியோர் மேற்கண்டவாறு குறிப்பிட்டனர்.

வட மாகாண அபிவிருத்திக்காக 2,569 மில்லியன் அமெரிக்க டொலர் நிதியை அரசாங்கம் செலவளிக்கவுள்ளது.இதற்கு மேலதிகமாக வெளிநாட்டு உதவிகளும் கிடைக்கும் என்றும் வட மாகாண அபிவிருத்திக்கான ஜனாதிபதி செயலணியின் செயலாளர் எஸ்.பி.திவாரத்ன தெரிவித்தார்.

எனினும் வட மாகாண அபிவிருத்திக்கு வெளிநாட்டு உதவிகளே அதிகம் வழங்கப்படுகின்றன. இவை நிதியுதவி மற்றும் கடன் ஆகிய இரண்டு வகைகளில் வழங்கப்பட்டுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை, தற்போது வடக்கில் 42 நலன்புரி நிலையங்கள் மாத்திரமே உள்ளன என மீள்குடியேற்ற அமைச்சின் செயலாளர் ஜானக சுகததாச தெரிவித்தார்.

எனினும் இவை சிறிய கிராமங்கள் என்றே அழைக்கப்படுகின்றது. ஏனென்றால் இங்கு மக்களுக்குத் தேவையான அனைத்து அத்தியாவசிய வசதிகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன என அவர் குறிப்பிட்டார்.

இவற்றில் சுமார் 400 குடும்பங்களே உள்ளன. இவர்கள் ஆரம்ப காலப்பகுதியில் யாழ்ப்பாணத்திலிருந்து வெளியேற்றப்பட்டவர்களாவர். எனினும் இறுதிக் கட்ட யுத்தத்தின்போது வெளியேற்றப்பட்டவர்கள் அனைவரும் மீள்குடியேற்றப்பட்டுள்ளனர் என செயலாளர் ஜானக சுகததாச தெரிவித்தார்.

இதற்கு மேலதிகமாக பல்லாயிரக் கணக்கானோர் நண்பர்கள் மற்றும் உறவினர்களின் வீடுகளிலும் இந்தியாவிலுள்ள நலன்புரி நிலையங்களிலும் உள்ளனர். அத்துடன் சிங்கள மற்றும் முஸ்லிம் மக்களும் மீள்குடியேற்றப்பட வேண்டியுள்ளனர் என்றும் அவர் குறிப்பிட்டார்.

## தனியார் பேருந்து கட்டணம் யூலை வரை மாற்றமில்லை

ஜுலை மாதம் வரை தனியார் பஸ் கட்டணம் மாற்றப்படமாட்டாது. டீசல் விலை உயர்விற்கான எரிபொருள் மானியம் வழங்குமாறு தனியார் பஸ் உரிமையாளர் சங்கங்கள் விடுத்த கோரிக்கையை தமது அமைச்சு ஏற்கவில்லையென தனியார் போக்குவரத்து அமைச்சர் சி.பி. ரத்நாயக்க தெரிவித்தார்.

பஸ் கட்டண சீர்திருத்தம் தொடர்பான தேசிய கொள்கையின் பிரகாரம் 12 விடயங்களில் ஏற்படும் மாற்றத்தின் பிரகாரம் பஸ் கட்டணம் உயர்த்தப்படும். 4 வீதமாக செலவுகள் உயரும் போது கட்டணத்தை அதிகரிக்கலாம்.

இறுதியாக 2012 பெப்ரவரியில் பஸ் கட்டணங்கள் 20 வீதத்தினால் உயர்த்தப்பட்டது. டீசல் விலை உயர்வையடுத்து கட்டண உயர்விற்குப் பதிலாக எரிபொருள் மானியம் வழங்குமாறு பஸ் சங்கங்கள் கோரின. அந்தக் கோரிக்கை குறித்து ஆராயப்பட்டது. சங்கங்களின் எழுத்து மூல கோரிக்கையை கையேற்றாலும் அவற்றை நாம் ஏற்கவில்லை எனத் தெரிவித்தார்.

## அமெரிக்க படை அதிகாரிகள் இலங்கைப் படையினருக்கு பயிற்சி

அமெரிக்காவின் பசுபிக் கட்டளைப் பீடத்தின் படை அதிகாரிகள் குழுவொன்று கடந்த மாத நடுப்பகுதியில், வவுனியா பிரதேசத்தில் படையினருக்கு பயிற்சிகளை அளித்துள்ளது.

பூ ஓயாவில் உள்ள இராணுவத்தின் கண்ணிவெடி அகற்றும் பிரிவு முகாமில் இந்த கூட்டுப் பயிற்சி இடம்பெற்றுள்ளது.

கடந்த மாதம் 18ஆம் திகதி தொடக்கம் 22ஆம் திகதிவரை இடம்பெற்ற இந்தப் பயிற்சியில், இராணுவத்தின் பொறியியல், மருத்துவப்படைப் பிரிவு மற்றும் ஆயுத தளபாட தொழில்நுட்பப் பிரிவு ஆகியவற்றைச் சேர்ந்த 100 இற்கும் அதிகமான படையினர் பங்கேற்றனர்.

அமெரிக்காவின் 18ஆவது மருத்துவப் படைத்தலைமையகம், பசுபிக் விமானப்படை, பசுபிக் பிராந்திய பொதுச்சுகாதார தலைமையகத்தின் மிருக மருத்துவ நிபுணர்கள், 8ஆவது அரங்க உதவித் தலைமையகத்தின்



வெடிபொருள் நிபுணர்கள் படையினருக்குப் பயிற்சிகளை அளித்துள்ளனர்.

மனிதாபிமான உதவிகளை வழங்கும் திட்டத்தின் கீழ் இந்தப் பயிற்சிகள் அளிக்கப்பட்டுள்ளதாக அமெரிக்கா கூறியுள்ளது.

கண்ணிவெடிகளை அகற்றுவதை மையப்படுத்தியே இந்தப் பயிற்சிகள் இடம்பெற்றுள்ளன.

## நீதிமன்றம் மீதான அதிருப்தியை தபாலட்டை மூலம் அறிவியுங்கள்

### - பிரதம நீதியரசர் தெரிவிப்பு

நீதிமன்றம் மீது திருப்தியில்லாவிட்டால் தபாலட்டை ஊடாக முறைப்பாடு செய்யலாமென பிரதம நீதியரசர் மொஹான் பீரிஸ் தெரிவித்துள்ளார்.

பொலனறுவை பக்கமுன பிரதேசத்தில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றின் போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது

நீதிமன்றம் தொடர்பாக அனுப்பி வைக்கப்படும் முறைப்பாடுகள் அனைத்துமே விசாரணை செய்யப்படும். இவ்வாறு முறைப்பாடு செய்ய எவரும் அஞ்ச வேண்டியதில்லை.

பிரதம நீதியரசர், கொழும்பு 12 என்ற முகவரிக்கு முறைப்பாடுகளை அனுப்பி வைக்க முடியும். நீதிமன்றின் ஊடாக முழுமையான ஒத்துழைப்பு வழங்கப்படும்.

ஏதேனும் பிரச்சினையென்றால் உடனடியாக அறிவிக்கவும் என பிரதம நீதியரசர் மொஹான் பீரிஸ் தெரிவித்துள்ளார்.

## ஒன்றிணைந்து செயற்படாவிடின் ஐ.தே.க விற்கு அழிவு நிச்சயம்



(கொழும்பு)

இலங்கையின் முதல் கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி அழிவை நோக்கி சென்று கொண்டிருப்பதாக அஸ்கிரிய பிரிவு மகாநாயக்க உடுகம புத்த ரக்பித்த தேரர் தெரிவித்துள்ளார்.

கட்சியை முன்னோக்கிய பாதையில் கொண்டு செல்ல வேண்டுமாயின் கட்சியின் தலைமைத்துவம் அனைவருடனும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

தற்போது ஐக்கிய தேசியக் கட்சிக்குள் சமாதானம் மற்றும் ஒற்றுமையை காணமுடியவில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

அனைவரும் ஒன்று சேர்ந்து செயற்படாவிட்டால் கட்சி இன்னும் பிரச்சினைக்குள் தள்ளப்படும் என தேரர் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க நேற்று முன்தினம் தேரரை சந்தித்து ஆசி பெறச் சென்றபோதே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

## இராணுவம் மீது குற்றச்சாட்டு நிராகரித்தார் பொன்சேகா



ஜெனிவா மனித உரிமைகள் ஆணைக் குழுவில் இராணுவத்தின் மீது முன்வைக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளை நிராகரிப்பதாக ஜனநாயக தேசிய கூட்டமைப்பின் தலைவரும் முன்னாள் இராணுவத்தளபதியுமான சரத் பொன் சேகா தெரிவித்துள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

மனிதாபிமான நடவடிக்கைகள் தொடர்பில் சில அமைப்புக்கள் வெளியிடும் கருத்துக்கள் அடிப்படை அற்றது எனவும் அவர் தெரிவித்தார்.

ஏற்கனவே இலங்கை இராணுவத்தினரால் தடுத்து வைக்கப்பட்டவர்களை உடல் ரீதியான சித்திரவதை பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்தியதாக மனித உரிமை கண்காணிப்பகத்தினால் குற்றம் சுமத்தப்பட்டு அறிக்கை வெளியிடப்பட்டது.

இதனை அரசாங்கமும் உடன் மறுத்து அறிக்கை ஒன்றை வெளியிட்டிருந்தது.

இந்த நிலையில் முன்னாள் இராணுவத் தளபதி என்ற வகையில் இவ்வாறான குற்றச்சாட்டுக்களை தாமும் நிராகரிப்பதாக பொன்சேகா குறிப்பிட்டுள்ளார்.

## இலத்திரனியல் அடையாள அட்டை டிசம்பருக்கு முன்வழங்கப்படும்

இலத்திரனியல் அடையாள அட்டை களை தயாரிக்கும் பணியில் 800 பயிலுனர் பட்டதாரிகள் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக ஆட்களைப் பதிவு செய்யும் ஆணையாளர் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் ஆர். எம். என். சரத்குமார தெரிவித்தார்.

332 பிரதேச செயலாளர் பிரிவுகளில் 332 அலகுகளுக்காக தரவுகளை இவர்கள் சேகரிப்பர். டிசம்பர் மாதத்துக்கு முன்னர் இலத்திரனியல் அடையாள அட்டை அறிமுகமாகும். இதன் மூலம் அடையாள அட்டைகளிலான குளறுபடிகள் நீங்குமென்றும் அவர் தெரிவித்தார்.

இம்முறை ஜீ. சீ. ஈ. சாதாரணதரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்குப் புதிய அடையாள அட்டைகள் வழங்கப்படும்.

2013 அக்டோபர் 31 ஆம் திகதி 16 வயதைப் பூர்த்தி செய்த மாணவர்கள் இதற்காக விண்ணப்பிக்கலாம்.

அதிபர்கள் ஊடாக தற்போது முதல் விண்ணப்பங்களை அனுப்பலாம்.

இருவாரங்களில் அடையாள அட்டை வழங்கப்படும் என்றும் சரத்குமார தெரிவித்தார்.

அதிபர்மார், மாணவர்கள் பெற்றோர் திணைக்களத்துக்கு வரத் தேவையில்லை என்றும் அவர் தெரிவித்தார்.

# காரைநகர் மருதபுரம் பகுதிக்கு மின் விநியோகம் ஆரம்பம்



(காரைநகர்)

காரைநகர் மருதபுர பிரதேசத்துக்கான மின்சாரவிநியோகம் நேற்று முன்தினம் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

இப்பிரதேச மக்கள் முன்னர் மின்சாரவிநியோகம் இன்றி தமது அன்றாட நடவடிக்கைகளை முன்னெடுக்கமுடியாது பல்வேறு சிரமங்களை எதிர் நோக்கி வந்தனர்.

இந்நிலையில் தற்போது இப்பிரதேசத்திற்கு மின்சாரம் வழங்கப்பட்டுள்ளமையால் தாம் மிக நன்மையடைந்துள்ளதாக அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

இந்நிகழ்வில் ஈ.பி.டி.பி யாழ். மாவட்ட அமைப்பாளர் கந்தசாமி கமலேந்திரன் கலந்து கொண்டு மின்சார விநியோகத்தை ஆரம்பித்துவைத்தார்.

இதன்பின்னர் இந்நிகழ்வில் அவர் உரையாற்றுகையில், யுத்தம் முடிவுக்கு கொண்டுவரப்பட்டு மக்கள் தமது சொந்த வாழ்விடங்களில் மீள்குடியேறப்பட்டுள்ளதுடன் மீள் குடியேற்றப்பட்டு வரும் மக்களுக்கான இலவச மின் இணைப்பு அரசால் மேற்கொள்ளப்பட்டு வருவதுடன், இவற்றை பெற்றுக் கொள்ளும் மக்கள், பிள்ளைகளின் கல்விவளர்ச்சி, கைத்தொழில் முயற்சிகளை சிறந்த முறையில் முன்னெடுப்பதுடன், மின்சார வளங்களை உரிய முறையில் பயன்படுத்த வேண்டும்.

அத்தோடு மகிந்தசிந்தனை வேலைத்திட்ட அடிப்படையில் வடக்கின் வசந்தம் அனைவருக்கும் மின்சாரம் என்ற நிலையில் வடமாகாணத்தில் அனைவருக்கும் மின்சாரம் வழங்கும் செயற்றிட்டம் முன்னெடுக்கப்படும் எனத்தெரிவித்தார்.

இந் நிகழ்வில் இலங்கை மின்சாரசபையின் பொறியியலாளர் ஞானகணேசன், காரைநகர் பிரதேசசெயலர், காரைநகர் பிரதேச சபை எதிக்கட்சித் தலைவரும் ஈ.பி.டி.பி காரைநகர் பிரதேச இணைப்பாளருமான வி. கண்ணன், மருதபுர பிரதேச மக்கள் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

## திட்டமிடல் செயலமர்வு

வடமாகாணத்தில் கல்வி வலயங்களில் ஆலோசனை வழிகாட்டல் சேவையில் ஈடுபடும் உத்தியோகத்தர்களுக்கான வழிகாட்டல் ஆலோசனை திட்டமிடல் செயலமர்வு இன்று வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணம் மருதனார்மடத்தில் அமைந்துள்ள வட மாகாண கல்வித்திணைக்கள கேட்போர் கூடத்தில் இடம் பெறவுள்ளது என வட மாகாண கல்வி அபிவிருத்தி மேலதிக கல்விப்பணிப்பாளர் கு.பிரேமகாந்தன் தெரிவித்துள்ளார்.

இத் திட்டமிடல் செயலமர்வில் வட மாகாணத்தில் உள்ள சகல வலயக் கல்வி அலுவலகங்களிலும் ஆலோசனை வழிகாட்டல் சேவையில் ஈடுபடும் ஆசிரிய ஆலோசகர்களையும், தொழில் வழிகாட்டல் அதிகாரிகளையும் உளவளத்துணையாளர்களையும் கலந்து கொள்ளுமாறு அவர் கேட்டுள்ளார். (160)

## மகா சிவராத்திரி

(வேலணை)

வேலணை - துறையூர் ஐயனார் சனசமூக நிலையத்தினால் மாகா சிவராத்திரி நிகழ்வுகள் வெகு சிறப்பாக நடத்தப்படவுள்ளன.

எதிர்வரும் 10 ஆம் திகதி காலை புதிய நூலக திறப்பு விழாவும், கௌரவிப்பு நிகழ்வுகளும், இரவு கலை நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன.(எஸ்.பி)

## ஓய்வூதிய நம்பிக்கை நிதிய வருடாந்த பொதுக்கூட்டம்

(வேலணை)

பகிரங்க சேவை ஓய்வூதியர் நம்பிக்கை நிதிய தீவகம் - தெற்கு (வேலணை) பிரதேச செயலகப்பிரிவின் வருடாந்தப் பொதுக்கூட்டம் எதிர்வரும் 19ஆம்திகதி செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்கு வேலணைப் பிரதேச செயலர் பணிமனை மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

சங்கத்தின் தற்போதைய தலைவர் ஓய்வு பெற்ற அதிபர் பொ. நடராஜா தலைமையில் நடைபெறவுள்ள இந்தக்கூட்டத்தில் பிரதம விருந்தினராக வேலணை பிரதேச செயலர் திருமதி. மஞ்சுளாதேவி சதீஷன், சிறப்பு விருந்தினர்களாக வேலணை பிரதேச செயலக கணக்காளர் பி.கஜேந்திரன் மற்றும் யாழ்.மாவட்ட ஓய்வூதிய சங்கத்தின் செயலாளர் சு.கணேசலிங்கம் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (05)

## மகளிர் தின நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

சர்வதேச கல்வியகம்,நோர்வே ஆசிரியர் சங்கம்,இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் ஆகியன இணைந்து நடத்தும் சர்வதேச மகளிர் தின நிகழ்வு இன்று வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு முல்லைத்தீவு மாங்குளம் மகாவித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

வலயச் செயலாளர த.யோகானந்தராஜா தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக துணுக்காய் வலயக் கல்விப்பணிப்பாளர் திருமதி.மாலினி வெனிற்றன், முன்னாள் யாழ். வலயக் கல்விப் பணிப்பாளரும் சர்வதேச பெண்கள் வலையமைப்பின் வளவாளருமான திருமதி.அருளேஸ்வரி வேதநாயகம் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (02)

## பல்கலைக்குத் தெரிவான மாணவனுக்கு உதவி

(வவுனியா)

வவுனியா பெரிய கோமரசன்குளம் மகாவித்தியாலயத்தில் இருந்து பல்கலைக்கழகத்திற்கு தெரிவு செய்யப்பட்ட மாணவனுக்கு பாடசாலை சமூகத்தினால் கல்வி ஊக்குவிப்பு நிதி வழங்கப்பட்டுள்ளது.

பெரிய கோமரசன்குளம் பாடசாலையில் இருந்து 2011 ஆம் ஆண்டு உயர்தர பரீட்சைக்குத் தோற்றிய இரவிச்சந்திரன் சிவகுமாரன் என்ற மாணவன் பேராதனை பல்கலைக்கழகத்தின் கலைப் பீடத்திற்கு தெரிவு செய்யப்பட்டுள்ள நிலையில் அவரது கல்விச் செயற்பாடுகளை முன்னெடுக்கும் நோக்கோடு பாடசாலையின் அதிபர், ஆசிரியர்களால் கல்வி ஊக்குவிப்பு நிதி வழங்கப்பட்டுள்ளதாக கல்லூரியின் முதல்வர் க. தனபாலசிங்கம் தெரிவித்துள்ளார்.

இம் மாணவன் பெரிய கோமரசன்குளம் பாடசாலையில் முதலாம் ஆண்டில் இருந்து கல்வி கற்று வரும் நிலையில் குடும்ப வறுமையை கருத்தில் கொண்டு இக்கல்வி ஊக்குவிப்பு நிதி வழங்கப்பட்டுள்ளதாகவும் கல்லூரி அதிபர் தெரிவித்தார். (160)

## அறிவுறுத்தல் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

வடமாகாணத்தில் 1000 பாடசாலை திட்டத்தின் கீழ் தெரிவு செய்யப்பட்ட பாடசாலை அதிபர்களுக்கும், ஊட்டப்பாடசாலை அதிபர்களுக்குமான அறிவுறுத்தல்க் கூட்டம் வடமாகண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி தலைமையில் எதிர்வரும் 13ஆம் திகதி காலை 9.30 மணிக்கு யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

இக்கலந்துரையாடலுக்கு சகல வலயக் கல்விப்பணிப்பாளர்களையும், சம்பந்தப்பட்ட பாடசாலை அதிபர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு வட மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் அறிவித்துள்ளார்.




— மூலபாரதி

## சுயநலமாம்!

வன்னிப் போரில் தமிழர் கொலையை
வன்மை யாகச் சாடும் அமெரிக்க
கன்னை ஓங்கச் செய்கூட் டமைப்பும்
குளிரில் ஹோட்டல் அறைமுடங் கிச்சாம்!

எண்ணெய் திரண்டு வருகை தாச்சி
எட்டாப் பிளத்தால் எந்தக் காலமும்
அண்ணே தமிழர் தலைவிதி யாமோ?
அடுக்கு மாமோ அசமந்தத் தூக்கம்?

அந்தக் காலம் தொட்டே தமிழரை
அங்கத்து வம்செய் அரசிய லாக்கம்
சொந்த வீட்டு நலனைப் பேணும்
சங்கதி எப்போ சனத்துக் குறைக்கும்?

## முரசின் இன்றைய பலன்

(08.03.2013 - வெள்ளிக்கிழமை)

நந்தன வருஷம் மாசி மாதம் 24 ஆம் திகதி.
நட்சத்திரம் உத்தராடம் சித்தம் பிற்பகல் 3.08 வரை. திதி ஏகாதசி காலை 07.42 வரை. துவாதசி 05.48 வரை.
இராகுகாலம் 10.54 - 12.24 வரை. சுபநேரம் 6.24 - 07.54 வரை.

சோதிடஞானி அவர்களால் கணிக்கப்பட்டது.

| | |
|---|---|
| மேடம் | செயல்கள் முழுமையான வெற்றி. எதிர்கால நம்பிக்கை கொள்வீர்கள். தொழில், திட்டமிட்ட வளர்ச்சி. ஆதாய பணவரவு. அறப்பணி ஈடுபாடு. |
| ரிஷபம் | மறதித் தொல்லை. சிலர் தேவையற்று பேசி உங்கள நேரத்தை வீணடிப்பர். தொழில் அனுகூலம். சராசரி பணவரவு. கிடைக்கும். புதிய அறிமுகம் வரும். |
| மிதுனம் | கோயில் பணிகளுக்கு அதிக நேரம். தொழில், அபிவிருத்தி. வரவு திருப்திகரம். உறவினர் வருகையால், வீட்டில் மகிழ்ச்சி. வெளியூர் நற்செய்தி. |
| கடகம் | பேச்சு செயலில் உறுதித்தன்மை. கூடுதல் உழைப்பில் தொழில் வளர்ச்சி. தாராள பணவரவு. கடனில் கொஞ்சம் தீரும். பழைய விவகாரத்தில் தீர்வு. |
| சிம்மம் | புதிய முயற்சிக்கு நண்பரின் உதவி கிடைக்கும். தொழில் பலம் பெறும். பணவரவு திருப்தி. உத்தியோகத்தில் கௌரவம் கிடைக்கும். |
| கன்னி | தகுதிக்கு மீறிய செயலில் ஈடுபடவேண்டாம். பகைமை குணம் உள்ளவர்களிடம் விலகுக. தொழில் மந்தம். குறைந்த பணவரவு. உடல்நலம் சிறக்கும். |
| துலாம் | அடுத்தவர் வியக்கும் வகையில் செயல்திறன். தொழிலில் அளப்பரிய நன்மை. வரவு திருப்திகரம். புத்திரர் விரும்பியது தருவீர்கள். நண்பர், |
| விருச்சிகம் | ஒருமுகத்தன்மையுடன் செயல்படுவது அவசியம். தொழில், விமர்சனம் பொருட்படுத்த வேண்டாம். கழன உழைப்பு. குறைந்த வரவு. குடும்ப ஆதரவு. |
| தனுசு | அன்பும், கருணையும். சார்ந்தவர்களின் கஷ்டம் தீர உதவுவீர்கள். தொழில் செழிப்பு. சேமிப்பு பெருகும். இல்லறத்துணை விரும்பியது செய்வீர்கள். |
| மகரம் | மனதில் சஞ்சலம் ஏற்படலாம். தொழில், இடையூறு சரி செய்வீர்கள். அளவான பணவரவு. சிகிச்சை தேவைப்படலாம். குடும்பத்தினர் ஆதரவு. |
| கும்பம் | உங்களிடம் உதவிபெற்ற ஒருவர், நன்றி மறந்து செயல்படுவார். தொழில், கூடுதல் முயற்சி தேவை. பணவரவு தாமதம். செலவுகள் அதிகரிக்கும். |
| மீனம் | பேச்சில் நிதானம் முக்கியம். தேவை நிறைவேறுவதில் தாமதம். போட்டி இருக்கும். தொழில், வேலைப்பளு. மிதமான பணவரவு. உதவி. |

# ஓய்வு முடிவில் மாற்றமில்லை



சர்வதேச கிரிக்கெட் அரங்கிலிருந்து ஓய்வு பெறுவதற்கு தீர்மானித்த திலான் சமரவீரவிற்கும் இலங்கை கிரிக்கெட்டின் தேசிய தெரிவுக்குழுத் தலைவர் சனத் ஜயசூரியவிற்கும் இடையில் நேற்று முன் தினம் இடம்பெற்ற சந்திப்பு தோல்வியில் முடிவடைந்துள்ளது. திலான் சமரவீர சர்வதேச கிரிக்கெட்டிலிருந்து ஓய்வுபெற தீர்மானித்துள்ளமையை மீண்டும் பரிசீலிக்கக் கோருவதே இந்தச் சந்திப்பின் நோக்கமாகவிருந்தது.

எனினும் திலான் சமரவீர தனது தீர்மானத்தை மாற்றிக் கொள்ள விரும்பவில்லை என இச்சந்திப்பின் பின்னர் கருத்து வெளியிட்ட சனத் ஜெயசூரிய தெரிவித்தார். திலான் சமரவீர சர்வதேச கிரிக்கெட் போட்டிகளில் இருந்து ஓய்வுபெறத் தீர்மானித்துள்ளதாக இலங்கை கிரிக்கெட் நிறுவனம் அறிவித்திருந்தது. கடிதமொன்றின் மூலம் அவர் இதனைத் தெரிவித்துள்ளதாக இலங்கை கிரிக்கெட் நிறுவனத்தின் செயலாளர் நிஷாந்த ரணதுங்க குறிப்பிட்டிருந்தார். இதனைத் தொடர்ந்து இலங்கை கிரிக்கெட் அணியின் தெரிவுக்குழுத் தலைவர் சனத் ஜெயசூரியவிற்கும், சமரவீரவிற்கும் இடையில் சந்திப்பொன்று இடம்பெற்றது. இதில் தனது ஓய்வு முடி வினைமாற்றப்போவதில்லை என விடாபிடியாக சமவீர இருந்தமையால் சந்திப்பு தோல்வியில் முடிவுற்றது.இதன் பின்னர் கருத்துத் தெரிவித்த சமரவீர, பங்களாதேக்ஷ் அணியுடனான டெஸ்ட் தொடருடன் ஓய்வு முடிவைஅறிவித்து புதிய வீரர்களுக்கு வாய்ப்பு வழங்கும் வகையில் திட்டமிட்டிருந்தேன். ஆனால், நான் நினைத்தது நடக்கவில்லை.தேர்வாளர்கள் பங்களாதேஷ் தொடருக்கான 20பேர் கொண்ட அணியை அறிவித்தபோதிலும் 15 பேர் கொண்ட அணியில் என்னை நீக்கியதன் பின்னர் இந்த முடிவு நான் எடுத்திருக்கின்றேன். எனது முடிவில் இனி எந்த மாற்றமும் இல்லை எனவும் அவர் தெரிவித்தார்.

# சுருண்டது இங்கிலாந்து



(டுனிடின்)

மார்ட்டின், வோக்னர் ஆகியோரின் பந்து வீச்சுக்கு ஈடு கொடுக்க முடியாமல் திணறிய இங்கிலாந்து அணி 167 ஓட்டங்களுக்குள் சுருண்டது.

இங்கிலாந்து, நியூசிலாந்து அணிகளுக்கிடையிலான மூன்று போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடரின் முதலாவது ஆட்டம் நேற்று முன்தினம் நியூசிலாந்தின் டுனிடினில் ஆரம்பமானது. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற நியூசிலாந்து அணி முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது. இருப்பினும் முதல் நாள் ஆட்டம் மழை காரணமாக முற்றுமுழுதாகக் கைவிடப்பட்டது. இரண்டாம் நாளில் முதல் இனிங்ஸிற்காக களமிறங்கிய இங்கிலாந்து அணி, மார்ட்டின், வோக்னர் ஆகியோரின் பந்து வீச்சை எதிர்கொள்ள முடியாமல் திண்டாடியதுடன் மளமளவென விக்கெட்டுக்களைப் பறிகொடுத்தது. ஒரு முனையில் விக்கெட்டுக்கள் சரிக்கப்பட்டபோதும், மறுமுனையில் ட்ரொட் நிதானமாக ஆடினார். இறுதியில் இங்கிலாந்து அணி முதல் இனிங்ஸிற்காக சகல விக்கெட்டுக்களையும் இழந்து 167 ஓட்டங்களுக்குள் சுருண்டது. இதில் ட்ரொட் 121 பந்துகளை எதிர் கொண்டு ஏழு பவுண்டரிகள் அடங்கலாக 45 ஓட்டங்களைப் பெற்றார். மற்றும் இயன் பெல் 24, மட் ப்ரியர், அண்டர்சன் தலா 23, ஸ்ரீபன் பின் 20 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் மார்ட்டின், வோக்னர் தலா நான்கு விக்கெட்டுக்களைச் சாய்த்தனர்.

பதிலுக்கு முதல் இனிங்ஸிற்காக ஆடிய நியூசிலாந்து அணி இரண்டாம் நாள் ஆட்டம் நிறைவுக்கு வந்தவேளை, விக்கெட் இழப்பின்றி 131 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. இதில் புல்ரொன் 46, ருதர்போட் 77 ஓட்டங்களுடன் களத்திலுள்ளனர்.

# இன்றைய ஆட்டங்கள்

(யாழ்ப்பூாணம்)

யாழ்ப்பாணக் கோட்ட மட்ட மெய்வல்லுநர் போட்டிகள் இன்றைய தினம் யாழ். துரையப்பா விளையாட்டு அரங்கில் இடம்பெறவுள்ளதாக போட்டி அமைப்பாளர்கள் தெரிவித்துள்ளனர்.

யாழ்ப்பாணக் கோட்ட மட்ட மெய்வல்லுநர் போட்டிகள் கடந்த 3ஆம் திகதி யாழ். துரைப்பா விளையாட்டுஅரங்கில்நடைபெற்றுக்கொண்டிருந்த வேளை மழை பொய்தமையால் போட்டிகள் அனைத்தும் தொடர்ந்து நடத்த முடியாத நிலை ஏற்பட்டது. இந்நிலையில் யாழ்ப்பாணக் கோட்ட மட்ட மெய்வல்லுநர் போட்டிகள் இன்றைய தினம் காலை 8.30 மணிக்கு நடைபெறவுள்ளதாகவும், போட்டிகளில் பங்குகொள்ளவுள்ள பாடசாலை வீர, வீராங்கனைகள் உரிய நேரத்திற்கு வருகை தந்து போட்டி சிறப்புற நடைபெற ஒத்துழைப்புத் தருமாறும் போட்டி அமைப்பாளர்கள் கேட்டுள்ளனர்.

(42)

# உள்நோக்கம் இல்லை



எனது உடற்தகுதி மற்றும் மனவலிமையை வலுப்படுத்துவதற்காகவே சிறிதுகால ஓய்வை எடுத்தேன். இதில் வேறு எந்த உள்நோக்கமும் இல்லை என மேற்கிந்தியத்தீவு அணியின் அதிரடி வீரர் கிறிஸ் கெய்ல் தெரிவித்தார்.

கடந்த ஆண்டு ஒக்டோபர் மாதம் இலங்கையில் நடந்த ருவென்ரி-20 உலக கோப்பை தொடருக்குப் பின், டிசம்பர் மாதம் அவுஸ்ரேலியாவில் நடந்த பிக்போஷ் லீக் தொடரில்விளையாடினேன். இந்த ஆண்டு அவுஸ்ரேலியாவுக்கு எதிரான ஒருநாள் மற்றும் ருவென்ரி-20 தொடரிலும் பங்கேற்றேன். தொடர்ச்சியான அட்டவணை காரணமாக நிறையப் போட்டிகளில் விளையாட வேண்டியதாயிற்று. எனது உடற்தகுதி மற்றும் மனவலிமையை வலுப்படுத்துவதற்காக சிறிது ஓய்வு தேவைப்பட்டது. இதனால் தான், சிம்பாப்வே அணிக்கு எதிரான ஒருநாள் மற்றும் ருவென்ரி-20 தொடரில் இருந்து விருப்ப ஓய்வை பெற்றுக் கொண்டேன். இந்த ஓய்வு, வரும் 12ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள சிம்பாப்வே அணிக்கு எதிரான டெஸ்ட் தொடரில் சாதிக்க ஊக்கம் அளிக்கும். தவிர, உடல் மற்றும் மனதளவில் டெஸ்ட் தொடருக்கு தயாராக முடியும் எனவும் அவர் தெரிவித்தார்.

# கொலையா? தற்கொலையா?

ஹைதராபாத்தில் நடந்த 2ஆவது டெஸ்ட் போட்டியில், அவுஸ்ரேலியா இன்னிங்ஸ் மற்றும் 135 ஓட்ட வித்தியாசத்தில் படுதோல்வி அடைந்ததை. அந்நாட்டு பத்திரிகைகள் கடுமையாக விமர்சித்துள்ளன. ஹைதராபாத்தில் நடந்தது கொலையா? கொலையா? என்று தலைப்புச் செய்தி வெளியிட்டுள்ள அவுஸ்ரேலியன் நாளிதழ் இது ஒரு குற்றச் செயல் என்பதில் எந்த சந்தேகமும் இல்லை. அவுஸ்ரேலிய ரசிகர்கள் பார்த்திருக்கக் கூடாத ஒரு கோர சம்பவம். இதில் சோகம் என்ன என்றால், ஆஸி. வீரர்களின் ஆட்டம் தற்கொலைக்கு ஒப்பானதாக இருந்தது என்று தாக்கியுள்ளது. சிட்னி மோர்னிங் ஹெரால்ட் உட்பட ஏனைய நாளிதழ்களும் ஆஸி. அணியை கடுமையாக விமர்சித்து செய்தி வெளியிட்டுள்ளன.

# கொழும்பில் ஆசிய தடகளம்

சென்னையில் நடைபெறவிருந்தஆசிய தடகளப்போட்டிகள் கொழும்பிற்கு மாற்றப்பட்டுள்ளன. இந்தப் போட்டிகள் மே 18ஆம் திகதி சென்னையில் இடம்பெறவிருந்தன.

எனினும் இந்த போட்டியில் இலங்கை வீரர்கள் கலந்துகொள்வதற்கு தமிழ் நாடு அரசாங்கம் எதிர்ப்பு தெரிவித்திருந்தது. இதனாலேயே இந்த போட்டிகளை கொழும்புக்கு மாற்றப்பட்டுள்ளது.

# நீடிக்க வேண்டும் டோனி

2019ஆம் ஆண்டுக்கான உலக கோப்பை கிரிக்கெட் போட்டி வரை இந்திய அணியின் கப்டனாக டோனி நீடிக்க வேண்டும் என்று கவாஸ்கர் கருத்து தெரிவித்துள்ளார்.

இங்கிலாந்துக்கு எதிரான டெஸ்ட் தொடரை இழந்த பின்பு கிடைத்த ஒருமாத இடைவெளியில் டோனி தன்னைத்தானே ஆய்வு செய்து நல்ல மாற்றம் கண்டுள்ளார். கப்டனாக அவரது அணுகுமுறையில் நம்பிக்கையான மாற்றம் ஏற்பட்டிருக்கிறது. அணியை மிகுந்த மன உறுதியுடன் வழிநடத்த தொடங்கி இருக்கிறார். தங்களது திறமைக்கு ஏற்ப விளையாடாமல் கவனக்குறைவாக செயற்படும் வீரர்களை கண்டறிந்து டோனி அவர்களின் தவறை உணர வைக்கிறார். டோனி தனது துடுப்பாட்டத்தில் மட்டுமின்றி விக்கெட் கீப்பிங் பொறுப்பிலும் நன்றாக செயற்படுகிறார்.

கப்டன் பதவியில் சிறப்பான மாற்றத்தை கண்டு இருக்கும் டோனியை, 2019 ஆம் ஆண்டு உலக கோப்பை போட்டி வரை தொந்தரவு செய்யாமல் கப்டனாக நீடிக்க வேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# வல்லவர்களின் ஒன்றிணைவு



அமெரிக்க நாட்டின் முன்னாள் குத்துச் சண்டை வீரர் மைக் டைசன், (வயது- 46). போட்டியின் போது, ஆக்ரோஷமான திறமையை வெளிப்படுத்துபவர். 1997இல் நடந்த, உலக சம்பியன் பட்டத்திற்கான போட்டியின் போது சக வீரர் ஹோலிபீல்டின் காதைக் கடித்து சர்ச்சை கிளப்பினார்.

பரம எதிரிகளான இவர்கள் மீண்டும் சந்தித்தனர். அமெரிக்காவில் உள்ள சிக்காக்கோவில் நடந்த தனியார் நிகழ்ச்சி ஒன்றில் பங்கேற்றார் டைசன். சிறிது நேரம் கழித்துவந்த, ஹோலியை இவர் நேருக்கு நேராக சந்தித்தார். தவிர. பார்த்தவுடன், சிரித்த டைசன், இவரை கட்டியணைத்தார்.

இது குறித்து ஹோலி கூறுகையில் நானும், டைசனும் பரம எதிரிகள் என்பதை அனைவரும் அறிவர். உலகத்தின் இரண்டு திறமையான வீரர்கள், சந்தித்து ஒருவரையொருவர் மன்னித்து விட்டோம். இந்த சந்திப்பின் மூலம், உலகிற்கு இந்த செய்தியை தெரியப்படுத்தியுள்ளோம். எங்களின் கடந்த காலங்களைப் பற்றி, மக்கள் நினைத்துப் பார்க்க வேண்டாம். தற்போது, இருவரின் வாழ்க்கையும் மாறிவிட்டது என்றார்.

டைசன் கூறுகையில், ஹோலியை சந்திக்க வேண்டும் என நினைத்திருந்தேன். தற்போது பார்த்துவிட்டேன். இவரை அதிகமாக நேசிக்கிறேன். என் வாழ்வின், மீதமுள்ள நாட்களிலும், இவருடன் தொடர்பு வைத்துக் கொள்ள விரும்புகிறேன் என்றார்.

# இன்று முதல் டெஸ்ட்

இலங்கை-பங்களாதேஷ் அணிகளுக்கிடையிலான இரண்டு போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடரின் முதல் ஆட்டம் இன்றைய தினம் காலியில் நடைபெறவுள்ளது. மத்தியூஸ் தலைமையில் இலங்கை அணி முதல் முறையாக களமிறங்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# சேவாக் நீக்கம்



(புதுடில்லி)

கண்களில் கண்ணாடி அணிந்து கொண்டு களமிறங்கும் அதிரடி ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் விரேந்திர சேவாக் இந்திய டெஸ்ட் அணியிலிருந்து நீக்கப்பட்டார்.

இந்திய அணியில் வேறு எந்தவித மாற்றமும் செய்யப்படவில்லை. இங்கிலாந்துக்கு எதிராக கடந்த தொடரில் அகமதாபாத்தில் சதம் எடுத்த சேவாக், அதன் பின்னர் 25, 30, 9, 23, 49, 0, 2, 19 மற்றும் 6. என்பதுதான் அவரின் கடந்த இனிங்ஸ்களில் பெற்ற ஓட்டங்கள்.

இந்நிலையில் அவுஸ்ரேலிய அணிக்கெதிரான 3,4ஆவது டெஸ்ட் போட்டிக்கான இந்திய அணி நேற்று அறிவிக்கப்பட்டது. சேவாக்கிற்குப் பதிலாக எந்தவொரு வீரரும் இணைத்துக் கொள்ளப்படவில்லை. ஏற்கனவே அறிவிக்கப்பட்ட அணியில் ராஹனே அல்லது தவான் ஆகியோரில் ஒருவர் முரளி விஜய்யுடன் ஆரம்பத் துடுப்பாட்ட வீரராக களமிறங்குவார்கள் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

## தென்னாபிரிக்கத் தொடரில் சேவாக் முடிவு வேண்டும் என்கிறார் ராவிட்

தென்னாபிரிக்க அணி தொடரில் சேவாக் ஆடுவது குறித்து தற்போதே முடிவு செய்ய வேண்டும் என முன்னாள் கப்டன் ராவிட் தெரிவித்துள்ளார். இந்த ஆண்டு இறுதியில் நடைபெற இருக்கும் தென்னாபிரிக்க டெஸ்ட் தொடரில் தொடக்க ஆட்டக்காரராக சேவாக் விளையாடுகிறாரா? என்பதை தற்போது தேர்வாளர்களும், அணி நிர்வாகமும் முடிவு செய்ய வேண்டும். சேவாக் விளையாடாவிட்டால் அவருடைய இடத்தை நிரப்புவதை அறிய சில வீரர்களுக்கு, அவுஸ்ரேலியாவுக்கு எதிரான தொடரில் வாய்ப்பு அளிக்க வேண்டும். சேவாக் சிறப்பாக விளையாடக்கூடியவர். அவர் எந்தவொரு அணியில் இடம் பிடித்தாலும் அந்த அணிக்கு மிகப்பெரிய சொத்தாவார்.

ஆனால் உண்மையை சொல்லப்போனால் தற்போது அவரது ஆட்டம் சிறப்பாக இல்லை. கடந்த இரண்டு மூன்றுஆண்டுகளாக வெளிநாட்டு மண்ணில் அவர் சிறப்பாக விளையாடவில்லை எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# ஸ்ரார் ஒப் வடமராட்சி மென்பந்து கிரிக்கெட் இறுதியில் ஞானம்ஸ், கழுகுகள்



ஞானம்ஸ்



கழுகுகள்

(நெல்லியடி)

ஸ்ரார் ஒப் வடமராட்சி மென்பந்து கிரிக்கெட் தொடரின் இறுதிப் போட்டிக்கு நெற்கொழு கழுகுகள் மற்றும் ஞானம்ஸ் அணிகள் தகுதிபெற்றுள்ளன.

கோலின்ஸ் விளையாட்டுக்கழகத்தினால் நடத்தப்பட்டு வரும் ஸ்ரார் ஒப் வடமராட்சி மென்பந்து கிரிக்கெட் தொடரின் அரையிறுதிப் போட்டி கடந்த 2,3 ஆம் திகதிகளில் கொலின்ஸ் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்றது.

இப்போட்டித் தொடரின் முதலாவது அரையிறுதி ஆட்டத்தில் இமையாணன் இளைஞர் அணியை எதிர்த்து நெற்கொழு கழுகுகள் அணி மோதியது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் ஆடிய கழுகுகள் அணி, 15 ஓவர்கள் நிறைவில் ஏழு விக்கெட்டுக்களை இழந்து 104 ஓட்டங்களைப் பெற்றது. இதில் செந்தூரன் 25 ஓட்டங்களைப் பெற்றார். பந்து வீச்சில் கவிதரன் நான்கு, புவிதரன் இரண்டு விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

பதிலுக்கு 105 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய இமையாணன் இளைஞர் அணி, ரமேஸின் பந்து வீச்சுக்கு ஈடுகொடுக்க முடியாமல் மளமளவென விக்கெட்டுக்களைப் பறிகொடுத்தது. இறுதியில் இமையாணன் அணி 11.3 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்களையும் இழந்து 57 ஓட்டங்களைப் பெற்றுத் தோல்வியைத் தழுவியது. இதில கவிதரன் 25, மகிந்தன் 09 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் ரமேஸ் நான்கு, செந்தூரன், நந்தகோபன் ஆகியோர் தலா இரண்டு விக்கெட்டுக்களை வீழ்த்தினர். இப்போட்டியின் ஆட்டநாயகனாக கழுகுகள் அணியைச் சேர்ந்த செந்தூரன், போட்டியின் சிறந்த பந்து வீச்சாளராக அதே அணியைச் சேர்ந்த ரமேஸ் தெரிவு செய்யப்பட்டனர்.

தொடர்ந்து நடைபெற்ற இரண்டாது அரைஇறுதி போட்டியில் அல்வாய் நியூபவர் அணியை எதிர்த்து ஞானம்ஸ் அணி மோதியது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் ஆடிய ஞானம்ஸ் அணி 15 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 66 ஓட்டங்களைப் பெற்றது. இதில் சுகந்தன் 17, விஜயகுமார் 12 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் நிவந்தன் நான்கு, பிரகாஸ் மூன்று விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

பதிலுக்கு 67 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய நியூபவர் அணி, ஞானம்ஸ் அணியின் பந்து வீச்சுக்கு ஈடுகொடுக்க முடியாமல் மளமளவென விக்கெட்டுக்களைப் பறிகொடுத்தது. இறுதியில் நியூபவர் அணி 14 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 49 ஓட்டங்களைப் பெற்றுத் தோல்வியைத் தழுவியது. இதில் பிரனாலன், பிரகாஸ், பகிந்தன் ஆகியோர் ஒன்பது ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் குணசீலன் மூன்று, சுதர்சன், சேந்திரன் ஆகியோர் தலா இரு விக்கெட்டுக்களை வீழ்த்தினர். போட்டியின் ஆட்டநாயகனாக ஞானம்ஸ் அணியைச் சேர்ந்த சேந்திரன், ஆட்டத்தின் சிறந்த பந்து வீச்சாளராக நியூபவர் அணியைச் சேர்ந்த நிவந்தன் தெரிவு செய்யப்பட்டனர். இறுதிப் போட்டி குறித்த விபரம் பின்னர் அறிவிக்கப்படும் என போட்டி அமைப்பாளர்கள் தெரிவித்தனர். (12)

## விளையாட்டுச் செய்திகள்

### இல்ல மெய்வல்லுநர்

(பருத்தித்துறை)

வட இந்து ஆரம்பப் பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி நாளை பிற்பகல் 1.30 மணிக்கு பாடசாலை மைதானத்தில் நடைபெறவுள்ளது. பாடசாலை அதிபர் த. ரவீந்திரன் தலைமையில் நடைபெறவுள்ள இப்போட்டி நிகழ்வின் பிரதம விருந்தினராக ஈ.பி.டி.பி.யின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சில்வெஸ்திரி அலன்ரின், சிறப்பு விருந்தினராக ஈ.பி.டி.பி.யின் வடமராட்சி அமைப்பாளர் ஐ.ஸ்ரீரங்கேஸ்வரன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (109)

# கோட்ட மட்ட வலைப்பந்து யூனியன் கல்லூரி சம்பியன்



(தெல்லிப்பளை)

தெல்லிப்பளை கல்விக் கோட்ட பாடசாலை அணிகளுக்கிடையே இடம்பெற்ற 17 வயதுப் பிரிவினருக்கான வலைப்பந்தாட்டப் போட்டியில் தெல்லிப்பளை யூனியன் கல்லூரி அணி சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றிக் கொண்டது.

தெல்லிப்பளை யூனியன் கல்லூரி மைதானத்தில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற இறுதிப் போட்டியில் தெல்லிப்பளை யூனியன் கல்லூரி அணியும் வயாவிளான் மத்திய கல்லூரி அணியும் மோதிக் கொண்டன.

இப் போட்டியில் எதிர்பார்க்கப்பட்டளவுக்கு யூனியன் கல்லூரிக்கு எதிர்ப்பு இல்லாமையால் ஆரம்பம் முதல் மைதானத்தில் தனது ஆதிக்கத்தை நிலைநாட்டிக் கொண்டிருந்தது.

முதல் பாதி ஆட்டத்தில் யூனியன் கல்லூரி 11:04 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி பெற்றது. இரண்டாம் பாதி ஆட்டமும் யூனியன் கல்லூரிக்கு சாதகமாக அமைய ஆட்ட நிறைவில் தெல்லிப்பளை யூனியன் கல்லூரி அணி 14:07 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி பெற்று கோட்ட மட்டச் சம்பியனாக தெரிவு செய்யப்பட்டது.

இந்நிலையில், 19 வயதுப் பிரிவினருக்கான போட்டியிலும் தெல்லிப்பளை யூனியன் கல்லூரி அணி கோட்ட மட்டச் சம்பியன் பட்டம் வென் றமை குறிப்பிடத்தக்கது.

இப்போட்டி நிகழ்வில் கோட்ட மட்டத்தைச் சேர்ந்த கல்வி அதிகாரிகள், அதிபர்கள், ஆசிரியர்கள், நலன்விரும்பிகள், இரசிகர்கள் எனப் பலர் கலந்து கொண்டு போட்டிகளைக் கண்டு களித்தனர். (93)

# சுகாதார அமைச்சு பணியாளர்களுக்கிடையில் அனுராதபுரத்தில் மென்பந்து கிரிக்கெட்

(யாழ்ப்பாணம்)

நட்புறவை ஏற்படுத்தும் வகையில் சுகாதார அமைச்சின் கீழ் பணியாற்றும் பணியாளர்களுக்கிடையிலான மென்பந்து கிரிக்கெட் தொடர் நாளையும், நாளை மறுதினமும் அனுராதபுரம் நீர்ப்பாசனத் திணைக்கள மைதானத்தில் நடைபெறவுள்ளது.

அணிக்கு ஆறு பேர் கொண்ட இப்போட்டித் தொடரில் சுகாதார அமைச்சின் கீழ் இயங்கும் வடபகுதியைச் சேர்ந்த நிறுவனங்களுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டிருப்பதாகத் தெரிய வருகின்றது. இப்போட்டித் தொடரில் சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றும் அணிக்கு வெற்றிக் கிண்ணமும் 25 ஆயிரம் ரூபா பணமும், இரண்டாம் இடத்தைப் பெற்றுக் கொள்ளும் அணிக்கு வெற்றிக் கிண்ணமும் 15ஆயிரம் ரூபா பணமும் வழங்கப்படும் என போட்டி அமைப்பாளர்கள் தெரிவித்துள்ளனர். (பா)

# பிரதேச மட்ட கால்பந்து காலிறுதியில் துணைவி நியூஸ்ரார்

(வட்டுக்கோட்டை)

சங்கனைப் பிரதேச செயலக மட்ட கால்பந்தாட்டத் தொடரின் காலிறுதிப் போட்டிக்கு துணைவி சென். நியூஸ்ரார் அணி தகுதிபெற்றுள்ளது.

சங்கானைப் பிரதேச செயலக மட்ட விளையாட்டு விழாவின் ஓர் அங்கமாக தற்போது பெரு விளையாட்டுப் போட்டிகள் நடைபெற்று வருகின்றது. ஆண்களுக்கான கால்பந்தாட்டப் போட்டி கடந்த 2ஆம் திகதி வட்டுக்கோட்டை தொழில்நுட்பக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

இதில் துணைவி சென். நியூஸ்ரார் அணியும், அராலி பாரதி அணியும் மோதின. இறுதி வரை பரபரப்பாக நடைபெற்ற இப்போட்டியில் இரு அணிகளும் போட்டி நிறைவடையும் வரை கோல் எதனையும் பெற்றுக்கொள்ளவில்லை. இறுதியில் தண்ட உதை மூலம் வெற்றிதோல்வி தீர்மானிக்கப்பட்டது. இதில் நியூஸ்ரார் அணி 4.3 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று காலிறுதிப் போட்டிக்குத் தகுதிபெற்றது.

இதேவேளை, ஜேம்ஸ், வளர்மதி, அண்ணா, சில்வஸ்ரார் திருமகள் ஆகிய அணிகள் காலிறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. காலிறுதிப் போட்டிகள் எதிர்வரும் 16ஆம் திகதி வட்டுக்கோட்டை தொழில்நுட்பக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளன.


# ஹியூகோ சாவேஸ்; ஒரு சகாப்தத்தின் முடிவு

1999 தொடங்கி வெனிசூலாவின் ஜனாதிபதியாக நீடித்துவரும் ஹியூகோ சாவேஸ் (ஜூலை 28, 1954-மார்ச் 5, 2013) புதனன்று அதிகாலை மரணமடைந்தார். தலைநகரம் கரகாஸில் நடைபெறவிருக்கும் அவருடைய இறுதி ஊர்வலத்தில் பல இலட்சக்கணக்கான மக்கள் கலந்துகொள்வார்கள் என்று வெனிசூலா எதிர்பார்க்கிறது. அவர்களில் பலர் சாவேஸின் பல்வேறு மக்கள் நலத் திட்டங்களால் பயன் பெற்றவர்கள். சாவேஸின் புகைப்படம் தாங்கிய பதாகைகளை ஏந்தியபடி வீதிகளில் இவர்கள் கதறியழுவதை உலகம் முழுவதும் தொலைக்காட்சிகள் கடந்த இரு நாட்களும் காண்பித்தபடி இருந்தன.

கணக்கு வைத்துக்கொள்ள முடியாத அளவுக்குப் பல முறை மரணமடைந்துவிட்ட தனது 86 வயது அரசியல் ஆசானை சாவேஸ் முந்திகொண்டுவிட்டார். 2005ல் கிரான்மாவுக்கு அளித்த பேட்டியொன்றில் "ஃபிடல் எனக்குத் தந்தையும் தோழரும் ஆவார்." என்று சாவேஸ் குறிப்பிட்டுள்ளார். கிட்டத்தட்ட இருபது ஆண்டுகளாக அரசியல் மேடையில் இரட்டையர்கள் போல் இருவரும் கம்பீரமாக வலம் வந்ததை மகிழ்ச்சியுடனும் கலக்கத்துடனும் தரிசித்தவர்கள் ஏராளம்.

ஃபிடல் காஸ்ட்ரோவுக்கும் ஹியூகோ சாவேஸுக்கும் பல ஒற்றுமைகள் உள்ளன. காஸ்ட்ரோவைப் போலவே சாவேஸும் ஆயுதப் போராட்டத்தைக் கையில் எடுத்தார். இருவரும் அரசுக்கு எதிராகக் கிளர்ச்சியில் ஈடுபட்டனர். இருவரும் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டனர். விடுவிக்கப்பட்ட பிறகு இருவருமே தங்கள் தேசத்தின் விடுதலைக்காகத் தங்கள் வாழ்நாளை அர்ப்பணித்துக்கொண்டனர்.

காஸ்ட்ரோ தனது பலத்தை கியூபாவின் தேசத் தந்தையான ஹொசே மார்த்தியிடம் இருந்து பெற்றுக்கொண்டார். சாவேஸ் வெனிசூலாவின் போராளியான சிமோன் பொலிவாரைத் தனது முன்மாதிரியாக வரித்துக்கொண்டார்.



மார்த்தியை ஓர் சக்திவாய்ந்த அடையாளமாக காஸ்ட்ரோ உருமாற்றியதைப் போலவே பொலிவாரின் பெயரால் மக்கள் நலத் திட்டங்களை அறிமுகம் செய்து அவரை லத்தீன் அமெரிக்கா முழுமைக்கும் கொண்டு சேர்த்தார் சாவேஸ்.

மக்களை வழிநடத்த இருவரும் கையாண்ட சித்தாந்தமும் ஒன்றேதான். சீனாவுக்கு ஏற்றபடி மார்க்சியத்தைப் பொருத்திப் பார்த்த மாவோவைப் போல், ரஷ்யாவுக்கு ஏற்றபடி மார்க்சியத்தைத் தகவமைத்த லெனினைப் போல் லத்தீன் அமெரிக்காவுக்கான நடைமுறை சோஷலிசப் பாதையை வகுத்ததில் காஸ்ட்ரோவுக்கும் சாவேஸுக்கும் மிகப் பெரிய பங்கு உண்டு. இருவரும் இதற்காகச் சந்தித்த எதிர்ப்புகள் அசாதாரணமானவை. மருத்துவம், கல்வி, அயலுறவு என்று கியூபாவும் வெனிசூலாவும் பல முக்கியதுறைகளில் ஒன்றிணைந்து நடைபோட்டன.

இருவருக்குமே எதிரி ஒன்றுதான். நோக்கமும் ஒன்றே. அமெரிக்க வல்லரசின் ஆதிக்கத்தைக் குறைந்தபட்சம் லத்தீன் அமெரிக்காவிலும் முடிந்தவரை உலகம் முழுவதிலும் இருந்து அகற்றவேண்டும் என்பதுதான் அது. தங்கள் எதிரியை இருவரும் அதிகபட்ச சீற்றத்துடனும் பலத்துடனும் கையாண்டார்கள். அதனாலேயே ஏராளமான எதிரிகளையும் எதிர்ப் பிரசாரங்களையும் சம்பாதித்துக்கொண்டனர்.

இடதுசாரிகளிலேயேகூட பலர் ஃபிடல் காஸ்ட்ரோவை ஒரு கம்யூனிஸ்டாகவோ சோஷலிஸ்டாகவோ ஏற்கமாட்டார்கள். மார்க்சியத்தை அவர் தத்துவார்த்தரீதியாக எந்த வகையிலும் செழுமைப்படுத்தவில்லை என்பது அவர்கள் முன்வைக்கும் காரணங்களில் ஒன்று. 21ஆம் நூற்றாண்டு சோஷலிசத்தை முன்னெடுத்த சாவேஸையும் இதே காரணத்தைச் சுட்டிக்காட்டி நிராகரித்தவர்கள் பலர்.

- மருதன் -

தெளிவான அரசியல் பார்வையுடன் இயங்கும் ஒவ்வொருவருக்கும் நண்பர்களும் எதிரிகளும் இருக்கவே செய்வார்கள். யார் ஏற்கிறார்கள், யார் நிராகரிக்கிறார்கள் என்பதைப் பொறுத்தே அவருடைய பணிகள் மதிப்பிடப்படுகின்றன. இந்த அளவுகோலின்படி, காஸ்ட்ரோவைப் போலவே சாவேஸும் பெரும்பான்மை மக்களின் தலைவராகவும் தோழராகவும் திகழ்கிறார். அதனால்தான் தங்கள் நாட்டு எல்லைகளைக் கடந்தும் இந்த இருவருக்கும் பெரும் திரளான மக்கள் ஆதரவு திரண்டு நிற்கிறது.

ஹியூகோ சாவேஸின் மரணம் லத்தீன் அமெரிக்காவுக்கு மட்டுமல்ல, ஏகாதிபத்திய எதிர்ப்பு மனம் கொண்ட உலகம் முழுவதற்குமே ஈடுசெய்யமுடியாத பேரிழப்பு.

# பெண்கள் எதிர்கொள்ளும் சவால்கள்!

- சுபா விஜேசிறிவர்தன



கிட்டத்தட்ட எந்த சமூக - அரசியல் சூழலிலும் பெண்கள் எதிர்கொள்ளும் சவால்கள் இயல்பாகவே தனித்துவமானவை - வெறுமனே பெண்கள் என்கிற தகுதியினை அடிப்படையாகக் கொண்டிருப்பதால். சமூகம் மற்றும் சமூகக் கட்டமைப்புகள் குறிப்பாகச் சட்ட அமுலாக்கத்தை பொறுத்தவரை பெண்கள் தினசரி வாழ்க்கையின் அடிப்படையில் பாகுபாடு மற்றும் வன்முறைகள் என்பனவற்றால் பலவீனமடையக் கூடியவர்கள் எனக்கருதி பெண்களை தவிர்த்துவிட்டு ஆணாதிக்கத்தையே தொடருகின்றன.

இந்தக் கட்டமைப்புகள் பெண்களின் மனித உரிமைகளை திறமையாக மீறுவது மட்டுமன்றி, அதன் பின்விளைவாக அவைகள் பெண்களை அதிகாரமற்றவர்களாகவும் விட்டுச் செல்கின்றன, அது பெண்கள் சட்டப்படி தங்கள் உரிமைகளை மீளக்கோருவதற்கு வேண்டிய சிறிதளவு சக்தியை வழங்கி அல்லது தங்கள் உரிமைகளுக்காக போராட்டம் நடத்த வேண்டிய நிலையில் அவர்களைத் தள்ளிவிட்டிருக்கிறது.

இந்தச் சூழலில் பெண்கள் மனித உரிமைப் பாதுகாவலர்கள் தனித்துவமான சவால்களுக்கு முகம் கொடுக்கவேண்டியுள்ளது. மனித உரிமைகளைப் பாதுகாப்பதற்காகவும் மற்றும் மனித உரிமை மீறல்களுக்கு எதிராகப் போராடுவதற்காகவும் அவர்கள் இயங்கிக் கொண்டிருப்பது, தாங்களே பாகுபாட்டை எதிர்கொண்டுள்ள மற்றும் அதனோடு பொருந்திப்போவதற்கு பெரும்பாலும் போதுமான முக்கியத்துவமற்ற குரல்களைக் கொண்டிருப்பதாக பெண்களை எடைபோட்டுவரும் ஒரு உலகத்திலிருந்துதான்.

பெண்கள் மனித உரிமைப் பாதுகாவலர்களின் சர்வதேச மாநாடு 2005இல் கொழும்பில் நடைபெற்றபோது அதில் உலகெங்கிலுமுள்ள பெண்கள் மனித உரிமைப் பாதுகாவலர்கள் எதிர்கொள்ளும் பிரதானமான நான்கு முக்கிய துஷ்பிரயோகங்கள் இனங்காணப்பட்டன;

- பொறுப்புக்கூறல் மற்றும் நீதிவிசாரணைகள் என்பனவற்றில் உள்ள அரச - அடிப்படையிலான வன்முறை சார்ந்த துஷ்பிரயோகங்கள்,
- அரசியல் அதிகாரத்தை அடைவதற்கு வழிதேடும் அடிப்படைவாத அமைப்புகளின் வளர்ச்சியும் உயர்ச்சியும்,
- பெண்களை அச்சுறுத்தி அவர்களின் உடலுக்கும் மற்றும் நற்பெயருக்கும் களங்கம் விளைவிக்கும் வகையிலான பாலியல் அடிப்படையிலான தாக்குதல்களைப் பயன்படுத்தல்.

மற்றும்

- சமூகங்கள் மற்றும் குடும்பங்கள் மீது பிரயோகிக்கப்பட்டிருக்கும் துஷ்பிரயோகங்களுக்கு தேவையான பரிகாரங்கள்.

இந்த மாநாட்டின் ஒரு அமர்வின் முடிவில் சர்வதேச மன்னிப்புச்சபையின் செயலாளர் நாயகம் ஐரின் கான் இப்படிக் கூறினார்; "பெண்கள் மற்றும் ஆண்கள் ஆகிய நாங்கள் அனைவரும் பெண்களின் உரிமைகளைப் பாதுகாப்பவர்கள் மற்றும் சகல மனித உரிமைகளையும் பாதுகாக்கும் பெண்கள் ஆகியோரின் பாதுகாப்புக்காக கோரிக்கை எழுப்ப வேண்டும், அவர்கள் தாக்கப்படும்போது நீதியை நிலைநாட்ட வற்புறுத்த வேண்டும் மற்றும் அவர்களுக்கு உரிய அங்கீகாரம் கிடைப்பதற்குப் போராட வேண்டும்".

# ஆசியப் பகுதியில் வசிப்பது

ஆசியப் பகுதியில் வசிப்பது
நீர்நிலைகளில் மாசடைந்த கழிவுகளை
பார்த்துக் கொண்டிருப்பது
கொஞ்சம் மிளகுத்தூள் தூவிய உணவுகளை
வண்ணக் காகிதங்களில் உருவங்கள்
செய்பவர்களை பொய்க்கால் குதிரைகளை
சன்னியாசிகள் மற்றும்
சுடுமண் சிற்பங்களை அனுசரிப்பது
சரும வியாதிகளிலிருந்து ஒரு தரப்படுத்தப்பட்ட
கிருமிநாசினியை எதிர்பார்த்துக் கிடப்பது
பிறகு அதன் நதிக்கரைவாசிகள் தொலைதூரப்
பொட்டல்களுக்குச் சொன்ன
நியாயங்களுக்கு ரத்தம் சிந்துவதும்தான்
அதைவிடப் பிச்சைக்காரர்களைக் கடந்துபோய்
ஒரு தைலமரப்புட்டியை விலைக்கு வாங்கலாம்
தாமிர நிறப்பெண்களைப் பின்புறமாகத் தொடர்வதும்
குழந்தைகளை ஏற்றுமதிக்குத்
தயார் செய்யும் கூடங்களை உள்ளடக்கியதும்
தன் சொந்த நாணயத்தை அதன் எல்லைக்கு வெளியே
மதிப்பிட முடியாத சோகங்களைக் கொண்டதும்
கானகங்களை அழிக்க இயலாமல்
குடியிருப்புகளைச் சிதைத்து
சாலைகளை அகலப்படுத்திக் கொண்டிருப்பதும்தான்
சுருக்கமாகச் சொன்னால்
ஆசியப் பகுதிகளில் வசிப்பது
தலைக்கு மேல் தொப்பியை
சரியாக வைத்துக்கொள்ள
தாடைகளிலிருந்து பற்களைக் கழற்றுவது

- யவனிகா ஸ்ரீராம் -




4 - (2)


# பத்தாண்டுகளின் பத்து இயக்குனர்கள்

சார்லஸ்

## அல்பொன்ஸோ குவாரோன்


ஹாரி போட்டர் தொடரில் முதல் இரு படங்களையும் எடுத்த கிறிஸ் கொலம்பஸ் என் விருப்பத்துக்குரிய அமெரிக்க இயக்குனர்களில் ஒருவர். மிகச் சிறந்த குடும்பக் காதல் கதைகளையும் (nine months, mrs. doubtfire, stepmom, bicentennial man), சிறுவர் சாகஸமான "ஹோம் அலோன்" படங்களையும் செய்தவர். இருந்தபோதிலும், ஹரி போட்டர் புத்தகத்தைப் படமாக்கும் பொறுப்பை அவரிடம் கொடுத்தது மிகத் தவறான தேர்வு என்றே நினைக்கிறேன். அவருடைய எல்லாப் படங்களுமே கொஞ்சம் மென்மையானவை. ஜே.கே.ரோவ்லிங் எழுத்தில் படைத்த, இருள் சூழ்ந்த பாதாள கற்பனை உலகை அவரால் திரையில் சரிவர உருவாக்கிக்காட்டவே முடியவில்லை.






மூன்றாவது புத்தகமான "harry potter and the prisoner of azkaban", அல்போன்ஸோ குவாரோன்-யிடம் ஒப்படைக்கப்பட்டது ஒரு துணிச்சலான முடிவே. ஆனால் அவர் அதை எதிர்பார்த்ததிற்கும் மேலே சிறப்பாகச் செய்தார். கிறிஸ்டோபர் நோலான் 'Batman' இற்குச் செய்ததை அல்போன்ஸோ குவாரோன் "ஹரி போட்டர்"-இற்குச் செய்தார் என்று சொல்லலாம். அதன் பிறகு வந்த எல்லா படங்களும் அவரின் வழியையே பின்பற்றின. ஆயினும் இதுவரை வந்த எல்லா ஹரி போட்டர் படங்களிலும் குவாரோன் இயக்கியதே சிறந்தது என்பதே பொதுவாக விமர்சகர்கள் மற்றும் ரசிகர்களின் கருத்தாக இருக்கிறது.

அல்போன்ஸோ குவாரோன் இதுவரை இயக்கியதில் ஆகச் சிறந்த படம், "children of men". ஒரு இயக்குனரால் செய்யக்கூடிய அதிகபட்ச தொழில்நேர்த்தியை இந்தப் படத்தில் செய்துகாட்டியிருக்கிறார் அவர். உலகமெங்கிலும் உள்ள எல்லா கைதேர்ந்த இயக்குனர்களுக்கும் விடுக்கப்பட்ட வெளிப்படையான சவால் இந்தப் படம் என்று நான் நினைக்கிறேன். ஒரு கற்பனையான உலகை மிக நம்பகமானதாக மாற்றிக்காட்டும் மேஜிக் வித்தையை அவர் உருவாக்கிக் காட்டியிருக்கிறார். வருங்கால்த்தில் நடப்பது போன்ற படங்களை பலர் எடுத்திருந்தாலும், இந்தப் படத்தில் ஒரு முக்கியமான வேறுபாடு இருக்கிறது. வழக்கமாக இயக்குனர்கள், தாங்கள் உருவாக்கும் படச்சட்டத்துக்குள் ஒரு இல்லாத உலகைப் படைத்து அதை உயிரோட்டம் உள்ளதாக மாற்றுவார்கள். ஆனால் அல்போன்ஸோ, ஒரு கற்பனை உலகை முதலில் உருவாக்கிவிட்டு அதற்குள் கமெராவை தன்னிச்சையாக அலையவிட்டது போன்ற உணர்வைப் பார்வையாளர்களுக்கு உருவாக்குகிறார். அதுதான் இந்தப் படத்தின் தனிச் சிறப்பு.





2027ஆம் ஆண்டில் நடக்கிறது கதை. ஆனால் வளர்ச்சியடைந்த உலகமாக அது இல்லை, அழுகிக்கொண்டிருக்கும், கொஞ்சம் கொஞ்சமாக இறந்துகொண்டிருக்கும் உலகையே நாம் காண்கிறோம். காரணம், ஒட்டுமொத்த மனிதக் குலமும் குழந்தைப் பேறை இழந்துவிட்டது. பல ஆண்டுகளாக மெல்ல மெல்ல அது நடந்திருக்கிறது. முதலில் தானாகவே கருக்கலைந்து போவது அதிகரித்து, இறுதியில் பெண்கள் தாய்மையடைவதே முற்றிலும் நின்றுபோயிருக்கிறது. சுற்றுச்சூழலின் மாசுகளும், நுண்ணுயிரியல் பயன்பாடுமே இந்த விபரீதத்துக்குக் காரணம் என்று ஒருசாரார் கணிக்க, கடவுளின் கோபத்துக்கு மனிதன் ஆளானதே இந்த பரிதாபத்துக்குக் காரணம் என்று இன்னொரு சாரார் நம்புகிறார்கள்.

எதிர்காலமே இல்லாத உலகில் தொழில்நுட்பம் எப்படி வளரும்? சட்டம் ஒழுங்கு, அரசியல், பொருளாதாரம் எல்லாவற்றுக்கும் என்ன பொருள்? நம் சந்ததிகள் வாழப்போவதில்லை என்று தெரிந்தபின் இந்த சமூக அமைப்பையும் கட்டுக்கோப்பையும் எதற்குத் தாங்க வேண்டும்? சமூக அமைதி சீர்குலைந்து, இங்கிலாந்து தவிர்த்து உலகின் எல்லா அரசுகளும் வீழ்ந்துவிட்ட பின், பயங்கரவாதமும் குண்டுவெடிப்புகளும் அன்றாடச் செயல்களாகிவிட்ட லண்டனில் கதை நடக்கிறது. இங்கிலாந்தைப் பாதுகாக்கும் அரசுக்கும் இராணுவத்துக்கும் இருக்கும் பெரிய பிரச்சினையே, வெளிநாடுகளிலிருந்து வந்து சட்டவிரோதமாகக் குடியேறும் அகதிகள்தான். அளவுக்கதிகமாகப் பெருகிவிட்ட அவர்களை சாலையோரங்களில் கூண்டமைத்து அடைத்துவைக்கிறது அரசு. பாதுகாப்பு வேலிக்கு அப்பாலுள்ள எல்லையோர ஊர்கள் அகதிகளால் நிரம்பிவழிகின்றன.

இந்த நிலையில், உலகின் மிகக் குறைந்த வயதுடையவன் என்பதாலேயே நட்சத்திர அந்தஸ்துடன் வாழ்ந்த ஒரு 18 வயது இளைஞன் இறந்துவிடுகிறான், அந்த செய்தி கேட்டு உலகமே கண்ணீர்விட்டு அழுகிறது. அந்த நாளிலிருந்தே படம் ஆரம்பிக்கிறது. வாழ்வில் எந்தப் பிடிப்பும் இல்லாத நாயகன், இப்போது ஒரு தலைமறைவு இயக்கத்தில் இருக்கும் தனது முன்னாள் மனைவியின் மூலம், ஒரு பெரும் பணிக்கு இழுத்துவரப்படுகிறான். அது, நிறைமாத கர்ப்பிணியாக இருக்கும் ஒரு இளம் பெண்ணையும், பல வருடங்களுக்குப் பிறகு உலகில் பிறக்கப்போகும் முதல் மனிதக் குழந்தையும் காப்பாற்றிப் பாதுகாப்பான இடத்தில் ஒப்படைக்கும் பெரும் பணி.

(தொடரும்)

## எடுத்துக்காட்டு!



ஒரு செல் உயிரியிலிருந்து குரங்கின் வழியாக மனிதன் தோன்றினான் என்ற பரிணாமத் தத்துவத்தை உலகுக்குச் சொன்னவர் சார்ள்ஸ் டார்வின்.

அவரையும் அவரது தத்துவத்தையும் கேலி செய்ய விரும்பிய ஒருவர், டார்வினிடம், "குரங்கிலிருந்து மனிதன் உருவாகி இருக்க வேண்டும் என்ற முடிவுக்கு நீங்கள் உங்களது தோற்றத்தை வைத்துத்தான் முடிவு எடுத்திருக்க வேண்டும் என நினைக்கிறேன், என்ன சரிதானா?" என்று கேட்டார்.

அதைக் கேட்ட டார்வின் சிறிதுகூடக் கோபம் கொள்ளவில்லை. மிகவும் அமைதியாகச் சொன்னார்: "சரியாகச் சொன்னீர்கள். நான் கண்டுபிடித்த தத்துவத்துக்கு நானே எடுத்துக்காட்டாக இருக்கிறேன் என்பது எவ்வளவு சந்தோஷம் தரும் விஷயம்!"

கேலி செய்ய நினைத்தவர் வெட்கித் தலைகுனிந்தார்.

## சேகர் கபூர்


விஸ்வரூபம் படத்தில் நடித்துள்ள சேகர் கபூர் ஹிந்திப் படங்களில் கதா நாயகனாக நடித்தவர். பூலான் தேவி கதையை படமாய் எடுத்தவர். எலிசபெத், கோல்டன் ஏஜ் என்று ஆங்கிலப்படங்கள் இயக்கியவர். பத்மஸ்ரீ விருது வாங்கியவர். மறைந்த நடிகர் தேவ் ஆனந்தின் சொந்த தங்கையின் மகன். இப்போதும் நல்ல போர்மில் இருப்பவர். ஹிந்தியில் ஹிரித்திக் ரோஷன் படம் ஒன்று இயக்கவிருக்கிறார். இவருடைய ரோலை படத்தில் இப்படி சாதாரணமாக கமல் அமைத்திருக்க வேண்டுமா. போஸ்டரில் சேகர் கபூருக்கு கொடுத்த முக்கியத்துவம் கதாபாத்திரத்திலும் தந்திருக்க வேண்டும்.

ஹே ராமில் ஹேமமாலினியை புலம்ப விட்டவர் தானே கமல்! அந்தப் படத்தில் சௌகார் ஜானகி ஒரு எக்ஸ்ட்ரா நடிகை போல வருவார். அவர் இந்த அவமதிப்பு பற்றி அப்போது ரொம்ப பதறி விட்டாராம்!

- R.P. ராஜநாயஹம் -





# யா/சந்திரபுர ஸ்கந்தவரோதய மகா வித்தியாலயம்

**1935ஆம்** ஆண்டு இப்பாடசாலை ஆரம்பிக்கப்பட்டது. "வாழுகின்ற சமுதாயத்திற்கு இணையான வளர்ச்சியை எய்தும் ஆளணியையும் உன்னத பிரஜைகளையும் உருவாக்கல்" என்ற நோக்கையும் "கலைத்திட்ட அமுலாக்கத்தின் அடிப்படையில் அறிவு, திறன், மனப்பாங்கு என்பவற்றை உயர்த்தும் வகையில் சுதேசிய மொழிகளில் தேர்ச்சியுடன் கணனித்துறையிலும் வளர்ச்சி கண்டு சர்வதேச மொழிகளிலும் முன்னேற்றம் அடைவதோடு ஆளுமையும் உற்று பொதுச் சேவையில் மாணவ சமுதாயத்தை ஈடுபடுத்துவதற்கு ஆவண செய்தலும் அதற்கான கட்டமைப்புக்களை உருவாக்கலும்" என்ற பணிக் கூற்றையும் கடைப்பிடித்து இயங்குகின்றது. "வித்தையும் பக்தியும் நித்தமும் பழகு" என்ற மகுடவாசகத்தை கொண்டது. தென் மராட்சி மண்ணின் தெற்கே அமைந்துள்ள மட்டுவில் பிரதேசத்தில் புகழ் பூத்த பாடசாலை ஆகும். மட்டுவில் பிரதேசத்தில் "மடத்தடிப் பள்ளிக்கூடம" என இப்பிரதேச மக்கள் இப்பாடசாலையை அழைப்பதைக் காணக்கூடியதாக வுள்ளது. ஆரம்ப காலங்களில் Junior School என்ற பெயராலும் பின்னர் மட்டுவில் மகாவித் தியாலயம் என்ற பெயராலும் செல்லமாக அழைக்கப்பட்டு புகழ் பெற்று விளங்குகின்றது.



(ஸ்தாபகர்)
**அமரர்**
**சின்னத்தம்பி கந்தர்**
(பிரசித்த நொத்தாரிசு)

குடாநாட்டில் அமைந்துள்ள பாடசாலைகளில் பாரிய நிலப்பரப்பில் தென்மராட்சிப் பிரதேசத்தின் மத்திய கிராம மாகிய மட்டுவில் பிரதேசத்தில் அமைந்துள்ளது. இப்பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினர், பழைய மாணவர் சங்கத்தினர் யாவருடைய ஒத்துழைப்பிலும் மிகத் துரித வளர்ச்சி கண்டு வருகின்றது. மாணவர்களின் ஒழுக்கம், கல்வி மேம்பாடு, இணைப் பாடவிதான செயற்பாடுகள், துரித கற்றல் செயற்திட்டம் ஆகியவற்றில் பல்வேறு முனைப்புடன் ஆசிரியர்களுக்கு பொறுப்புக்கள் வழங்கப்பட்டு அதிபரின் மேற்பார்வையில் திறம்பட இயங்கி வருகின்றன.



**திரு.வி. கந்தசாமி**
**(அதிபர்)**

கடந்த ஒரு வருட காலத்தில் புதிய வகுப்பறைத்தொகுதி, புதிய ஆராதனை மண்டபம், கழிவறைகள், மூலிகைத் தோட்டம், பாண்ட் வாத்திய இசைக்கருவிகள் பெற்றுக் கொள்ளப்பட்டன. மேலும் விளையாட்டு மைதானம் செப்பனிடப்பட்டமை மாணவர்களின் விளையாட்டுத் துறையை மேலும் வளர்க்க உதவியாக அமைந்தது. அலுவலகம் நவீன மயப்படுத்தப் பட்டுள்ளது. கல்வித் தாயாகிய சரஸ்வரி சிலை மெருகூட்டப்பட்டமை, பாதுகாப்பு வேலிகள் அமைக்கப்பட்டமை, இணைப்பாடவிதானச் செயற்பாட்டுக்குரிய கழகங்களின் தொழிற்பாடு விஸ்த்தரிக்கப்பட்டது. மேலும் பல முயற்சிகள் பாடசாலை சமூகத்தின் ஒத்துழைப்புடன் அதிபரால் முன்னெடுக்கப்பட்டுள்ளது. கடந்த பன்னிரண்டு வருடகாலமாக மழையிலும் வெய்யிலிலும் சிரமப்பட்ட ஆசிரிய, மாணவ, மாணவியரின் துவிச்சக்கர வண்டிகளுக்கான வாகனத்தரிப்பிடம் புதிதாகவும், சிறப்பாகவும் அமைக்கப்பட்டது.


குறுகிய காலத்தில் துரித வளர்ச்சியைக் கண்ட பாடசாலை மேன்மேலும் கல்வி, இணைப்பாடவிதான செயற்பாடுகள் அனைத்திலும் புகழ் பெறவேண்டும் என கல்வித்தாயை பிரார்த்திப்போம்.



2013ஆம் ஆண்டு மெய்வல்லுநா விளையாட்டுப்போட்டியில் வெற்றிக்கிண்ணங்களை வென்ற மாணவர்கள்.



பாடசாலையின் பாண்ட் வாத்திய அணி.



2013ஆம் ஆண்டு இல்ல மெய்வல்லுநர் போட்டியில் மாணவர்களிற்கு பரிசில் வழங்கும் போது..



அதிபர், ஆசிரியர்கள்.

# உயிரியல் மாணவர்களுக்கு களஆய்வுச் செயற்பாடு

(வவுனியா)

வவுனியா-வடக்கு, வவுனியா-தெற்கு ஆகிய கல்வி வலய பாடசாலைகளில் இருந்து இவ் ஆண்டு கா. பொ. த உயர்தரப் பரீட்சைக்கு தோற்றவுள்ள உயிரியல்ப் பிரிவு மாணவர்களுக்கான சுற்றாடல் உயிரியல் தொடர்பான கள ஆய்வுச் செயறபாடு எதிர்வரும் 12ஆம் திகதி செவ்வாயக்கிழமை மற்றும் 13ஆம் திகதி புதன்கிழமை ஆகிய இரு தினங்களிலும் வவுனியா சைவப்பிரகாச மகளிர் கல்லூரி வளாகத்தில் அமைந்துள்ள வவுனியா மாவட்ட விஞ்ஞான கள கற்கை நிலையத்தில் நடைபெறவுள்ளது.

உயர்தரப் பரீட்சைக்கு மாணவர்களை தயார்படுத்தும் நோக்கோடு விஞ்ஞான கள கற்கை நிலைய முகாமையாளர் அ. ஜெய்கீசன் தலைமையில் மாகாண கல்வித்திணைக்களத்தின் அனுசரணையுடனும் வவுனியா-வடக்கு வலயக்கல்விப்பணிப்பாளர் திருமதி ப. கணேசலிங்கம், வவுனியா-தெற்கு வலயக்கல்விப்பணிப்பாளர் திருமதி செ. அன்ரன் சோமராஜாவின் வழிகாட்டலுடனும் நடைபெறும். இச் சுற்றாடல் உயிரியல் தொடர்பான கள ஆய்வுச்செயற்பாட்டில் வளவாளர்களாக வவுனியா-வடக்கு வலய உயிரியல் ஆசிரியர் ரி. ரூபசிங்கம், வவுனியா-தெற்கு வலய உயிரியல் ஆசிரியர் எஸ். சிவராஜா கலந்து கொள்ளவுள்ளனர். (160)

## இலட்சார்ச்சனை

தென்.மட்டுவில் வேரற்கேணி அருள்மிகு ஸ்ரீ கந்தசுவாமி ஆலய சதுர்த்தி தின இலட்சார்ச்சனை நேற்று முதல் ஆரம்பமாகி நடைபெற்றுவருகின்றது.

இதில் 9ஆம் திகதி நவக்கிரக ஹோமவழிபாடும், 10 ஆம் திகதி மஹாகந்தஹோம பெருவிழாவும் சிவராத்தி பூசையும், இடம்பெறவுள்ளது. இவ் உற்சவக் கிரியைகள் சிவஸ்ரீ சு.வைத்தீஸ்வரக் குருக்கள் தலைமையில் நடைபெறவுள்ளது. (43)

# வைத்தியராகும் கனவை கலைத்தது வறுமை






(கிரு-சிகரம்)

வைத்தியராக வரவேண்டும் என்ற என்ர எதிர்கால இலட்சியத்தையே 'வறுமை மறக்கச் செய்திட்டுது'. வைத்தியராகும் கனவுடன் க.பொ.த உயர்தரத்தில் (2014) விஞ்ஞானப் பிரிவில் இரண்டு தவணைகள் கற்று தற்போது வணிகப் பிரிவில் கற்றுவரும் ச.மேதினா என்ற மாணவியின் கவலை இது.

யுத்தத்தால் முற்றாக பாதிக்கப்பட்ட கிளிநொச்சி மாவட்டம் தற்போது, புதிய வர்த்தகக் கட்டடங்கள், வைத்தியசாலை, வீதிகள், பாடசாலைகள் என மீள் எழுச்சி கண்டுவருகின்றபோதும், கல்வியில் மிகவும் பின்தங்கி உள்ளமை வேதனையளிக்கின்றது. குறிப்பாக கிராமப்புறங்களிலுள்ள பாடசாலைகளின் கல்வி நிலைமையே மிக மோசமான நிலையில் உள்ளது.

இந்த நிலை, கல்விக்காக ஏங்கும் மாணவர்களின் கனவையும் பறித்துள்ளது.

இதற்கு ஆசிரியர் பற்றாக்குறை மட்டுமல்ல, நகர்ப்புற பாடசாலைகளில் உள்ள வசதிகள் கிராமப்புற பாடசாலைகளில் இல்லாமையே பிரதான காரணமாக உள்ளது.

கிளிநொச்சியிலுள்ள பாடசாலைகளுக்கு விஜயம் செய்து மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களுடன் கலந்துரையாடினோம். இதன்போது, அங்குள்ள கிராமப்புற பாடசாலை மாணவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்து தெரிய வந்தது.

அக்கராயன் மகாவித்தியாலயத்தில் க.பொ.த உயர்தரத்தில் கற்கும் ச.மேதினா என்ற மாணவி தனது கல்விக் கனவை இழந்த கவலையை நம்முடன் பகிர்ந்துகொண்டார்.

தனது ஆரம்பக் கல்வி முதல் க.பொ.த. சாதாரணதரம் வரை அக்கராயன் மகாவித்தியாலயத்தில் கல்வி கற்ற இவர் 2011ஆம் ஆண்டு நடைபெற்ற க.பொ.த சாதாரணதரப் பரீட்சையில் 7-ஏ, 2-பி தரச் சித்திகளைப் பெற்றுக் கொண்டார்.

தனது பிரதேசத்தில் தனியார் கல்வி நிலையங்கள் எதுவும் இல்லாததால் பாடசாலை கல்வியை மட்டுமே நம்பிக் கற்ற தனக்கு, பாடசாலை ஆசிரியர்கள் நேரகாலம் பாராது பாடசாலை நேரம் தவிர்ந்த ஏனைய நேரங்களிலும் கற்பித்ததாலேயே 2011 ஆம் ஆண்டு நடைபெற்ற க.பொ.த சாதரண தரத்தில் சிறந்த பெறுபேற்றைப்பெற முடிந்ததாகவும் அந்த மாணவி கூறினார்.

'நல்ல பெறுபேறு கிடைத்ததால் வைத்தியராக வரவேண்டும் என்ற என்னுடைய இலட்சியம், கனவு, நிறைவேறப் போகுதே என்ற நம்பிக்கை மேலும் அதிகரித்தது. சந்தோசத்துக்கு அளவே இல்லை' இவ்வாறு பரீட்சைப் பெறுபேறு கிடைத்ததும் தனக்குள் எழுந்த உணர்வுகளையும் அந்த மாணவி எம்முடன் பகிர்ந்து கொண்டார்.

அதே மகிழ்ச்சியுடனும், ஆர்வத்துடனும் கிளிநொச்சி மத்திய கல்லூரியில் உயர்தரத்தில் இணைந்துகொண்டார். இவர் கற்ற அக்கராயன் மகா வித்தியாலயத்தில் உயர்தரத்தில் விஞ்ஞானப் பிரிவு இல்லாத காரணத்தினாலேயே அவர் மத்திய கல்லூரிக்கு மாறினார்.

அக்கராயனில் இருந்து கிளி.மத்திய கல்லூரிக்கு செல்வதற்கான தூரம் அதிகம் என்பதால், தனது தம்பியுடன் கிளிநொச்சி நகரில் வாடகை அறையில் தங்கி கற்று வந்தார் மேதினா.

அறைக்கான வாடகைப் பணம், சாப்பாட்டுச் செலவு என மேதினாவுக்கு பணச்செலவு அதிகரித்தது. அவரது குடும்ப வருமானம் அதற்கு ஈடுகொடுக்கவில்லை.

இதனால், இரண்டு தவணைகள் கிளிநொச்சி மத்திய கல்லூரியில் விஞ்ஞானப் பிரிவில் கற்ற மேதினா



மீண்டும் தனது பழைய பாடசாலையான அக்கராயன் மகாவித்தியாலயத்திற்கே திரும்பி வந்து வணிகப் பிரிவில் கற்று வருகின்றார்.

முழுமையான விருப்பமும், ஆர்வமும் இன்றியே வணிக பாடத்தை கற்றுவருவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

'என்ர கனவு நனவாகும் என்ற நம்பிக்கையில் நகர்ப்புறத்திலுள்ள பாடசாலையைத் தேடிப் போனன். ஆனால் என்னுடைய குடும்ப வறுமை எனது இலட்சியததையே மறக்க வைச்சிட்டு' என்று எம்மிடம் கூறும் போது மேதினாவின் முகமே மாறிவிட்டது.

'என்னைப்போன்று பல மாணவர்கள் வைத்தியராக, பொறியியலாளராக வரவேண்டும் என்ற இலட்சியங்களுடன் நகர்ப்புற பாடசாலைகளுக்குச் செல்வதும் மீண்டும் திரும்பி வருவதும் என உள்ளனர்' என்று குறிப்பிட்ட மாணவி மேதினா, கிராமத்திலுள்ள எங்களுடைய பாடசாலையிலும் விஞ்ஞானம், கணிதப் பிரிவு இருந்தால் நாம் ஏன் வேறு இடங்களுக்குச் சென்று சிரமப்படவேண்டும் என்றும் கேள்வி எழுப்பினார்.

எனவே, நகர்ப்புற பாடசாலைகளில் உள்ள வசதிகள் போன்று, கிரமப்புற பாடசாலைகளுக்கும் வசதிகள் செய்து தரவேண்டும் என்றும், கிராமப்புற பாடசாலை மாணவர்களும் கணித, விஞ்ஞான பிரிவுகளில் கற்பதற்கான வாய்ப்புகளை ஏற்படுத்தித் தர வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

மேதினாவைப் போன்ற இலட்சியத்துடன், எதிர்பார்புகளுடன் பல மாணவர்கள் கிளிநொச்சியில் உள்ளனர். இவர்களின் இலட்சியங்கள், எதிர்பார்ப்புகள் அனைத்தும் வெற்றியளிக்க கல்விச் சமூகமும், அதிகாரிகளும் முயற்சியெடுத்து நிச்சயம் வழிவகுக்கவேண்டும்.

# பதிவிறக்கப் பெட்டகம்

பெண்ணிடம் மிகவும் பரிவாக இருக்கிற ஆண், அவளுக்கான பிரச்சினைகளை ஒருபோதும் அறியமாட்டான். அவ்வாறே தனக்கான சிறப்புரிமைகளைப் பற்றிய போதிய ஞானமுமின்றி போராடிப்பெற நினைக்கும் ஆணுக்கும் ஒரு பெண்ணினது வேதனைகள், சிக்கல்கள் புரியாது.

இனியும் பெண்கள்மீது தொடர்ந்து நடத்தப்படும் தாக்குதல்களை நம்மால் அனுமதிக்க முடியாது. 'உத்தம பெண்' என்று உருவகப்படுத்தி செய்யப்படும் அர்ச்சனை சொற்களுக்கோ, இவ்வுலகில் எங்களால் எதையும் விட்டுக்கொடுக்க முடியாது என நினைக்கும் ஆணோடுதான் ஒரு பெண்ணின் வாழ்க்கை எனத் தீர்மானிக்கப்படும் அவலத்திற்கோ தொடர்ந்து நம்மால் உடன்பட முடியாது.....

பெண்களின் இன்றைய பிரச்சினைகளை சரிவர புரிந்துகொள்ள வேண்டுமென்றால், அவைகளுக்கு ஊடற்கூறும், உளவியலும், பொருளாதாரமும் அடிப்படைக் காரணங்களென்று நம்புவதை நாம் விட்டாக வேண்டும். **– சிமோன் தெ பொவார்**

'சிமோன் தெ பொவார்' என்ற பிரெஞ்ச் பெண் சிந்தனையாளர்தான் 'தி செகண்ட் செக்ஸ்' என்ற நூலில் முதல் தடவையாகப் பெண்ணியம் பற்றிப் பேசினார். இதிலிருந்துதான் பெண மொழி, பெண் உடல், பெண்ணியம், பெண் விடுதலை போன்ற சொல்லாடல்கள் தோன்றின. ஒரு ஆணாதிக்கச் சமூகத்தில் ஒரு ஆணுக்கான மதிப்பீட்டை ஆண் உருவாக்குகிறான். அதே போல் ஒரு பெண்ணுக்கான மதிப்பீட்டையும் ஆணேதான் உருவாக்குகிறான். இதிலிருந்து பெண் தன்னை விடுவித்துக் கொண்டு, தன்னுடைய மதிப்பீட்டை தானே உருவாக்க வேண்டும். பெண்ணைப் பற்றி ஒரு புதிய பார்வையைப் பெண்ணே உருவாக்கிக் கொள்ள வேண்டும். **– எம்.ஜி.சுரேஷ்**

உலகத்தில் எல்லா வல்லழச் சிக்கல்களுக்கும் ஏதோ ஒரு நாளில் ஏதோ ஒரு வகையில் தீர்வு எட்டப்படலாம். ஆனால் பெண்ணுரிமைச் சிக்கலுக்கும் தலித் விடுதலைக்கும் அதிதீவிரச் சமநிலைப் புரிதலும், சட்டங்களைச் சர்வாதிகாரத்தனமாக நடைமுறைப்படுத்தும் அதனிலும் தீவிரமான மனித முகமும் தேவைப்படுகின்றது. உலகின் அடிப்படை வாழ்வியல் தத்துவம், பிறரை அடிமைப்படுத்துவதையும் தானே அடிமைப்படுவதையும் உள்ளுணர்வாய்ப் பெற்றிருப்பது தான் போலும். யாரெல்லாம் உயிரச்சத்திற்கு ஆட்பட்டவர்களாய்த் தங்களை எளியவர்களாகவும் பிறர் தயவைக் கோருபவர்களாகவும் தகவமைத்துக் கொள்கிறார்களோ. அவர்கள் பிறர்க்கு அடிமைப்பட்டிருப்பதைத் தங்கள் இருப்பாகவே பாவித்துக்கொள்கிறார்கள்.

இந்தத் தோற்றத்திற்கு உலகளாவிய சான்றாகத் திகழ்பவர்கள் பெண்கள். பெண்கள் நினைத்தால் தங்கள் உரிமைகளை எளிதாக வென்றெடுக்கலாம். ஏனெனில் அவர்கள் மானுடத்தில் சரிபாதியாக இருக்கிறார்கள். இதில் உள்ள கொடுமை என்னவெனில் மறுபாதிக்கு அவர்கள் தாயாக (தங்கை–தமக்கையாக, தாரமாக...) இருப்பதை எதார்த்தமற்ற விதமாய்ப் புனிதப்படுத்தித் தங்களைப் பலியிட்டுக் கொளவதுதான். **– கவிதாசரண்**

மேற்குலகில் பெண்கள் 'காற்சட்டை' அணிந்ததற்காக அழககவும், கொல்லவும் பட்டார்கள் என்பதை நாம் எப்போதும் மறந்து விடக் கூடாது. மேற்கில், பெண்கள் தங்களின் வாழ்க்கை விதி வசப்பட்ட ஒன்று என்பதை ஒப்புக்கொள்ளாமல் அதனை எதிர்த்துப் போராடினர். பலர் தங்கள் உயிரை தியாகம் செய்தனர். பொது சமூகத்தில் ஏளனத்தை எதிர்கொண்டனர். இன்று நாங்கள் அவர்களால் தான் மிகவும் கூடுதலான சுதந்திரத்தை அனுபவித்து வருகிறோம். இருக்கும் நிலையை எதிர்ப்பதன் மூலம்தான் – குடும்பம், நண்பர்கள், சமூகம் ஆகியவற்றிற்கு எதிராக நடக்க வேண்டியிருப்பினும் – நம்மால் தற்போதைய உலகை மாற்ற முடியும். தமிழ்ப்பெண்கள் பெரும்பான்மையோர் தங்களது வாழ்க்கையை விதிப்படி ஆகட்டும் என்று ஒத்துக்கொள்வதை, நான் பல சந்தர்ப்பங்களில் பார்த்து வருகிறேன். நமது வாழ்க்கையின் விதியை நாம் தான் உருவாக்குகிறோம். தியாகங்களாலும் கண்ணீராலும். ஆனால் அதே சமயத்தில் நம்மைப் போன்று சிந்திப்பவர்களின் ஆதரவோடும் அது உருவாக்கப்படுகிறது. எதிர்கால தலைமுறைப் பெண்கள் இன்னும் உயர்வடைவர் என்ற நம்பிக்கையோடு சிந்திப்பவர்களால் தான் பெண்களின் வாழ்க்கையை மாற்றி அமைக்க முடியும்.

**– மரியா ரெய்மோன்தெஸ் மெய்லன்**

# கண்டாவளை நெற்செய்கையாளர்களின் பாகுபாடான செயற்பாட்டால் அதிருப்தி

2013 ஆண்டு கலமடு குளத்தின் கீழ் சிறுபோக நெற்செய்கைக்கு தர்மபுரம், நாகேந்திரபுரம் உள்வாங்கப்பட்டமைக்கு கண்டாவளை நெற்செய்கையாளர்கள் கடும் எதிர்ப்பினையும், ஆட்சேபனையும் வெளியிட்டமை தொடர்பில் அதிகாரிகள், விவசாயிகள் உள்ளிட்ட பல்வேறு தரப்பினரிடையே அதிருப்தியையும், கடும் விசனத்தினையும், கவலையினையும் ஏற்படுத்தியுள்ளது.

கடந்த முதலாம் திகதி கண்டாவளை கமநல சேவைகள் நிலையத்தில் இடம்பெற்ற கல்மடு குளத்தின் கீழான 2013 சிறுபோக நெற்செய்கை கூட்டத்தின் போதே கண்டாவளை பிரதேச நெற்செய்கையாளர்களின் நடவடிக்கை, கூட்டத்தில் கலந்துகொண்ட ஏனையவர்களின் வெறுப்புக்கும், விசனத்திற்கும் உள்ளாகியுள்ளது.

விடுதலைப்புலிகளால் 2009 ஆம் ஆண்டு இறுதி யுத்தத்தின் போது குண்டு வைத்து தகர்க்கப்பட்ட கல்மடு குளம் மீள்குடியேற்றத்தின் பின்னர் அதிகளவு நீர் கொள்ளளவு உடைய குளமாக பல மில்லியன் ரூபா செலவில் பொருளாதார அபிவிருத்தி அமைச்சினால் புனரமைக்கப்பட்டது. புனரமைப்புக்கு பின்னர் கல்மடு குளத்தின் கீழ் எல்லா பிரதேச விவசாயிகளும் பயன்பெறும் வகையில் அதிக நீர் சேமிக்கப்பட்டது. ஆதாவது 2009இற்கு முன்னர் 17 அடி கொள்ளளவு உடைய குளமாக இருந்த கல்மடு குளம் புனரமைகுப்பின்னர் 24 அடி நீர் கொள்ளளவு உள்ள குளமாக மாற்றப்பட்டுள்ளது. எல்லா விவசாயிகளினதும் வாழ்வாதார மேம்பாட்டினைக் கருத்தில் எடுத்தே இந்தப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

இந்த நிலையில் கடந்த முப்பது வருடத்திற்கு மேலாக கல்மடு குளத்தின் கீழ் சிறு போக நெற்செய்கையில் தங்களையும் சேர்த்துக்கொள்ளுமாறு தர்மபுரம், மற்றும் நாகேந்திரபுரம் விவசாயிகள் கோரிக்கை விடுத்து வந்தனர். அப்போதெல்லாம் குளம் புனரமைக்கப்பட்டு அதிகளவு நீர் சேமிக்கின்ற போது உள்வாங்க நடவடிக்கை எடுக்கப்படும் என அப்போதைய அதிகாரிகளினால் தெரிவிக்கப்பட்டு வந்தது.

இந்த நிலையில் கடந்த 2012 ஆண்டு கல்மடு குளத்தின் கீழான சிறுபோக நெற்செய்கைக் கூட்டம் நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரகுமார் தலைமையில் நடைபெற்ற போது முதன் முதலாக தர்மபுரம், நாகேந்திரபுரம் கிராமங்கள் சிறுபோக நெற்செய்கைக்கு உள்வாங்கப்பட்டது. அந்த கூட்டத்தின் போது விருப்பமின்றி தங்களது கருத்துக்களை தெரிவிக்காது எழுந்து சென்ற கண்டாவளை பிரதேச நெற்செய்கையாளர்கள் 2013 சிறுபோக நெற் செய்கைக் கூட்டத்தில் மேற்படி இரண்டு கிராமங்களையும் கல்மடு குளத்தின் கீழ் சிறுபோக நெற்செய்கைக்கு உள்வாங்கப்பட்டமைக்கு மிக மோசமான பாகுபாடான எதிர்ப்பினை வெளியிட்டமை கூட்டத்தில் கலந்துகொண்ட நாடாளுமன்ற உறுப்பினர் மாவட்ட அரச அதிபர் நீர்ப்பாசனத்திணைக்கள உயரதிகாரிகள் உள்ளிட்ட அதிகாரிகள் மத்தியில் கவலையினையும் அதிர்ச்சியினையும் ஏற்படுத்தியுள்ளது. ஓரே பிரதேசத்தில் ஓரே மொழி பேசுகின்ற யுத்தத்தின் பாதிப்புக்களை சுமந்த மக்களில் ஒரு பகுதியினர் மற்றொரு பகுதியினர் மீது பாகுபாடுகளையும் பாரபட்சங்களையும் காட்டுவது வேதனையான விடயமென தெரிவித்த அதிகாரிகள் இவ்வாறான நடவடிக்கைகளுக்கு இடமளிக்கப் போவதில்லை எனவும் குறிப்பிட்டனர்.

கல்மடு குளம் வான் பாய்கின்றபோது அதன் பாதிப்புக்களை அதிகம் சுமக்கின்ற பிரதேசங்களாக தர்மபுரம், நாகேந்திரபுரம் கிராமங்களே காணப்படுகின்றன. இந்த குளத்தின் நீர் தர்மபுரம் கிராமத்தினை ஊடறுத்தே செல்கிறது. மேலும் குளத்தின் கீழ் 1040 ஏக்கர் பரப்பளவில் சிறுபோக செய்கையினை மேற்கொள்ளத்தீர்மாணிக்கப்பட்டுள்ளது.

அதனடிப்படையில் கண்டாவளையில் 640 ஏக்கர்களும், கலமடுவிற்கு 225 ஏக்கர்களும், தர்மபுரத்திற்கு 80 ஏக்கர்களும் நாகேந்திரபுரத்திற்கு 40 ஏக்கர்களும், புளியம்பொக்கணைக்கு 75 ஏக்கர்களும் வழங்க தீரமானிக்கப்பட்டது. இவ்விகிதத்தின் அடிப்படையில் குளத்தின் கீழான நெற்செய்கையாளர்கள் அனைவருக்கும் தலா அரை ஏக்கர் விகிதம் வழங்க முடியுமென தீர்மானிக்கப்பட்டது.

எனவே கடந்த சிறுபோகத்தினை விடவும் ஏனைய கிராமங்களுக்கு ஒதுக்கப்பட்டதனை விடவும் அதிகமாக முன்னுரிமை அளிக்கப்பட்டு கண்டாவளைக்கு 640 ஏக்கர் ஒதுக்கப்பட்ட நிலையில் கண்டாவளை விவசாயிகள் இவ்வாறு நியாயமற்ற வகையில் நடந்துகொள்வது வேதனையான விடயம் என தெரிவிக்கும் ஏனைய பிரதேச விவசாயிகள், கண்டாவளையில நெற்செய்கையில் ஈடுபடும் பாடசாலை ஆசிரியர் ஒருவர் தங்களை ஏனைய பிரதேச விவசாயிகளுடன் ஒப்பிட்டு சமமாக பார்க்கக்கூடாது என பகிரங்கமாக கூட்டத்தில் தெரிவித்தமையும் கண்டனத்திற்குள்ளாகியுள்ளது.

கண்டாவளை பிரதேசத்தில் நீர்வரி பதிவேட்டில் பெயர்கள் உள்ள பல விவசாயிகள் தற்போது அங்கு இல்லையெனவு அவர்கள் வெளிநாடுகள் மற்றும் கொழும்பு உள்ளிட்ட பல பிரதேசங்களில் வசிப்பதாகவும் ஏனைய விவசாயிகள் தெரிவித்துள்ளனர். (29)

# இராணுவ சிப்பாய் கொலை சக சிப்பாய்க்கு 2வருடசிறை

(யாழ்ப்பாணம்)

இராணுவச் சிப்பாய் ஒருவரை கொலை செய்த குற்றத்தை ஒப்புக்கொண்ட சக இராணுவச் சிப்பாய்க்கு இரண்டு வருட கடூழிய சிறைத் தண்டனையை யாழ்.மேல் நீதிமன்றம் விதித்துள்ளது.

கடந்த 2010 ஆம் ஆண்டு யூலை மாதம் அளவெட்டிப் பகுதியில் உள்ள இராணுவ முகாம் ஒன்றிலேயே இந்தக் கொலைச்சமபவம் இடம்பெற்றுள்ளது.

இந்தச் சம்பவத்தில் இராணுவ சிப்பாய் ரத்னாயக்க முதயான்சலாகே சந்தன லக்மல் ஜெயதிச என்பவரே கொலை செய்யப்பட்டவராவார்.

திறப்பனை வண்ணமடு பகுதியைச் சேர்ந்த அபேசிங்க ஆராய்ச்சிகே தமித் ருவான் திஸாநாயக்க என்ற இராணுவ வீரரரே கொலை செய்ததாக குற்றஞ்சாட்டப்பட்டு, தெல்லிப்பளை பொலிஸாரினால் மல்லாகம் நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது.

அதன் பின்னர் சட்டமாஅதிபர் திணைக்களத்தினால் யாழ். மேல் நீதிமன்றில் குற்றப்பத்திரம் தாக்கல் செய்யப்பட்டது.

யாழ்.மேல் நீதிமன்றில் யாழ். மேல் நீதமன்ற ஆணையாளர் ஜே.விஸ்வநாதன் முன்னிலையில் அந்த வழக்கு நேற்றுமுன்தினம் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

விசாரணையின் போது, குறித்த எதிரியின் மீது கொலையாகாத மரணம் விளைவித்ததாக குற்றஞ்சாட்டப்பட்டது, எதிரி குற்றத்தினை ஒப்புக் கொண்டதற்கு இணங்க 5வருடங்கள் ஒத்திவைக்கப்பட்ட இரண்டு வருட கடூழிய சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது.

அத்துடன், 5 ஆயிரம் ரூபா தண்டப்பணம் செலுத்துமாறு உத்தரவிட்டதுடன், தண்டப்பணம் செலுத்த தவறின் 1 மாத கால சாதாரண சிறைத்தண்டனைக்கும் உத்தரவிடப்பட்டது.

அதுமட்டுமன்றி இறந்தவருக்கு 1 இலட்சம் ரூபா நஷ்டஈடு வழங்க வேண்டுமென்றும் உத்தரவிடப்பட்டது.

இறந்தவர் திருமணமாகியிருந்தால் மனைவியிடமும், அவர் திருமணமாகாதவராயின் தாய் அல்லது தந்தையிடம் அந்தப் பணத்தை வழங்க வேண்டு மென்றும், நஷடஈட்டுத் தொகையை வழங்காவிட்டால் 6 மாதம் சாதாரண சிறைத் தண்டனை அனுபவிக்க வேண்டுமென்றும், யாழ்.மேல் நீதிமன்ற ஆணையாளர் ஜே.விஸ்வநாதன் தனது தீர்ப்பில் உத்தரவிட்டார். (25)

# பாலியல் குற்றச்சாட்டு சந்தேகநபர்கள் விடுதலை

பாலியல் துஷ்பிரயோகம் மேற்கொண்டதாக குற்றஞ்சாட்டப்பட்ட இரு நபர்களையும் நிரபராதிகள் என இனங்கண்ட யாழ்.மேல் நீதிமன்றம் அவ்விருவரையும் விடுதலை செய்யுமாறு தீர்ப்பளித்துள்ளது.

மல்லாகம் கோட்டைக்காட்டு பகுதியில் 2009 யூன் 05 ஆம் திகதி பெண் ஒருவரை அதே இடத்தினைச் சேர்ந்த இரு நபர்கள் கடத்திச் சென்று பாலியல் துஷ்பிரயோகம் மேற்கொண்டதாக பாதிக்கப்பட்டதாக கூறப்படும் பெண்ணினால் சுன்னாகம பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது.

அந்த முறைப்பாட்டின் பிரகாரம் சுன்னாகம் பொலிஸாரினால் மல்லாகம் நீதிம்ன்றில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது. பின்னர் அந்த வழக்கு மல்லாகம் நீதிமன்றினால் யாழ்.மேல் நீதிமன்றுக்கு மாற்றப்பட்டது.

மேற்படி வழக்கு யாழ். மேல் நீதிமன்ற ஆணையாளர் ஜே.விஸ்வநாதன் முன்னிலையில் நேற்றுமுன்தினம் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது. வழக்கு தொடுநரினால் அளிக்கப்பட்ட வாக்குமூலதத்தில், குறிப்பிடப்பட்ட விடயங்கள் நிரூபிக்கப்படாத காரணத்தினாலும், எதிராளியினால் முன்வைக்கப்பட்ட வாதங்களினால் குறிப்பிடப்பட்ட இரு சந்தேக நபர்களையும் நிரபராதிகள் என கருதிய நீதிமன்றம் அவர்கள் இருவரையும் விடுதலை செய்வதாக யாழ்.மேல் நீதிமன்ற ஆணையாளர் ஜே.விஸ்வநாதன் தீர்ப்பளித்தார். இந்த வழக்கில் சந்தேகநபர்களின் சார்பாக சட்டத் தரணி ரெமீடியஸ் ஆஜராகியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (25,137)

# சைக்கிள்களுக்கு டைனமோ கட்டாயமென அறிவிப்பு

யாழ். மாவட்டத்தில் துவிச்சக்கர வண்டிகளுக்கு' டைனமோ பொருத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளவுள்ளதாக யாழ்.மாவட்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் இந்து கருணாரட்ண தெரிவித்தார். அதன் பிரகாரம் யாழ். பிரதான வீதிகளில் செல்லும் துவிச்சக்கரவண்டிகள் பொலிஸாரினால் பரிசீலனை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

இதற்கமைவாக டைனமோ மற்றும் பிறேக் பூட்டப்படாத துவிச்சக்கர வண்டிகளை செலுத்தும் ஓட்டுனர்களுக்கு எதிராக சட்டநடவடிக்கை எடுகப்படுமென யாழ்.போக்குவரத்து பொலிஸார் தெரிவித்துள்ளனர். இவ்வாறு மின்விளக்குகள் பொருத்தாமலும் பிறேக் இல்லாத நிலையிலும் துவிச்சக்கர வண்டிகளை செலுத்தும் ஓட்டுனர்களின் அடையாள அட்டை கைப்பற்றப்படுவதுடன், ஓட்டுனர்கள் நீதிமன்றில் ஆஜர்ப்படுத்தப்படுவர் என யாழ். போக்குவரத்துப் பொலிஸார் மேலும் கூறினர். (25)



**பொலிஸ் விசேட அதிரடிப்படையினரின் 30ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நயினாதீவில் கடந்த 1ஆம் திகதி நடைபெற்ற நிகழ்வில் அத்தி பூஜா நவதகல பதுரகீர்த்தி திஸ்ஸ நாயக்க ஸ்திபாவர உத்தரலங்காவ பிரதான சங்கநாயக்கர், உதவிப் பொலிஸ் அத்தியட்சகர், வாயஸ் பெரேரா யாழ்ப்பாண பொலிஸ் விசேட அதிரடிப்படையின பொறுப்பதிகாரி மற்றும் சக உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர். இந்நிகழ்வில் 150 குடும்பங்களுக்கான உணவுப் பொதிகளும், 150 மாணவர்களுக்கான பாடசாலை உபகரணங்களும் வழங்கப்பட்டன.**


❖ பின்வரும் வேலைகளை செய்வதற்கு உகந்த கருவிகளின் பெயர்களை எழுதுங்கள்.

(33) மரக்குற்றியொன்றில் ஆணியை அறைதல் ..................

(34) பெரிய பாறாங்கல்லை லொறியொன்றினுள் ஏற்றுதல். ..................

(35) மீன் ரின் ஒன்றை வெட்டித் திறத்தல் ..................

(36) நான்கு உலர் மின்கலம், ஒரு மின்குமிழ், வயர் கம்பித்துண்டு என்பவற்றைக் கொண்டு மின்குமிழை ஒளிரச் செய்யும் விதத்தை வரைக. ..................



(37) ஒரு மாணவ குழுவிடமிருந்து, அவர்கள் விரும்பும் பானங்கள் தொடர்பான தகவல்கள் பெறப்பட்டு, அத்தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| விரும்பும் பானங்கள் | மாணவர் தொகை |
|---|---|
| (1) தேநீர் | 𝍸, 𝍸, 𝍸, 𝍸, 𝍸, II |
| (2) கோப்பி | 𝍸, 𝍸, 𝍸, IIII |
| (3) பால் | 𝍸, 𝍸, IIII |
| (4) பழரசம் | 𝍸, 𝍸, 𝍸, I |
| (5) சர்பத் | 𝍸, 𝍸, 𝍸, IIII |

(i) பாலை விரும்பும் மாணவர் தொகையை விட, தேநீரை கூடுதலாக விரும்பும் மாணவர் தொகை யாது? ..................

(ii) இந்த ஐந்து வகையான பானங்களையும் விரும்பும் மாணவர் தொகை யாது? ..................

(iii) ஒரு தேநீர் கோப்பை ரூபா. 8.00 எனில், தேநீருக்காக செலவாகும் பணம் எவ்வளவு? ..................

(iv) தேநீரை விரும்பும் மாணவர் தொகையிலும் பார்க்க எத்தனை மாணவர்கள் பழரசத்தை குறைவாக விரும்புகின்றனர்? ..................

(38) ஒரு குளிர்பானப் போத்தல் மூலம் 15 பேரை உபசரிக்கலாம். எனில் 122 பேரை உபசரிக்க எத்தனை குளிர்பானப் போத்தல்கள் தேவை? ..................

(39) 750g வாழைப்பழம் ரூபா. 60.00 ஆயின் 1kg 250g வாழைப்பழத்தின் விலை எவ்வளவு? ..................

(40) ஒரு மாணவன் பாடசாலை விட்டுச் செல்லும் வேளை திடீரென இடிமின்னலுடன் மழை பெய்யத்தொடங்கியது. இவ்வேளை அம்மாணவனுக்கு ஏற்பட்ட உணர்வுகளை விளக்கக் கூடியவாறு ஆறு வாக்கியங்களை எழுதுக.
*(ஒவ்வொரு வாக்கியத்திலும் 4 சொற்களேனும் இடம்பெற வேண்டும் அவ்வாக்கியங்களில் எழுவாய், பயனிலைத் தொடர்பு சரியாக இருக்க வேண்டும்)*

(1) ..................
(2) ..................
(3) ..................
(4) ..................
(5) ..................
(6) ..................

**கடந்த திங்கள் வினாத்தாள் விடைகள்**

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1) 3 | 2) 3 | 3) 3 | 4) 1 | 5) 1 | 6) 1 | 7) 1 |
| 8) 2 | 9) 3 | 10) 1 | 11) 3 | 12) 2 | 13) 3 | 14) 2 |
| 15) 2 | 16) 3 | 17) 2 | 18) கிலி | 19) மெய் | 20) 2 | |
| 21) 1 | 22) குளவி, விசம் | 23) 3 | 24) 1 | 25) 1 | | |
| 26) 2 | 27) 2 | 28) 2 | 29) 2 | 30) | | |



# தரம் - 5 புலமைப் பரிசில் பரீட்சை - 2013

பகுதி - I
1.30 மணி

# கல்வி முரசு



முன்னணி ஆசிரிய நட்சத்திரங்களினால் தொகுக்கப்படும் விசேட வினாத்தாள்

(1) பின்வரும் பாடலை வாசிக்க. S.T.திலக்

கடலின் மீது செல்லும் கப்பல்
பார், தம்பி, பார் - அதைக்
காணப் பலர் வருவதையே
பார், தம்பி, பார்

சங்கும் நல்ல கிளிஞ்சல்களும்
பார், தம்பி, பார் - இங்கே
சரளமாக கிடைக்குதுடா
பார், தம்பி, பார்

தடதடென்று அலைகள் வந்து
பார் தம்பி, பார் - காலைத்
தழுவி விட்டுப் போவதையே
பார், தம்பி பார்.

பொங்குகின்ற பாலினைப் போல்
பார் தம்பி பார் - இங்கு
தங்கி நிற்கும் நுரையுண்டு
பார் தம்பி, பார்

(i) மேற்குறித்த பாடலில் எதனைப் பற்றி விபரிக்கப்படுகிறது? ..................

(ii) இங்கு இடம்பெறும் உவமானத்தை எழுதுக. ..................

(iii) இங்கு பெயராகவும், வினையாகவும் வரும் சொல் எது? ..................

(iv) எழுவாய் அடைமொழி ஒன்றை எழுதுக. ..................

(iv) 'கிளிஞ்சல்' என்பதன் ஒத்தசொல்லை எழுதுக ..................

(vi) இங்கு இடம்பெறும் இரட்டைக்கிளவி எது? ..................

(vii) "கடலலை காலைத்தழுவி விட்டுப்போவதைப்பார்" என்ற வாக்கியத்தை பன்மை வாக்கியமாக எழுதுக.

(2) பின்வரும் பழமொழிகளின் கருத்தை எழுதுக.

(i) அழுத பிள்ளை பால் குடிக்கும். ..................

(ii) உப்பிட்டவரை உள்ளளவும் நினை. ..................

(3) வெற்றிடத்திற்கு பொருத்தமான சொல்லின் கீழ் கோடிடுங்கள்.

(i) உலகின் முதலாவது .................. ஸ்புட்னிக் ஆகும்.
(செயற்கைக்கோல், செயற்கைக்கோள், சேர்கைக்கோல், சேர்க்கைக்கோள்)

(ii) உடல் ஆரோக்கியத்திற்கு .................. சிறந்தது.
(மூளிகைத்தலைம், மூலிகைத்தைளம், மூழிகைத்தலைம், மூலிகைத்தைலம்)

(4) பின்வரும் கருத்துக்களுக்கு பொருத்தமான தனிச்சொல்லை எழுதுக?

1) நகையும் பரிகாசமும் பொருந்தக் கவி புனையும் ஆற்றல் படைத்தவர் ..................


2) சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் எனும் ஐந்துணர்வும் ..................

(5) வெற்றிடத்திற்கு பொருத்தமான விடையை எழுதுக?

1) I love my ..................



2) Open the ..................



(6) பின்வரும் வாக்கியத்தின் கருத்தை தமிழில் எழுதுக?
I) I am sorry ..............................................

(7) பின்வரும் வாக்கியத்தின் கருத்தை ஆங்கிலத்தில் எழுதுக?
I) நீங்கள் எங்கே போகின்றீர்கள்? ..............................................

(8) இதன் கருத்தை தமிழில் எழுதுக
I) ஒயாகே நம மொக்க(dh)த? ..............................................

(9) "நான் போய் வருகின்றேன்" என்பதை சிங்களத்தில் கூறப்படுவதை தமிழில் எழுதுக?
..............................................

❋ 10 - 30 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் உரிய சரியான விடையின் கீழ் கோடிடுக?

(10) இலைகளை கொண்டூராத தாவரம் பின்வருவனவற்றுள் எது?
(1)நாகதாளி (2)கற்றாளை (3) பூம்புல் (4)முட்செடி

(11) சூரிய காந்தி பூவை ஒத்த பூவைவைக் கொண்ட தாவரம் எது?
(1)தாமரை (2)அந்தூரியம் (3) மூக்குத்திப்பூண்டு (4)கொன்றை


(12) வீட்டுத்தோட்டத்தில் வளரும் நாருடு வேரைக் கொண்ட தாவரம் எது?
(1)பப்பாசி (2)ஆனைக்கொய்யா (3)இறம்பை (4) பசளி

(13) ஒருவருக்கு ஒரு குளவி கொட்டினால் செய்யக் கூடிய முதலுதவி எது?
(1) காயத்தை சவர்க்கார நீரினால் நன்றாக கழுவுதல்
(2) கொடுக்கை அகற்றிய பின் வைத்திய சாலைக்கு கொண்டு செல்லல்
(3) கை மருந்தை காயத்தின் மீது பூசுதல்
(4) கொடுக்கை அகற்றிய பின் கை மருந்தை பூசுதல்



(14) வெள்ளப்பெருக்கு ஏற்படும் போது கொள்ளைநிலைத் தாக்கத்தை ஏற்படுத்தும் நோய்
(1)மலேரியா (2)டெங்கு (3) வாந்தி பேதி (4) பிடிகரம்

(15) பலாப்பழம் வெட்டும் போது கையில் பூசப்படும் பதார்த்தம் எது?
(1)நீர் (2)ஆமணக்கு எண்ணெய் (3)தேங்காய் எண்ணெய் (4)தேட்பன் தைலம்

(16) ஒருவர் தனது பிறப்பு அத்தாட்சி பத்திரமொன்றின் பிரதியொன்றை பெறுவதற்கு முதலில் செல்ல வேண்டிய இடம் எது?
(1)கிராம அலுவலகம் (2)மாநகரசபை (3)பிரதேச செயலகம் (4)சமாதான நீதிவான்

(17) 
இந்த அடையாளத்தை காணக்கூடிய இடம் எது?
(1) தேசிய கொடி (2) பௌத்த கொடி
(3) தேசிய இலச்சினை (4) தேசிய முத்திரை


(18) பண்டைய இலங்கையின் வரலாறு பற்றி கூறும் நூல் எது?
(1)திரிபிடகம் (2)வேதாகமம் (3)மகாவம்சம் (4) குல தீபம்


(19) தொலைக்காட்சி நிகழ்ச்சியொன்றின் சத்தத்தை நிறுத்தும் போது, தோன்றும் அடையாளம் எது?
(1)  (2)  (3)  (4) 


(20) இலங்கையின் தேசப்படத்திலே நதிகளை குறிப்பதற்கு பயன்படுத்தும் நியம நிறம் ?
(1)நீலம் (2)சிவப்பு (3)பச்சை (4) கறுப்பு


(21) மாம்பட்டை மருதம்பட்டை வெளவாலோடிய தென்னம் பட்டை....... என்ற கிராமிய பாடலுடன் தொடர்புடைய விளையாட்டு எது?
(1) சடுகுடு (2) கிட்டிப்புள் (3) பாண்டியாட்டம் (4) கபடி



(22) 
எதிரேயுள்ள நட்சத்திர கோலத்தை குறிக்கும் பெயர் என்ன?
(1) வேட்டைக்காரன் (2)விருட்சகம்
(3) பெருநாய் (4) கலப்பை


(23) அழுகிய முட்டையொன்றை தாயநீரில் இடும் போது, முட்டையின் அமைவை சரியாகக்காட்டும் உரு எது ?


(24) பாக்கை இலகுவாக வெட்டுவதற்கு பாக்குவெட்டியில் பாக்கை வைக்கும் இடத்தை காட்டும் உரு எது?


(25) நீருள்ள பாத்திரத்தினுள் மண்ணெய், தேங்காய் எண்ணெய் என்பவற்றை இடும் போது, அவதானிக்கக் கூடியவை.


(26) குடற்புழுக்காக அருந்த வேண்டிய மருந்தை உட்கொள் முன்பு, அவதானிக்க வேண்டிய முக்கிய விடயம் எது?
(1) கலாவதியாகும் திகதி (2) ஒரு வேளை அருந்த வேண்டிய அளவு
(3) உற்பத்தி செய்த திகதி (4) மருந்தில் அடங்கியுள்ளவை

(27) தினமும் உணவில் மஞ்சள் நிற காய்கறி வகைகளை உட்கொள்வதால் தடுக்கக் கூடிய நோய் எது?
(1) கண்டமாலை (2) மாலைக்கண் (3) அனிமியா (4) பெரிபெரி

(28) மங்கள விழாக்களின் போது, இசைக்கப்படும் வளி நிரல் அதிரும் இசைக்கருவி.


(29) பண்டைய மக்களின் கலாசார , பண்பாட்டு அம்சங்கள் காணப்படும் இடம் எது?
(1) சிகிரியா (2) தம்புள்ள (3) பொலநறுவை (4) காலி

(30) வெயில் காலங்களில் அதிகளவு உண்ணும் பழவகை எது?
(1) வெள்ளரி (3) மாம்பழம் (3) கொய்யா (4) அப்பிள்

❋ இலங்கையின் கண்டிக்கால செதுக்கல்களில் ஒன்றான மகரதோரணத்தில் காணப்படும் பின்வரும் உருவங்களின் பெயர்களை எழுதுங்கள்.
 
(31) .................... (32) ....................

# சட்டவிரோத ஆட்கடத்தல் கடற்படைக்கு தொடர்பா?

(கொழும்பு)

சட்டவிரோத ஆட்கடத்தல் நடவடிக்கைகளுடன் கடற்படையினருக்கு தொடர்பு இருப்பதாகக் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. இலங்கை கடற்படையைச் சேர்ந்த சிலர், சட்டவிரோத ஆட்கடத்தல் நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு வழங்கி வருவதாகக் குறிப்பிடப்படுகிறது.

சில சட்டவிரோதப் படகுப் பயணிகளுக்கு இலங்கைக் கடற்பரப்பில், கடற்படையினரின் பாதுகாப்பு வழங்கப்படுவதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. கடற்படையினருக்கும், பொலிஸாருக்கும் பணம் செலுத்தியே தாம் பயணத்தை ஆரம்பித்ததாக புகலிடக் கோரிக்கையாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

முதல் தடவை பயணம் செய்த போது கடற்படையினர் தடுத்து நிறுத்தியதாகவும், இரண்டாம் தடவை பணம் செலுத்தி பயணத்தைத் தொடர்ந்த போது கடற்படையினர் தடுக்கவில்லை எனவும் மற்றுமொரு புகலிடக் கோரிக்கையாளர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, இந்தக் குற்றச்சாட்டுக்களை கடற்படையினர் நிராகரித்துள்ளனர். அரசாங்கத்திற்கும், கடற்படையினருக்கும் களங்கம் ஏற்படுத்தும் நோக்கில் இவ்வாறான குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்படு வதாக கடற்படைப் பேச்சாளர் கோசல வர்ணகுலசூரிய தெரிவித்துள்ளார்.

# நூதன சாலையில் திருட்டு ஒப்புக்கொண்ட சந்தேகநபர்

(கொழும்பு)

பிரதான சந்தேக நபரான லஸங்கே பிரியந்த மெண்டிஸ், கொழும்பு - நூதனசாலையில் திருடியதை ஒப்புக்கொண்டுள்ளார் எனவும், களவாடப்பட்ட பொருட்களை வைத்திருந்தனர் எனும் குற்றச்சாட்டின் பேரில் ஏனைய சந்தேக நபர்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர் எனவும் குற்றப்புலனாய்வுப் பொலிஸ் இன்ஸ்பெக்டர் நிஸாந்த சில்வா, கொழும்பு பிரதான நீதவான் ரஷ்மி சிங்கப் புலியிடம் கூறினார்.

பிரதான சந்தேகநபரான பிரியந்த மெண்டிஸ் குற்றப்புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டார் எனவும், ஏனைய சந்தேகநபர்கள் வெவ்வேறு பொலிஸ் நிலைய அதிகாரிகளினால் கைது செய்யப்பட்டவர்கள் எனவும் பொலிஸ் இன்ஸ்பெக்டர் குறிப்பிட்டார்.

பிரியந்த மெண்டிஸ் மீது சுமார் 80இற்கு மேற்பட்ட வன்முறை குற்றச்சாட்டுக்கள் உள்ளனவெனவும், இவரை குற்றப்புலனாய்வுப் பிரிவினர் கொழும்பு குற்றவியல் பிரிவில் விசாரித்து வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

ஏனைய சந்தேகநபர்களை பிணையில் விடுதலை செய்யுமாறு அவர்களின் சட்டத்தரணிகள் கோரிக்கைவிடுத்தும் அதனை நிராகரித்த நீதவான் மார்ச் 20ஆம் திகதி வரை சந்தேகநபர்களை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

# மகளிர்தினம் மார்ச் - 08

பெண்கள் சுதந்திரமாகவும், சம உரிமையுடனும் வாழ வேண்டும் என்பதற்காக பல போராட்டங்கள் உலகம் முழுவதிலும் நடைபெற்று வெற்றி கண்டது. இவ் வெற்றியை குறிக்கும் தினமே சர்வதேச மகளிர் தினமாகும்.

சர்வதேச மகளிர் தினம் மார்ச 8 ஏன் கொண்டாடப்படுகின்றது என்ற காரணத்தினை தேடிப் பார்த்தால் வியப்பூட்டும் அரிய தகவல்கள் எமக்கு கிடைக்கும்.

1789ஆம் ஆண்டு 6ஆம் மாதம் 14ஆம் திகதி பிரான்ஸ் நாட்டுப் பெண்கள் சமத்துவம், பிரதிநிதித்துவம் அதாவது ஆணகளுக்கு நிகரான ஊதியம் பெண்களுக்கு வழங்கப்பட வேண்டும் என்றும், ஒரு நாள் வேலை நேரம் 8 மணித்தியாலங்கள் ஆக்கப்பட வேண்டும் என்பதுடன் பிரெஞ்சு அரசின் ஆலோசனைக் குழுவில் பெண்களும் உறுப்பினர்களாகச் சேர்க்கப்பட வேண்டும் என்ற கோரிக்கைகளை முன் வைத்து புரட்சியில் ஈடுபட்டனர். இவர்களுக்கு ஆண்களும் ஆதரவினை வழங்கியிருந்தனர்.

இப் புரட்சி நடைபெற்ற கால கட்டத்தில் பிரான்ஸ் நாட்டை ஆட்சி செய்த "லூயிலிப் பிலிப்" புரட்சியில் ஈடுட்டவர்களை கைது செய்ய உத்தரவு பிறப்பித்தான். இதனால் ஆத்திரமுற்ற புரட்சியாளர்கள் பிரான்ஸ் நாட்டுக் காவலர்கள் இருவரை கொலை செய்தனர்.

இதனால் இப்பிரச்சினைக்கு தீர்வுகாண முடியாமல் மன்னன் லூயிலிப் பிலிப் முடி துறந்தான். இச் செய்தி ஐரோப்பிய நாடு முழுவதும் காட்டுத் தீ போல் பரவியது. இதனால் அங்கும் போராட்டங்கள் நடைபெற ஆரம்பித்தன.

பின்னர் பிரான்ஸின் 2ஆவது குடியரசை நிறுவிய "லூயிஸ் பிளாக்" பிரான்ஸ் அரசசபை ஆலோசனைக் குழுவில் பெண்களை நியமித்ததுடன், பெண்களுக்கு வாக்குரிமையளித்தும் உத்தர விட்டார். அந்த நாள் 1848ஆம் ஆண்டு மார்ச் 8ஆம் திகதி ஆகும். இந்நாள் மகளிர் தினம் கொண்டாடுவதற்கு விதையாக அமைந்த நாளாகும்.

18ஆம் நூற்றாண்டு காலப் பகுதியில் உலகின். பல் நாடுகளில் அலுவலகங்களில் பெண்கள் பணிபுரிய தடை விதிக்கப்பட்டதுடன் ஆரம்பக் கல்வியும் மறுக்கப்பட்டது, ஏனைய துறைகளிலும் பெண்கள் ஓரங்கட்டப்பட்டனர். இதனால் உலகம் முழுவதிலும் தொடர்ச்சியான போராட்டங்கள் நடைபெற்றன. அமெரிக்காவின் நியூயோர்க்கில் பெண்கள் நாளொன்றுக்கு 16 மணித்தியாலம் வேலை செய்ய வேண்டும் என்று தொழிற்சங்க உரிமையாளர்கள் கட்டளையிட்டதுடன், குறைந்தளவிலான ஊதியமே வழங்கப்பட்டது. இதனால் 1857ஆம் ஆண்டு மார்ச் 8ஆம் திகதி பெண்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர். இப் போராட்டத்தினை தொழிற்சாலை உரிமையாளர்கள் அரசின் உதவியுடன் அடக்கினர். ஆனால் இது நீண்ட காலம் நிலைக்கவில்லை. தொடர்ச்சியாக போராட்டங்கள் நடைபெற்றுக்கொண்டேயிருந்தது.

1910ஆம் ஆண்டு டென்மார்க் நாட்டில் பெண்கள் உரிமை மாநாடு நடைபெற்றது. இம் மாநாட்டில் உலகின் பல் நாடுகளைச் சேர்ந்த பெண்கள் அமைபபுக்கள் கலந்து கொண்டன. இந்த மாநாட்டில் கலந்து கொண்ட ஜெர்மனி நாட்டின் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் கிளாரே செர்கினே தீர்மானமொன்றை முன்வைத்தார். அதாவது உலகம் முழுவதும் மார்ச் 8ஆம் திகதி மகளிர் தினம் கொண்டாடப்பட்ட வேண்டுமென்பதேயாகும். ஆனாலும் பல தடங்கல்கள் காரணமாக இத்தீர்மானம் நிறைவேறாமல்ப் போனது.

1920ஆம் ஆண்டு சோவியத் ரஷ்யாவில் இடம் பெற்ற போராட்டத்தில் கலந்து கொண்ட "அலெக்ஸ்சாண்ட்ரா கெலன்ரா" ஆண்டு தோறும் மார்ச் 8ஆம் திகதி மகளிர் தினம் கொண்டாடபபட வேண்டுமென்று பிரகடனம் செய்தார்.

இவ்வாறு நடைபெற்ற பல போராட்டங்கள், தீர்மானங்கள் அடிப்படையில் 1921ஆம் ஆண்டு மார்ச் 8ஆம் திகதி முதல் உலகம் முழுவதிலும் சர்வதேச மகளீர் தினம் கொண்டாடப்பட்டு வருகிறது.

ஆண்களுக்கு நிகராக பெண்கள் இன்று அனைத்து துறைகளிலும் கால் பதித்திருப்பது வரவேற்றகத்தக்கது. நாட்டினை ஆட்சி செய்யும் அளவிற்கு பெண்கள் வளர்ச்சியடைந்திருப்பது பெண்கள் முன்னுதாரணமாக செயற்படுவதனை எடுத்துக் காட்டுகின்றது. இன்று உலகின் பல்வேறு முக்கியமான பதவிகளில் ஆண்களுக்கு நிகராக பெண்களும் இருப்பதனை அவதானிக்க முடிகின்றது. எனவே இன்று உலகின் ஆண்களுக்கு நிகராக பெண்களும் வளர்ச்சியடைந்திருப்பதனை மறுத்துவிட முடியாது. ஆனாலும் உலகில் சில பகுதிகளில் பெண்களுக்கெதிரான அடக்குமுறைகளும் வன்முறைகளும் கட்டவிழ்த்து விடப்பட்டு இருப்பதனையும் யாராலும் மறுத்துவிட முடியாது. இதற்கு சிறந்த உதராணமாக அண்மையில் இந்தியாவின் ஓடும் பேருந்தில் கல்லூரி மாணவி பாலியல் பலாத்காரம் செய்யப்பட்டமையை குறிப்பிடலாம்.

பெண்களுக்கெதிரான அனைதது விதமான அடக்குமுறைகளி லிருந்தும் உலகில் உள்ள அனைத்தும் பெண்களும் விடுதலை பெற்று பெண்கள் தனித்துவத்துடன் வாழ அனைவரும் பாடுபட வேண்டும்.

பொ.மிதிலன்.

## கிறிஸ்தவ நற்சிந்தனை

# தெய்வீக அன்பை கொடு

(ஓசேயா 14 : 2 - 10)
(மாற்கு 12 : 28 - 34)

இன்றைய நற்செய்தி வாசகத்தில் முதன்மையான கட்டளைகள் சொல்லித்தரப்படுகின்றன. ஒன்று, கடவுளுடன் கொள்ளும் அன்பு மற்றது சக மனிதனுடன் கொள்ளும் அன்பு, சிலுவை மெக்குக் காட்டும் குறியீடு, கடவுளுக்கும் மனிதனுக்கும் இடையிலான அன்பை நிலைக்குத்துச் சட்டமும், மனிதருக்கும் சக மனிதருக்கும் இடையிலான அன்பைக் கிடைச்சட்டமும் சுட்டும் - . அன்பைப் பெற்றும், கொடுத்தும் வாழ அழைக்கப்படுகின்றோம்.

அன்பை கறைப்படுத்தும் விடயங்கள் உண்டு. அதுதான் அன்பிலே வரும் பேராசை. பேராசை என்பது ஒருவரை அவர் எங்களுக்குத் திருப்பித் தரக்கூடிய காரியங்களுக்காக அவரில் அன்பு வைப்பது ஆகும். ஒரு நபரை அவருக்காக அல்ல அந்த நபரை எங்களுக்காக அன்பு கூறுவது.

சுயநலம் - எங்களுடைய சந்தோசத்திற்காக எங்களுடைய திருப்திக்காக, எங்களிலே இருக்கும் 'நான்' என்பதை பெருமைப் படுத்துவதற்காக நாம் காட்டும் அன்பு.

அடுத்து அன்பிலே வரும் ஆதிக்கமும் தவறானது. எங்கே அன்பு என்ற பெயரிலே ஆதிக்கம் நுழைகிறதோ, எங்கே அந்த அன்பு தன்னுடைய கோரிக்கைகள் எப்போதும் நிறைவேற்றப்பட வேண்டும் என்ற எண்ணம் கொண்டதாய் இருக்கின்றதோ, அந்த அன்பு பிறரை வாழ்விப்பதில்லை அது திணறடிக்கிறது. உண்மை அன்பை 'அன்பு' என்ற பெயராலேயே சாகடிக்கிறது.

எங்கள் மனித அன்பு மனித அன்பாய் மட்டும் நின்றுவிட்டால், போதாது அது தெய்வீக அன்பாய் மாற வேண்டும்.

-வி.பி.தனேந்திரா.







## வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர் : ....................................

முகவரி : ....................................

பிறந்த ஆண்டு : ....................................

கூப்பன்கள் ஐந்தும், புகைப்படமும்

....................................

பெற்றோர் கையொப்பம்

உங்களது பத்து வயதுக்குட்பட்ட சிறார்களின் பிறந்த நாள் கொண்டாட்டங்களில் "தினமுரசு" தினப்பதிப்பும் இணைகின்றது. உங்களது சிறாரின் புகைப்படத்துடன் கீழ்வரும் கூப்பன்களில் ஐந்தினை நிரப்பி எமக்கு அனுப்பி வையுங்கள். தினமுரசு தினப்பதிப்பு உங்கள் அன்புச் செல்வத்தின் பிறந்த நாளன்று புகைப்படத்துடன் கூடிய பிறந்த நாள் செய்தியைப் பிரசுரிக்கும் என்பதை மனமகிழ்வுடன் தெரிவிக்கின்றோம்.

# ஐ.நா.அமைதிப்படையினரை கடத்திச் சென்ற சிரிய போராளிகள்



சிரிய அரசுக்கு எதிராக யுத்தம் புரியும் போராளிப் படையினர் ஐ.நா. அமைதிப் படையினர் 20 பேரை துப்பாக்கி முனையில் பிடித்து அடைத்து வைத்துள்ளனர். சிரிய உள்நாட்டு யுத்தத்தில் இந்த சம்பவம் சில மாற்றங்களை ஏற்படுத்தப் போகின்றது.

சிரிய போராளிப் படையினர் இதுவரை முற்றுமுழுதாக மேலை நாட்டு ஆதரவை பெற்றிருந்தனர். தற்போது ஐ.நா. அமைதிப் படையினரின்மீது கை வைதிருப்பதால் முதல் தடவையாக மேலை நாடுகளின் அதிருப்தியை சம்பாதித்துள்ளனர். இது அவர்களுக்கு கெடுதலை ஏற்படுதக்கூடிய நடைமுறை.

இதில் வேடிக்கை என்னவென்றால் ஐ.நா. அமைதிப்படையினர் அங்கு இருப்பது போராளிப் படையினரின் நடவடிக்கைகளை கண்காணிக்க அல்ல. போலன் ஹைட்ஸ் பகுதியில் சிரிய இஸ்ரேலிய இராணுவங்களுக்கு இடையிலான சமாதான ஒப்பந்தத்தை கண்காணிக்கவே ஐ.நா. அமைதிப்படை அங்கே உள்ளது.

UNDOF என்று அழைக்கப்படும் இந்த அமைதிப் படையினரின் முகாமை ஆயுதங்களுடன் முற்றுகையிட்ட சுமார் 30 போராளிப் படையினர் 20 அமைதிப்படை வீரர்களை துப்பாக்கி முனையில் கடத்திச் சென்றுள்ளனர்.

சிரிய போராளிப் படையினருக்கு மேலை நாடுகள் எல்லை வழியாக "ரகசியமாக" ஆயுத சப்ளை செய்து யுத்தத்துக்கு உதவும் நிலையில் தமது தலையில் தாமே மண் அள்ளி போட்டுக் கொண்டுள்ளனர் சிரிய போராளிப் படையினர். (அவர்களில் சுமார் 7 குழுக்கள் உள்ளன. இது எந்தக் குழுவின் வேலை என்று தெரியவில்லை)

இதன் பிரதிபலிப்பு அடுத்த ஓரிரு நாட்களுக்குள் தெரியும்.

உலகச் செய்திகள்

# பத்து இலட்சத்தையும் தாண்டிய சிரிய அகதிகள்



சிரியாவில் அதிபர் ஆசாத் ஆட்சிக்கு எதிராக வெகுண்டெழுந்துள்ள போராளிகள் அரசுப் படைக்கு எதிராக 2 வருடங்களுக்கு மேலாக சண்டையிட்டு வருகின்றனர்.

கடந்த சில மாதங்களாக தீவிரமடைந்துள்ள இந்தச் சண்டையில் குழந்தைகள், பெண்கள் என நூற்றுக்கணக்கானோர் கொல்லப்பட்டு வருவதோடு வீடுகளும் தரைமட்டமாகி வருகின்றன.

இதனால், உயிருக்கு பயந்து அப்பாவி மக்கள் பக்கத்து நாடுகளான ஜோர்தான், லெபனான், துருக்கி, ஈராக் மற்றும் எகிப்து நாடுகளில் தஞ்சம் தேடி வருகின்றனர். இவ்வாறு அகதிகளாக வருவோரின் எண்ணிக்கை இந்த வருடத்திலிருந்து இருமடங்காக அதிகரித்துள்ளது.

இதில் பாதிக்கு மேற்பட்டவர்கள், 11 வயதிற்கு உட்பட்டவர்களே என்கிற செய்தி மிகவும் மனவேதனை அளிக்கிறது. ஒரு அறையில் 20 பேர் இருந்து வருகிறார்கள். இதனால் வசதிகள் இன்றி அவர்களின் நிலைமை மிக மோசமாக உள்ளது என்று ஐ.நா. மனித உரிமை உரிமைகள் ஆணையத்தின் தலைவர் நவநீதம் பிள்ளை தெரிவித்துள்ளார்.

இவ் உள்நாட்டுச் சண்டையில் பாதிக்கப்படும் அப்பாவிப் பொது மக்களுக்கு உலக நாடுகள் உதவுமாறு ஜோர்தான் மன்னர் அப்துல்லா வேண்டுகோள் விடுத்துள்ளார்.

# மாலைதீவு முன்னாள் ஜனாதிபதியின் வழக்கு விசாரணை ஒத்திவைப்பு

மாலைதீவு முன்னாள் அதிபர் நஜீத் மீதான வழக்கின் விசாரணை நான்கு வாரங்களுக்கு தள்ளி வைக்கப்பட்டுள்ளது.

இதையடுத்து அவர் விடுதலை செய்யப்பட்டார். கடந்த செவ்வாய்க்கிழமை கைது செய்யப்பட்ட நஜீத்நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தப்பட்டபோது, அதிபர் தேர்தல் முடியும் வரை வழக்கின் விசாரணையை ஒத்தி வைக்கப்படும் படி கேட்டுக்கொண்டார். அவரது கோரிக்கைக்கு அரசு தரப்பும் ஒப்புக்கொண்டது.

இதையடுத்து வழக்கின் விசாரணையை நான்கு வாரங்களுக்கு ஒத்தி வைக்க நீதிமன்றம் உத்தரவிட்டது. நஜீத்அதிபராக இருந்த போது தலைமை நீதிபதியை கைது செய்ய உத்தரவிட்டதாக அவர் மீது குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

இதைத் தொடர்ந்து அவர் மாலேயில் உள்ள இந்திய தூதரகத்தில் தஞ்சம் புகுந்தார். 11 நாட்களுக்கு பின் கடந்த பெப்ரவரி மாதம் 23ஆம் திகதி இந்திய தூதரகத்தில் இருந்து வெளிவந்த பின்னர் கடந்த செவ்வாய்க்கிழமை கைது செய்யப்பட்டார்.

# 106 வயது பள்ளி மாணவன் பரீட்சையில் சித்தியடைந்தார்

அமெரிக்காவில் பிரெட் பட்லர் என்பவர் தனது 106 ஆவது வயதில் பள்ளிப் படிப்பை முடித்து தேர்ச்சி பெற்றுள்ளார்.

அமெரிக்காவின் பெவர்லி நகரில் 1906ஆம் ஆண்டு பிறந்த இவர் எட்டாம் வகுப்பு படிக்கும் காலத்திலேயே விதவைத் தாயையும், உடன் பிறந்தோர் 5 பேரையும் காப்பாற்ற வேண்டிய குடும்ப பாரம் சுமத்தப்பட்டிருந்ததால் உயர் கல்வி பற்றிய ஆசை ஆழ்மனதில் குடிகொண்டிருந்தபோதிலும், வறுமை அந்த ஆசைக்கு தடைக்கல்லாய் அமைந்து விட்டது.



இந்த நிலையில் தனது 34ஆவது வயதில் இராணுவத்தில் சேர்ந்து இரண்டாம் உலகப் போரின்போது இங்கிலாந்து மற்றும் பிலிப்பைன்சில் பணியாற்றிய இவர் தனது 41ஆவது வயதில் திருமணம் செய்து கொண்டு 65 ஆண்டு தாம்பத்ய வாழ்க்கையில் 5 பிள்ளைகளையும் பெற்று, அவர்கள் அனைவரையும் தான் படித்த பெவர்லி பள்ளியில் படிக்க வைத்து பட்டதாரிகளாக்கினார்.

இராணுவத்திலிருந்து ஓய்வு பெற்ற பின்னர் 1975ஆம் ஆண்டு வரை பெவர்லி நகரின் குடிநீர் துறையில் பணியாற்றினார். எனினும் பள்ளி படிப்பை முடிக்கவில்லையே என்ற எண்ணம் அவரிடத்தில் ஓடிக்கொண்டே இருந்தது.

இந்தநிலையில் தாதிய கல்லூரி ஒன்றில் தங்கியுள்ள பிரெட் பட்லர் அங்கிருந்தபடியே பெவர்லி பள்ளியின் இறுதியாண்டு தேர்வை எழுதி தேர்ச்சியும் பெற்றார்.

பெவர்லி பள்ளியில் கடந்த திங்கட் கிழமை நடைபெற்ற பட்டமளிப்பு விழாவில் சக்கர நாற்காலியில் அமர்ந்தபடி பிரெட் பட்லரின் குடும்பத்தாரும், கொள்ளுப்பேரன் வயது அவரது 'கிளாஸ் மேட்'களும் உற்சாக கரவொலி எழுப்ப பிரெட் பட்லர் பட்டம் பெற்றார்

# உயிரிழந்த வெனிசுலா ஜனாதிபதிக்கு பெருமளவு மக்கள் இறுதி அஞ்சலி

புற்றுநோயால் பாதிக்கப்பட்டு உயிரிழந்த வெனிசுலா நாட்டு அதிபர் ஹியூகோ சாவேசின் உடலுக்கு அந்நாட்டு மக்கள் கண்ணீர் அஞ்சலி செலுத்தி வருகின்றனர்.



சாவேஸின் உடல், தலைநகர் காரகாசில் உள்ள மருத்துவ மனையில் இருந்து ராணுவ தலைமையகத்துக்கு ஊர்வல மாகக் கொண்டு செல்லப்பட்டது.

இந்த ஊர்வலத்தின் போது வழி நெடுங்கிலும் திரண்டிருந்த ஆயிரக்கணக்கான மக்கள் சாவேஸின் உடலுக்கு மரியாதை செலுத்தினர். பொது மக்கள் இறுதி மரியாதை செலுத்துவதற்காக 3 நாட்கள் அவரது உடல், இராணுவத் தலைமையகத்தில் வைக்கப்பட்டது.

முன்னதாக ஆர்ஜண்ரீன அதிபர் கிறிஸ்டினா பெர்னான்டஸ் மற்றும் பொலிவியா அதிபர் இவோ மொரேல்ஸ் ஆகியோர் சாவேஸுக்கு இறுதி மரியாதை செலுத்தினர். சாவேசின் உடலுக்கு இறுதிச் சடங்கு நடைபெறுகிறது

இதேவேளை அதிபர் ஹுகோ சாவேஸின் மரணத்தினால் சவாலான நேரத்தை எதிர்நோக்கி இருக்கும் வெனிசுலா மக்களுக்கு அமெரிக்கா முழு ஆதரவையும் கொடுக்கும். மேலும் அந்நாட்டுடன் ஆக்கபூர்வமான உறவை மேம்படுத்திக்கொள்ள அமெரிக்கா விரும்புகிறது. வெனிசுலா புதிய அத்தியாயத்தை தொடங்க இருக்கும் இந்நிலையில், வெனிசுலாவில் ஜனநாயக கொள்கைகளை ஊக்குவிக்கும், சட்டத்தின் வரைமுறைகளை நிலை நிறுத்தும், மனித உரிமைகளை மதிக்கும் புதிய கொள்கைகளை உருவாக்குவதில் அமெரிக்கா உறுதி ஏற்கும் என்று ஜனாதிபதி ஒபாமா தெரிவித்துள்ளார்.

# விமானத்தில் கத்தி எடுத்துச்செல்ல அனுமதி வழங்கியது அமெரிக்கா

அமெரிக்காவில் கடந்த 2001ஆம் ஆண்டு செப்ரெம்பர் 11ஆம் திகதி அல்கொய்தா தீவிரவாதிகள் விமானங்களை மோதி தாக்குதல் நடத்தி மூவாயிரத்துக்கும் மேற்பட்டோரை கொன்று குவித்ததுடன் பெரும் பொருளாதார சேதத்தையும் ஏற்படுத்தினர். அதன்பின்னர் அமெரிக்காவில் விமானங்களில் பயணிகள் எந்தவொரு ஆயுதத்தையும் எடுத்துச்செல்ல தடை விதிக்கப்பட்டது. ஆனால் இப்போது விமானப்பயணத்தின்போது, பயணிகள் ஒரு சிறிய அளவிலான கத்தியை எடுத்துச்செல்ல அமெரிக்க போக்குவரத்து பாதுகாப்பு நிர்வாகம் அனுமதி அளித்துள்ளது. இந்த அனுமதி வரும் ஏப்ரல் 25ஆம் திகதி முதல் அமுலுக்கு வருகிறது. ஆனால் அரசின் இந்த அனுமதி, விமானத்தின் சக பயணிகளுக்கும், சிப்பந்திகளுக்கும் ஆபத்தை ஏற்படுத்தும் நடவடிக்கை என விமான ஊழியர்கள் கருத்து தெரிவித்துள்ளனர்

# ஆப்கான் போரில் காணாமற்போன ரஷ்ய வீரர் முஸ்லிமாக கண்டுபிடிப்பு



ரஷ்யா- ஆப்கானிஸ்தான் (1979) இடையே நடந்த போரின் போது காணாமற் போன இராணுவ வீரர் ஒருவர் தற்போது கண்டுபிடிக்கப்பட்டுள்ளார்.

தென் ஆப்கானிஸ்தானில் ஹெராட் என்ற பகுதியில் இவர் மூலிகை வைத்தியராக பணியாற்றுவதுடன் குடும்பத்துடன் வசித்து வருகிறார்.

ரஷ்ய படை ஆப்கான் மீது தொடுத்த போரின் போது அந்நாட்டின் சிகப்பு படையில் பணியாற்றியுள்ளார்.

இவரது இயற்பெயர் பகிரிடின் சுகி மோவ், போரின் போது 2 மாதங்களிலிலேயே யுத்தத்தில்" காயமடைந்த இவரை ஆப்கான் மக்கள் காப்பாற்றி பாதுகாத்து வந்துள்ளனர். பின்னர் ஆப்கானிலேயே திருமணம் முடித்துக்கொண்டு இஸ்லாமியராக மாறி தன் பெயரை சேக் அப்துல்லா என மாற்றிக்கொண்டார்.

தற்போது காணாமல் போன 264 சிகப்பு படை வீரர்களை தேடிக் கண்டுபிடிக்கும் நடவடிக்கையொன்று முன்னெடுக்கப்பட்ட போது, இவரை கண்டுபிடித்துள்ளனர். சேக் அப்துல்லாவும் தான் பணியாற்றிய குழு குறித்தும் அவர்களுடன் எடுத்துக்கொண்ட புகைப்படங்கள் பற்றியும் தெரிவித்துள்ளார்.

1979ல் ஆப்கானுடனான போரில் 15,000 சோவியத் வீரர்கள் கொல்லப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# இந்திய உதவியுடன் துவிச்சக்கர வண்டிகள்

## நிறைவடைந்தது செயற்றிட்டம்

இந்திய அரசாங்கத்தின் நிதியுதவியுடன் வடமாகாணத்தில் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான துவிச்சக்கர வண்டி வழங்கும் செயற்றிட்டம் கடந்த 4 ஆம் திகதியுடன் வெற்றிகரமாக நிறைவடைந்துள்ளதாக யாழ். இந்தியத் துணைத்தூதரகம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் யாழ். இந்தியத் துணைத்தூதரகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் வடக்கில் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு 10 ஆயிரம் துவிச்சக்கர வண்டிகளை இந்திய அரசாங்கம் வழங்கும் என்று கடந்த வருடம் பெப்ரவரி மாதம் இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகரகம் தெரிவித்தது.

இதன் அடிப்படையில் யுத்தத்தால் பாதிக்கப்பட்டவர்களின் போக்குவரத்தை மேம்படுத்தும் நோக்கில் இலங்கை அரசாங்கத்தினால் இனங்காணப்பட்ட முன்னுரிமை அடிப்படையில் இத்திட்டம் 67 மில்லியன் ரூபா செலவில் செயற்படுத்தப்பட்டுள்ளது.

இதில் வடமாகாணத்திற்கு மட்டுமே இந்த செயற்றிட்டம் மேற்கொள்ளப்பட்டுள்ளது இதில் முல்லைத்தீவு மாவட்டத்திற்கு 2500, கிளிநொச்சி மாவட்டத்திற்கு 2500, மன்னார் மாவட்டத்திற்கு 1750, வவுனியா மாவட்டத்திற்கு 1750, யாழ். மாவட்டத்திற்கு 1500 துவிச்சக்கர வண்டிகள் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளதாக யாழ். இந்தியத் தூதரகம் தெரிவித்துள்ளது.

இந்த துவிச்சக்கர வண்டிகளை முன்னாள் இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.எம்.கிருஸ்ணா, இந்திய எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் சுஷ்மா சுராஜ், அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார், வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி, இந்தியத் துணைத்தூதுவர் மகாலிங்கம், மற்றும் யாழ். மாநகர மேயர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா ஆகியோர் வழங்கி வைத்ததாகவும் அந்த துவிச்சக்கரவண்டி விநியோகத்திற்கு ஐக்கிய நாடுகள் சபையின் அகதிகளுக்கான உயர்தானியராலயம் பெரும் பங்காற்றியுள்ளதாகவும் யாழ். இந்தியத் தூதரகம வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (02)



பண்ணாகத்தைச் சேர்ந்த மகேஸ்வ்ரன் ஸ்ரீமுருகவேள் மொழிபெயர்ப்பாளராக சத்தியப்பிரமாணம் செய்துள்ளார். மல்லாகம் மாவட்ட நீதிபதி கஜநிதிமாலனின் முன்பாக அண்மையில் அவர் சத்தியப் பிரமாணம் செய்து கொண்ட போது...

### சிப்பி கடத்திய...

உத்தியோகத்தர்களால் சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார். மிகவும் கிடைத்தற்கரிய விசேட இனத்தைச் சேர்ந்த இந்த கடற்சிப்பிகள் சுமார் 20 இலட்சம் ரூபா பெறுமதியானவை என மதிப்பீடு செய்யப்பட்டுள்ளதாகச் சுங்கப் பணிப்பாளர் மேலும் தெரிவித்துள்ளார்.

### முஸ்லிம்கள்...

உடன் முயற்சித்து வருவதாகவும் தெரிவித்துள்ளது. முஸ்லிம் மக்களுக்கு எதிரான அச்சுறுத்தல்கள் அடக்குமுறைகளுக்கு எதிராக அரசாங்கம் உரிய நடவடிக்கை எடுக்கத் தவறியுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளது. சிறுபான்மை மக்களுக்கான உரிமைகளை உறுதிப்படுத்துவது தொடர்பில் அரசாங்கம் சர்வதேச சட்டங்களை பின்பற்ற வேண்டுமென்பதனை ஐக்கிய நாடுகள் அமைப்பு வலியுறுத்த வேண்டுமென முஸ்லிம் தமிழ்த் தேசியப் பேரவையின் தலைவர் அசாத் சாலி தெரிவித்துள்ளார். 1982 ஆம் ஆண்டில் ஐக்கிய நாடுகள் அமைப்பினால் சிறுபான்மை சமூகம் தொடர்பில் செய்யப்பட்ட பிரகடனத்தை அரசாங்கம் மீறிச் செயற்பட்டுள்ளதாகக் குறிப பிட்டுள்ளார். எந்தவொரு நாடும் சிறுபான்மை மக்களை ஒடுக்குமுறைக்கு உட்படுத்தக்கூடாது என இந்தப் பிரகடனத்தில் விதந்துரைக்கப்பட்டுள்ளது. நாட்டின் சகல இனங்களும், சகல மதங்களும் மதிக்கப்பட வேண்டுமென்பதனை அரசாங்கத்திற்கு வலியுறுத்துமாறு அசாத்சாலி, ஐக்கிய நாடுகள் அமைப்பிடம் கோரியுள்ளார்.

# முல்லை கேப்பாபுலவில் இராணுவத் தளபதி

முல்லைத்தீவு பிரதேசத்திற்கு கடந்த செவ்வாய்க்கிழமை விஜயம் செய்த இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் ஜகத் ஜயசூரிய கேப்பாபுலவு மீள்குடியேற்ற கிராமத்திற்கும் சென்று நிலைமைகளை பார்வையிட்டார்.

கேப்பாபுலவு பிரதேசத்தில் மீள்குடியமர்த்தப்பட்டுள்ள தமிழ் குடும்பங்களுடன் நேரடியாகக் கலந்துரையாடிய இராணுவத் தளபதி, குறைநிறைகளை கேட்டறிந்து கொண்டதுடன் இராணுவத்தின் உதவியுடன் அங்கு மீள்குடியமர்த்தப்பட்ட தமிழ் மக்களுக்காகப் புதிதாக நிர்மாணிக்கப்பட்டுவரும் வீடுகளையும் பார்வையிட்டார். கேப்பாபுலவு மாதிரிக் கிராமத்தில் இராணுவத்தின் உதவியுடன் சுமார் 165 வீடுகள் நிர்மாணிக்கப்பட்டு வருகின்றன. இவற்றில் 50 வீடுகள் எதிர்வரும் தமிழ் - சிங்களப் புத்தாண்டுக்கு முன்னர் கட்டிமுடிக்கப்பட்டு தமிழ் மக்களிடம் கையளிக்கப்படவுள்ளன.

அத்துடன் மீள்குடியேற்ற அமைச்சின் நிதியுதவியில் இராணுவத்தின் 592 ஆவது படையணியின் உதவியுடன் 40 வீடுகள் நந்திக் கடல் களப்பு பிரதேசத்தில் நிர்மாணிக்கப்பட்டு வருகிறது. இந்த 40 வீடுகளும் நந்திக்கடல் களப்பு பிரதேசத்தில் மீன்பிடி தொழிலில் ஈடுபட்டுள்ள மீள்குடியமர்த்தப்பட்ட மீனவக் குடும்பங்களுக்கு இம்மாதம் 16 ஆம் திகதி கையளிக்கப்படவுள்ளன. கேப்பாபுலவு மற்றும் நந்திக்கடல் களப்பு பிரதேச வீடமைப்பு திட்டங்களை நேரில் பார்வையிட்ட இராணுவத் தளபதி அதனை துரிதப்படுத்துவதற்கு தேவையான ஆலோசனைகளையும் படையினருக்கு இதன்போது வழங்கினார்.

வடக்கு, கிழக்கில் யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட அனைத்து இன மக்களுக்கும் இராணுவத்தினர் வழங்கும் நிவாரணம் மற்றும் மனிதாபிமான உதவிகள் தொடர்பில் சர்வதேச சமூகத்தினருக்கு முழுமையான அளவு தெரியவில்லை என்று தான் நமபுவதாக அங்கு தெரிவித்த இராணுவத்தளபதி, இது கவலைக்குரிய விடயம் என்றும் தெரிவித்தார்.

கேப்பாபுலவு போன்ற பல்வேறு சமூக, நலன்புரி சேவைகளை இராணுவத்தினர் மூலம் மேற்கொள்ளப்படும் திட்டங்கள் தொடர்பில் சர்வதேச சமூகம் விளங்கிக்கொள்வதில்லை. நாட்டின் தேசிய அக்கறையை, பாதுகாப்பின் முக்கியத்துவம் பற்றியும் இராணுவத்தளபதி இங்கு விளக்கமளித்துள்ளார்.

### குற்றச்சாட்டுக்களுக்கு...

முழுமையாக அமுல்படுத்தி வருவதாகவும், இதனை உலக நாடுகள் சரியாக கவனிக்க வேண்டுமெனவும் அமைச்சர் மகிந்த சமரசிங்க மேலும் தெரிவித்துள்ளார்.

மனித உரிமைப் பேரவையில் தாம் அளித்த விளக்கத்தை உலக நாடுகள் ஏற்றுக்கொள்ளும் என அவர் நம்பிக்கை வெளியிட் டுள்ளார்.

யுத்தத்தின் பின்னர் நாட்டில் ஏற்பட்ட அபிவிருத்தியை நேரில் கண்டறிந்து கொள்ளுமாறு தாம் உறுப்பு நாடுகளுக்கு அழைப்பு விடுத்துள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

நாட்டின் உண்மையான நிலைமையை தான் அங்கு விளக்கியதாகத் தெரிவித்துள்ளார்.

இடம்பெயர்ந்த மக்கள் மீள்குடியேற்றப்பட்டுள்ளதாகவும், நிலக்கண்ணிவெடி அகற்றுதல், முன்னாள் போராளிகளுக்கு புனர்வாழ்வு அளித்தல் ஆகிய பல்வேறு விடயங்களில் இலங்கை பாரியளவு அபிவிருத்தியை எட்டியுள்ளதாக அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

தற்போது கொழும்பிற்கு திரும்பியுள்ள அமைச்சர் சமரசிங்க மீளவும் எதிர்வரும் 15 ஆம் திகதி ஐக்கிய நாடுகள் மனித உரிமைப பேரவையின் அகில கால மீளாய்வு அமர்வு விவாதங்களில் பங்கேற்பதற்காக ஜெனிவா விஜயம் செய்வார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

### ஜெனிவாவில்...

மறுபடியும் இலங்கைக்கு எதிரான அமெரிக்க நெருக்கடியை தணித்து தனது செல்வாக்கை உறுதிப்படுத்தியதாகவும் அமையும். இதற்காக இலங்கை அமெரிக்காவிற்கும், இந்தியாவிற்கும் தெளிவுபடுத்த வேண்டிய விடயம் என்னவென்றால், சீனாவுடன் நெருக்கமாகி வரும் தனது உறவு பொருளாதார நலன் சார்ந்தது மட்டுமே. அரசியல், பாதுகாப்பு, ஒத்துழைப்பு என்பதில் முன்னுரிமை அமெரிக்காவிற்கும், இந்தியாவிற்கும் தான் என்பதே.

உண்மை நிலைமையும் இதுதான். சீனாவுடனான இலங்கையின் உறவு சீனாவிடமிருந்து கடன்கள், ஏனைய பொருளாதாரவிடயங்களை மையப்படுத்தியே உள்ளது. உலக வல்லரசான அமெரிக்காவையும், பிராந்திய வல்லரசான இந்தியாவையும் தாண்டி பாதுகாப்பு ஒத்துழைப்பில் சீனாவுடன் இணங்குவது சாதுரியமான விடயமல்ல என்பதை இலங்கையின் கொள்கை வகிப்பாளர்கள் நன்கு உணர்வர்.

எனவே, இலங்கை, இந்தியா, அமெரிக்கா ஆகிய மூன்றும் ஒரே புள்ளியில் வருகின்ற போது ஜெனிவாத்தீர்மானம் என்பது வலுவில்லாத ஒன்றாக மாறும். இதனால் பயனடைவது இந்தியா, இலங்கை, அமெரிக்கா மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர், பாதிக்கப்படுவது மீண்டும் தமிழ் மக்கள் தான்.

### மரக்கறி...

அதிகரித்துள்ளன. இக்காலப் பகுதியில் மரக்கறி வகைகளின் விலை வீழ்ச்சி காணப்பட்டிருக்கும் ஆனால். இந்த வருடத்தில் இவ்வாறு மரக்கறி வகைகள் விலை அதிகரிப்பால் மக்கள் பெரிதும் கவலை அடைந்துள்ளனர். தற்போது தாழ்வான தோட்டக் காணிகளில் பயிரிடப்பட்ட பயிர்கள், செடிகள், நீர் தேங்கி நிற்பதால் அழுகும் நிலையில் காணப்படுகின்றன. இதனால் வரும் மாதங்கள் மரக்கறிவகைகளுக்குப் பெரும் தட்டுப்பாடு வரலாம் என்றும் இதனால் இன்னும் விலை அதிகரிக்கலாம் என்றும் விவசாயிகள் தெரிவிக்கின்றனர். மரக்கறி வகைகள் மட்டுமல்லாமல் சிறுதானியங்களும் அழிவடைந்துள்ளதாக விவசாயிகள் கவலை வெளியிட்டுள்ளனர். (இ)

### இளைஞர்...

மன்றத்தின் முதல் அமர்வு மே மாதம் 23ஆம் திகதி இடம்பெறும் என மன்றத்தின் தலைவர் லலித்பியும் பெரேரா மேலும் தெரிவித்தார். முதலாவது இளைஞர் நாடாளுமன்றத்தின் அமர்வு கடந்த மாதம் நிறைவடைந்தமை குறிப்பிடத்தக்கது. இளைஞர் விவகார திறன் அபிவிருத்தி அமைச்சு மற்றும் தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் ஆகியவற்றின் ஏற்பாட்டிலேயே இளைஞர் நாடாளுமன்ற செயன்முறை இடம்பெறுகின்றது. அத்துடன் இரண்டாவது இளைஞர் நாடாளுமன்றத்தின் முதல் அமர்வு மே மாதம் 23 ஆம திகதி இடம்பெறும் என மன்றத்தின் தலைவர் லலித்பியும் பெரேரா தெரிவித்தார்.

இதேவேளை, இரண்டாவது இளைஞர் நாடாளுமன்றக்கூட்டத் தொடரை கூட்டுவது தொடர்பான கலந்துரையாடல் கடந்த பெப்ரவரி 28 ஆம் திகதி இளைஞர் விவகார மற்றும் திறன்கள் அபிவிருத்தி அமைச்சர் டலஸ் அழகப்பெரும தலைமையில் இடம்பெற்றது. இதன்போதே மேற்குறித்த தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

### யாழ்ப்பாணம்...

நடனங்களுடன் ஆரம்பித்து வைக்கப்பட்ட இப் பாதயாத்திரை, தொடராக 30 நாட்களுக்கு இடம்பெறவிருக்கின்றது. கிரிவெஹர புனித பூமியில் ஆரம்பமான இப் பாதயாத்திரை கதிர்காமம், சிவனொளிபாதமலை, கண்டி, மாத்தளை, தம்புள்ள, பொலன்னறுவை, அநுராதபுரம் ஊடாக யாழ்ப்பாணத்தைச் சென்றடையவிருக்கின்றது. இப் பாதயாத்திரை முக்கிய நகர்களை அடையும்போது அந்தந்தப் பிரதேசங்களைச் சேர்ந்த அமைச்சர்கள், பிரதியமைச்சர்கள், மாகாண அமைச்சர்கள், நாடாளுமன்ற, மாகாண சபை உறுப்பினர்கள் உள்ளிட்ட முக்கியஸ்தர்களும் இணைந்து கொள்ளவுள்ளனர்.

நாட்டின் பல பிரதேசங்களையும் சேர்ந்த தேசிய இளைஞர் சேவைகள் மன்ற உறுப்பினர்கள் பெருமளவில் பங்கு பற்றியுள்ள இப் பாதயாத்திரை கிரிவெஹர விகாரையில் மத வழிபாடுகளுடன் ஆரம்பமானது. இப் பாதயாத்திரையின் தொடக்க வைபவத்தில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுடன் நாடாளுமன்ற உறுப்பினர்களான நாமல் ராஜபக்ஷ, சஜின்வாஸ் குணவர்தன, உதித லொக்குபண்டார, மனுஷ நாணயக்கார, ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க, தேசிய இளைஞர் சேவைகள் மன்றத் தலைவர் சட்டத்தரணி லலித்பியும் பெரேரா உட்பட முக்கியஸ்தர்கள் பலரும் கலந்துகொண்டார்கள்.

## புதுடில்லியின் மெத்தனப் போக்கை கண்டித்து

# லோக்சபாவிலிருந்து தமிழக எம்.பி.க்கள் வெளிநடப்பு

(கொழும்பு)

இலங்கை விவகாரம் தொடர்பில் இந்திய லோக்சபாவில் நேற்று கடுமையான வாத விவாதங்கள் இடம்பெற்ற நிலையில், இந்திய வெளிவிவகார அமைச்சரின் கருத்து திருப்தியளிக்கவில்லை எனக்கூறி, தி.மு.க, அ.தி.மு.க என அனைத்து கட்சி தமிழக எம்.பி.க்களும் பா.ஜ.க. எம்.பி.க்களும் கூட்டாக வெளிநடப்பு செய்துள்ளனர் என்று இந்திய செய்திகள் தெரிவிக்கின்றன.

லோக்சபாவில் காலை முதல் பல்வேறு கட்சி எம்.பி.க்களும் இலங்கை மீதான மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுக்களைச் சுட்டிக்காட்டி இந்திய அரசாங்கம் கடுமையான நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும் என வலியுறுத்தினர்.

இந்த விவாதத்தின் முடிவில் பதிலளித்த இந்திய வெளிவிவகார அமைச்சர் சல்மான் குர்ஷித், இலங்கையில் தமிழர்கள் சம உரிமையுடன் வாழ வகை செய்வோம். 13 ஆவது அரசியல் சாசன திருத்தத்தைத் தாண்டியும் கூடுதலான அதிகாரங்களைப் பெற்றுத் தருவோம். இலங்கை அயல் நாடு. அந்த நாட்டின் மனித உரிமை மீறல்களுக்கு எதிரான ஆதாரங்கள் வெளியாகி இருக்கின்றன என்றார்.

அத்துடன், ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் பேரவையில் அமெரிக்கா கொண்டு வரும் தீர்மானம் பற்றி இன்னமும் முடிவெடுக்கவில்லை. முடிவெடுக்கும் போது உங்களின் உணர்வுகள் கவனத்தில் கொள்ளப்படும். இலங்கை மீது கோபப்படுவது மட்டும் தீர்வாகிவிடாது.

இலங்கையில் நடந்திருப்பது மிகப் பெரிய மனிதாபிமான பிரச்சினை. இதற்கு தீர்வு காண நீண்டகாலமாகும். இந்தியா பெரியண்ணன் பாணியில் அல்லது உலக பொலிஸ்காரனாக செயற்பட முடியாது எனக் குறிப்பிட்டார்.

அமைச்சரின் பேச்சுக்கு குறுக்கிட்ட திராவிட முன்னேற்றக் கழக எம்.பி.யான டி.ஆர்.பாலு, 'எப்பவுமே இதே பதிலை சொல்லிக் கொண்டிருந்தால் எப்படி' என்று கேள்வி எழுப்பினார். அதன் பின்னர் அவருக்கு ஆதரவாக அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் எம்.பி. தம்பித்துரையும் குரலெழுப்பியுள்ளார்.

இந்நிலையில், வெளிவிவகார அமைச்சர் தனது உரையை மீண்டும் தொடர்ந்ததை அடுத்து, 'நீங்க இப்படி பேசிகிட்டிருங்க... நாங்கள் வெளியே போகிறோம்' எனக் குறிப்பிட்டுள்ள தி.மு.க, அ.தி.மு.க உள்ளிட்ட அனைத்து தமிழக எம்.பி.க்களும் கூட்டாக வெளிநடப்பு செய்துள்ளனர்.

இதைத் தொடர்ந்து சல்மான் குர்ஷித் மீண்டும் பேசத் தொடங்கியதை அடுத்து, பாரதிய ஜனதா கட்சியின் எம்.பி.யான யஷ்வந்த் சின்ஹா, தமிழர்கள் சுயமரியாதையுடன் வாழ என்ன செய்யப் போகிறீர்கள்? என்று கேள்வி எழுப்பினார்.

இதற்கு பதிலளித்த வெளிவிவகார அமைச்சர், வீடு கட்டிக் கொடுத்தோம் என்றார். அவரது பதிலுக்கு அதிருப்தி வெளியிட்ட பா.ஜ.க. எம்.பி.க்களும் தங்களது கண்டனத்தை வெளியிட்டவாறு வெளிநடப்பு செய்துள்ளனர்.

# முல்லையில் 177 பேருக்கு கைத்தொழில் உபகரணங்கள்

(முல்லைத்தீவு)

முல்லை மாவட்ட செயலகத்தின் மாநாட்டு மண்டபத்தில் இன்று காலை 9.00 மணிக்கு கைத்தொழில் உபகரணங்கள் கையளிக்கப்படவுள்ளன.

முல்லை மாவட்டத்தில் 6 பிரதேச செயலர் பிரிவுகளைச் சேர்ந்த 177 பேருக்கு 10 ஆயிரம் ரூபா பெறுமதியான உபகரணங்கள் வழங்கப்படவுள்ளன.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக நா.வேதநாயகன், சிறப்பு விருந்தினராக ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் முல்லை மாவட்ட அமைப்பாளர் எஸ். ஜெயராஜ் (கிருபன்) ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (12)

# சைவநெறி பாட செயலமர்வு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண கல்வி வலயத்திற்குட்பட்ட நல்லூர் கோட்ட பாடசாலைகளில் தரம் 6,7,8 ஆகிய தரங்களில் சைவநெறி பாடம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான செயலமர்வு இன்று காலை 8.15 முதல் பி.ப. 4.15 வரையும் செங்குந்தா இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

எனவே குறிப்பிட்ட வகுப்புக்களில் சைவநெறி பாடம் கற்பிக்கும் நல்லூர் கோட்ட பாட ஆசிரியர்களை யாழ். வலய முகாமைத்துவ பிரதிக் கல்விப் பணிப்பாளர் ஏ.எஸ்.சற்குணம் கேட்டுக்கொண்டுள்ளார்.

இச்செயலமர்வுக்கு வரும் ஆசிரியர்களினை தவறாது பாடத் திட்டம், ஆசிரிய கைநூல், எழுது பொருட்கள், பாடநூல், மதிய உணவு என்பவற்றைக் கொண்டு வருமாறும் அவர் மேலும் கேட்டுக்கொண்டுள்ளார். (42)

# விவசாயக் கடனை செலுத்தும் காலத்தை நீடிக்க கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

கடந்த வருடம் இடம்பெற்ற வெள்ள அனர்த்தம் காரணமாக பாதிப்படைந்த விவசாயிகளின் கடன் மீளச் செலுத்தும் காலத்தை 2 வருடத்திற்கு நீடிப்பதற்கு இலங்கை மத்திய வங்கியிடம் கோரிக்கை ஒன்றை சமர்ப்பிக்க யாழ். மாவட்ட விவசாய அபிவிருத்திக்குழு தீர்மானித்துள்ளது.

யாழ். மாவட்ட விவசாய அபிவிருத்திக் குழு கூட்டம் கடந்த செவ்வாய்க்கிழமை யாழ் மாவட்டச் செயலகத்தில் யாழ். அரச அதிபர் சுந்தரம் அருமையாகம் தலைமையில் நடைபெற்றது. இதன்போதே இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.


கடந்த வருடம் யாழ். மாவட்டத்தில் பெய்த கடும் மழையினால் பெருமளவான விவசாய நடவடிக்கை பாதிக்கப்பட்டுள்ளது இதனால் அரச மற்றும் தனியார் வங்கிகளில் விவசாயக் கடன் பெற்று விவசாய நடவடிக்கையினை மேற்கொண்டவர்கள் இந்த இயற்கை அனர்த்தம் காரணமாக அதனை மீளச் செலுத்த முடியாத நிலை காணப்படுவதாக இந்தக் கூட்டத்தில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

பொது மக்களின் இந்தப் பிரச்சினையை ஏற்றுக்கொண்டதை அடுத்து இத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

அத்துடன் இந்தக் கூட்டத்தில் சாவகச்சேரி, சண்டிலிப்பாய், தொல்புரம், கைதடி போன்ற இடங்களில் நெல்கொள்வனவு செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதோடு இதன் அடிப்படையில் சம்பா 35 ரூபாவிற்கும், நாட்டரிசி 32 ரூபாவிற்கும் கொள்வனவு செய்ய தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்தக் கூட்டத்தில் விவசாயத் திணைக்களப் பணிப்பாளர், கம நல அபிவிருத்தி திணைக்களப் பணிப்பாளர், இலங்கை வங்கியின் பிராந்திய முகாமையாளர், பிரதேச செயலர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (02)

# வெனிசூலா ஜனாதிபதி மறைவுக்கு மகிந்த அனுதாபம்



(கொழும்பு)

வெனிசூலா ஜனாபதி ஹுகோ சாவேஸின் மறைவிற்கு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அனுதாபம் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பான அனுதாபச் செய்தியினை வெனிசூலாவின் பதில் ஜனாதிபதிக்கு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அனுப்பியுள்ளார். ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அனுப்பியுள்ள அனுதாபச் செய்தில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

சாவேஸின் மரண செய்தியை அறிந்தபோது நான் ஆழ்ந்த சோகத்தில் வீழ்ந்தேன். வெனிசூலா அரசாங்கம், பொதுமக்கள் மற்றும் சாவேஸின் குடும்பம் ஆகிவற்றுக்கான என்னுடைய இந்த அனுதாபச் செய்தியில் இலங்கை அரசாங்கமும் மக்களும் இணைந்துகொண்டுள்ளனர்.

மறைந்த ஜனாதிபதி வெனிசூலா நாட்டின் உண்மையான புதல்வராவார். அத்துடன் நாட்டின் அபிவிருத்தி மற்றும் நலன்புரி செயற்பாடுகளுக்கு பாரிய பங்களிப்பினை செலுத்தியுள்ளதுடன் அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளுக்கு வலுவான ஆதரவாளராகவும் இருந்துள்ளார்.

இலங்கையின் நண்பரான சாவேஸ், இரு நாடுகளுக்குமான உறவை வளர்ப்பதற்கு பாரிய பங்களிப்பினை மேற்கொண்டுள்ளார் எனத் தெரிவித்தார். நீண்ட நாட்களாக சுகயீன முற்றிருந்த வெனிசூலா ஜனாபதி ஹுகோ சாவேஸ், தனது 58 ஆவது வயதில் கடந்த செவ்வாய்க்கிழமை இரவு காலமாகினார்.

## பிரதிப் பொலிஸ் மா அதிபராக வாஸ்

(கொழும்பு)

சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் வாஸ் குணவர்த்தன பிரதிப் பொலிஸ் மா அதிபராக தரமுயர்த்தப்பட்டுள்ளார்.

உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் பொலிஸ் மா அதிபரினால் இந்தத் தரமுயர்வு மேற்கொள்ளப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## மெய்வல்லுநர் போட்டி

(கிளிநொச்சி)

கிளி.வட்டக்கச்சி தெற்கு அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று பாடசாலை மைதானத்தில் பி.ப. 2.00 மணிக்கு நடைபெறவுள்ளது.

பாடசாலை அதிபர் ஆ.உதயனன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக ஆரம்பக் கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் சி.கணேசலிங்கம் கலந்துகொள்ளவுள்ளார். (45)

## விடுமுறை வழங்க அரசு கோரிக்கை

(கொழும்பு)

மகா சிவராத்திரிக்கு மறுநாளான 11 ஆம் திகதி திங்கட்கிழமை இந்துப் பாடசாலைகளுக்கு விசேட விடுமுறை வழங்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாட்டு அமைச்சர் வாசுதேவ நாணயக்காரவே ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ விடம் இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளார்.

அன்று வழங்கப்படும் விசேட விடுமுறைக்கு பதிலாக மார்ச் 16 ஆம் திகதி சனிக்கிழமை இந்து பாடசாலைகளின் கல்வி நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் அவர் சிபாரிசு செய்துள்ளார்.

# மத்தல விமான நிலையம் அடுத்த வாரம் திறப்பு



(கொழும்பு)

இரண்டாவது சர்வதேச விமான நிலையமான மத்தல ராஜபக்ஷ சர்வதேச விமான நிலையம் இம்மாதம் 18 ஆம் திகதியன்று ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவினால் சம்பிரதாயபூர்வமாக திறந்து வைக்கப்படும் என்று சிவில் விமான சேவை அமைச்சர் பிரியங்கர ஜயரத்ன தெரிவித்துள்ளார்.

2015 ஆம் ஆண்டளவில் மத்தல ராஜபக்ஷ சர்வதேச விமான நிலையமும், கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையமும் ஒரே அமைப்பின் இரு அங்கங்களாக செயற்படும். நாட்டின் உல்லாசப் பயணத்துறை, வர்த்தகம் ஆகிய அனைத்தையும் அபிவிருத்தி செய்வதற்கு ஏற்ற வகையில் உலகில் உள்ள சகல வசதிகளையும் கொண்ட தரமான சர்வதேச விமான நிலையங்களாக இரண்டு விமான நிலையங்களும் மாற்றப்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

மேலும் மத்தல ராஜபக்ஷ சர்வதேச விமான நிலையத்தின் ஊடாக வருடமொன்றுக்கு 10 இலட்சம் உல்லாசப் பயணிகள் வருவார்கள் என்பதனால், அவர்களுக்கான சகல கட்டமைப்பு வசதிகளும் இப்போது ஏற்படுத்தப்படுகின்றன. இந்த விமான நிலையத்தில் ஒரே நேரத்தில் 10 பாரிய விமானங்களை நிறுத்தி வைக்கக்கூடிய வசதியும் இருக்கின்றது.

அத்துடன் வருடமொன்றுக்கு 45 ஆயிரம் மெற்றிக் தொன் பொதிகளை ஏற்றுமதி செய்வதற்கான உட்கட்டமைப்பு வசதிகளும் செய்யப்பட்டுள்ளன.

# பழைய பாடத் திட்டத்தில் சட்டக் கல்லூரிப் பரீட்சை

(கொழும்பு)

சட்டக்கல்லூரி தேர்வுக்கான 2013 ஆம் ஆண்டு பரீட்சை பழைய பாடவிதானங்களுக்கு அமைவாகவே நடாத்தப்படும் என சட்டக் கல்லூரி அதிபர் பேராசிரியர் டபிள்யூ.டீ.ரொட்றிகோ தெரிவித்துள்ளார்.

2012 ஆம் ஆண்டு நடைபெற்ற சட்டக் கல்லூரி தேர்வுக்கான பரீட்சையில் முறைகேடுகள் நிகழ்ந்ததை தொடர்ந்து வெட்டுப்புள்ளிகளை குறைக்க சட்டக் கல்லூரி நிர்வாகம் தீர்மானித்தது.

இதன் மூலம் சட்டக் கல்லூரிக்கு தெரிவாகும் மாணவர்களின் எண்ணிக்கை 309 இலிருந்து 551 ஆக அதிகரிக்கும் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2013 மார்ச் 08 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.